
கோகுலம்

GOKULAM


ஜூலை '90 ரூ. 3/-



எந்த வயதில் இசை பயிலலாம்?



Visesh/NC/8940/Tam



கோகுலம்

1990 ஜூலை மாத இதழ்
மலர் 8 ○○ இதழ் 6

அன்புத் தம்பி, தங்கைகளே!

புது வகுப்புக்குள் அடியெடுத்து வைத்திருக்கும் அத்தனை தம்பி தங்கைகளுக்கும் என் அன்பு வாழ்த்துக்கள். தோல்வியை வெற்றிப் படியாகக் கொண்டு, துவளாமல் நிமிர்ந்து நிற்க மற்றவர்களுக்கு ஆறுதல்கள்.

வெற்றியின் உற்சாகமோ, தோல்வியின் சோர்வோ எந்த விதத்திலும் உங்கள் சுயமுன்னேற்றத்தை பாதித்து விடக்கூடாது. அதற்கு நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிகள் யாவை?

'அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம்' என்கிறார் பாரதியார். இந்த மூன்றும் கைவரப் பெற்றால் நீங்கள் தொட்டது துலங்கும்; தொடர்வது வெற்றியாய் விளங்கும்.

பாரதியார் குறிப்பிட்டுச் சொன்ன இந்த மூன்று குறிக்கோள்களிலே முக்கியமானது அந்த மூன்றாவது வெள்ளம்தான். ஆமாம், அகத்திலே அன்பினோர் வெள்ளம்.

காசா பணமா? மலர்ந்த முகம், கனிந்த பேச்சு, பாசம், பரிவு, பச்சாதாபம் காட்டுதல், குறை தவிர்த்து நிறை காணும் பெரும் போக்கு, தன்னல மறுப்பு, பெரியோரிடம் மரியாதை — இப்படியெல்லாம் —

அகத்திலே அன்பு வெள்ளம் ஊற்றெடுத்தால் போதும், அறிவிலே தெளிவுண்டாகும்; நெஞ்சிலே உறுதி பிறக்கும். அகத்திலே அன்பிருந்தால் உலகத்தை நீங்கள் நேசிப்பீர்கள்; உலகம் உங்களை நேசிக்கும். அப்புறம் எடுத்த காரியம் யாவினும் வெற்றிதான்!

இன்னொன்று: நீங்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறையிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நம்புங்கள். சுய முன்னேற்றத்துக்கு வழிகோலுவதையே தன் தொண்டாகக் கொண்ட மேனாட்டுப் பேரறிஞர் நார்மன் வின்சென்ட் பீல், இரவில் படுக்கு முன்னரும் காலையில் கண் விழித்ததும் கீழ்க்காணும் மந்திரத்தை மனமார ஏற்றுக் கொண்டு சொல்லும்படி போதித்திருக்கிறார்:

Every day in every way
I'am getting better and better

'ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறையிலும்
நான் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருக்கிறேன்.

— இதைச் சொல்லும் போது அன்று புதிதாய் என்ன கற்றுக் கொண்டீர்கள், அல்லது என்ன கற்கப் போகிறீர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். அதுவே உங்களது முன்னேற்றப் படிகளாய் அமையும்.

அன்பு அண்ணன்,

தேசபந்து

(கௌரவ ஆசிரியர்)





உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

இந்த இதழில்

பக்கம்

புது வகுப்பில்

பள்ளிக்கூடம் திறந்தாச்சு. புது வகுப்பு எப்படி இருக்கிறது? வருடாந்திர விடுமுறையில் புது வகுப்பைப் பற்றி என்னென்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள், எதிர்பார்த்தீர்கள்? எதிர்பார்த்தாற்போல புது வகுப்பு அனுபவம் இருக்கிறதா?

சில சிறுவர்களிடம் கேட்ட போது —

பி. சுப்பிரமணியன் (மஹேஷ்):

நான் பத்தாம் வகுப்பிலிருந்து ப்ளஸ் ஒன் வகுப்புக்குப் போயிருக்கிறேன். எனக்குப் பிடித்த பாடங்கள் கெமிஸ்ட்ரி, பிஸிக்ஸ். இந்த இரண்டிலும் 'ப்ராக்டிகல்' உண்டு. இதுவரை சோதனைச் சாலைக்குப் போய் அந்த விஞ்ஞானப் பாடங்களைப் பயிற்சி முறையில் கத்துக்கலியேன்னு எனக்கு ஏக்கமா இருந்திச்சு. இப்ப ஜாலி. 'லேப்' பாட அனுபவங்கள் ரொம்பவும் இன்டரஸ்டிங்கா இருக்கும். இன்னும் எங்களுக்கு அந்தப் பாடங்கள் ஆரம்பிக்கலே. ஆனாலும் ரொம்ப ஆவலா எதிர்பார்த்துக் காத்துக்கிட்டிருக்கேன். அது மட்டுமல்ல, ப்ளஸ் ஒன் நான் படிக்கறது இப்ப வேறே ஸ்கூல்லே. புது நண்பர்கள், புது ஆசிரியர்கள், பழகாத புதுச் சூழ்நிலை. ரொம்ப ரொம்ப இன்டரஸ்டிங்கா இருக்கு. நான் ப்ராக்டிகல் படிப்புக்காக ஏங்கிக்கிட்டிருந்தது போலவே இந்தியை இப்ப இரண்டாவது பாடமா எடுத்துக்கிட்டிருக்கறதும் நான் ஆசைப்பட்டதுதான். பத்து வகுப்பு வரை தமிழை இரண்டாம் மொழிப் பாடமாப் படிச்சு. தமிழைச் சரளமா எழுதவும் படிக்கவும் கத்துக்கிட்டேன்; இப்ப இந்தியை இரண்டாம் மொழிப் பாடமா எடுத்துக்கிட்டிருக்கேன். ஏற்கெனவே வெகேஷன்லே நான் தனியா இந்தி கிளாஸுக்குப் போயிட்டிருந்தேன். அதையும் தொடர்ந்தாப்பல இருக்கும். மொத்தத்திலே புது வகுப்பு நான் எதிர்பார்த்ததையும் விட ரொம்ப ரொம்ப



பி. சுப்பிரமணியன் (மஹேஷ்)

பள்ளிக்கு மக்கு!

பி. ஆர். பார்த்தசாரதி

கந்தன் வாழ்க்கையே வெறுத்தது போல் இருந்தான்.

ஏழாம் வகுப்பில் பாஸ் ஆகவில்லை. கணக்கில் வீக்... இங்கிலீஷ் அரை குறை... போதாக்குறைக்கு ஆசிரியர் வேறு இவன் தப்புச் செய்யும் போதெல்லாம் கண்டிப்பதுமாகவே இருந்தார். அளவுக்கு அதிகமாக அவன் தவறு செய்யும் போது 'மரமண்டை' என்று கிள்ளுவார். பள்ளிக்கூடம் என்றாலே அலர்ஜியாகி விட்டது கந்தனுக்கு.

பள்ளிக்குப் போகும் போதும் வரும் போதும் பல மாடிக் கட்டிடம் கட்டும் இடத்தைப் பார்த்துக் கொண்டே செல்வான் கந்தன்.

இவன் வயதுச் சிறுவர்கள் வடையும் டீயும் சாப்பிட்டுக் கொண்டு, ஒருவருக்கு ஒருவர் தமாஷாகப் பேசிக் கொண்டு வேலை செய்வதைப் பார்த்துள்ளான்.

நிறையப் படித்தவர்கள் கூடப் படித்து முடித்து விட்டு வேலைக்குத் திண்டாடுவதையும் அவன் பார்த்துள்ளான்.

கந்தனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. 'நாமும் அந்தக் கட்டிட வேலைக்குப் போனால் என்ன? சம்பளமும் கிடைக்கும். வடை, டீயும் கிடைக்கும். நாள் முழுவதும் கட்டிப் போட்ட மாதிரி பள்ளிக்கூடத்தில் இருந்து கொண்டு ஆசிரியரிடம் அடிபடுவதை விட இது மேல்' என்று எண்ணினான் அவன்.

அம்மாவிடம் சொன்னால் மறுத்து விடுவார்கள். குடிகார அப்பா கட்டாயம் சந்தோஷப்படுவார். குடிக்க அவருக்குக் காசு தாராளமாக இவன் மூலம் கிடைக்குமே! கண்டிப்பாக வேண்டாம் என்று சொல்ல மாட்டார்.

மறுநாள்.

கந்தன் நேரே கட்டிட மேஸ்திரியிடம் போனான். தனக்கு வேலை வேண்டும் என்று கேட்டான்.

'என்ன படிச்சிருக்கே',

'ஏழாவது'

'மேலே படிக்கல்லையா'

''அப்பா - அம்மா முடியாதவங்க. வருமானம் போதல்லே. அதான் வேலைக்கு வந்தேன்'' என்று துணிந்து ஒரு பொய்யைச் சொன்னான்.

அவன் மனது உறுத்தியது.

''பொய் சொல்லக் கூடாது பாப்பா'' என்று பாரதி பாடியது ஞாபகம் வந்தது.

கூடவே, பாடம் மூளையில் ஏறாததும் ஆசிரியர் 'மரமண்டை' என்று அழைத்துக் கிள்ளியதும் நினைவில் வந்தது.

தான் பொய் சொன்னதை சமாதானப்படுத்திக் கொண்டான்.

' சரி... சரி... நாளையிலேர்ந்து வேலைக்கு வா. பன்னிரெண்டு ரூபா சம்பளம். இரண்டு வேளை வடை, டீ கிடைக்கும்.'



• சிவாஜி

வது பாஸ் பண்ணின ஒரு பொண்ணு கிட்டேயிருந்து அவ படிச்ச முடிச்ச புக்ஸ் எல்லாம் வாங்கி ஒரு கிளான்ஸ் குடுத்தேன். புதுக் கிளாஸிலே அந்தப் பாடங்களைப் பத்திக் கொஞ்சம் விட்டுப் பார்த்தேன். எல்லாரும் அசந்துட்டாங்க. எனக்கு ஒரு பெருமையா இருந்தது. அதே மாதிரி லீவிலே நான் டி.வி.யிலே கின்னஸ் புக் ஆஃப் ஒல்டு ரிகார்டு, தி ஓர்ல்டு திஸ் வீக் புரோக்ராமெல்லாம் பார்த்திருந்தேன். அதை வெச்சுக் கிட்டுப் பசங்ககிட்டே அப்படி இப்படின்னு அளந்தேன். ஆனா, அவங்களும் அந்த ப்ரோக்ராமெல்லாம் பார்த்திருப்பாங்க போலிருக்கு. எங்களுக்கும் தெரியுமேன்னுட்டாங்க., அட, நம்ம பாச்சா இந்த விஷயத்திலே பலிக்கலியேன்னு வெட்கப்பட்டேன். ஆனா, புதுப் பாடங்களைப் பத்தின விஷயத்திலே அவங்களுக்கு முன்னால நான் இருக்கறதை நினைச்சுப் பெருமைப்பட்டேன். புது கிளாஸிலே புது அனுபவங்கள் ரொம்ப இன்டிரஸ்டிங்கா இருக்கு. வித்தியாசமா இருக்கு.

சிவாஜி:

ஏழாம் வகுப்பிலேயிருந்து எட்டாம் வகுப்புக்குப் போன ப்ரெண்ட்ஸையெல்லாம் என் வீட்டுகிட்டே இருக்கறவங்க போய்ப் பார்த்தேன். உங்களுக்குப் பாடம் நடத்தின டீச்சர்ஸ் (டீச்சர்னா லேடி மட்டும் இல்லே; வாத்தியாரும்தான்) பத்தி விசாரிச்சேன் — போன லீவ்ல. 'ஏண்டா விசாரிக்கறே?'ன்னு அவங்க கேட்டாங்க. 'நான் ஆறாவதிலேயிருந்து ஏழாவது போறேன். அந்த வகுப்புப் பாடம் நடத்தற டீச்சரெல்லாம் எப்படிப்பட்டவங்கன்னு இப்பவே தெரிஞ்சுக்கிட்டா எனக்குச் சௌகரியமா இருக்குமே'ன்னு சொன்னேன். அவங்களும் சொன்னாங்க. அவங்க சொன்னபடி பார்த்தா எல்லாருமே ரொம்ப ஸ்ட்ரிக்டா இருப்பாங்கன்னு தெரிஞ்சுது. கிளாஸ்ல வாலாட்டக் கூடாது; ஒழுங்கா வீட்டுப் பாடத்தை முடிச்சுட்டுப் போகணும்னு எனக்கு ஃப்ரெண்ட்ஸங்க அட்வைஸ் பண்ணினாங்க. அவங்க சொன்னது சரிதான். ஆனா அந்த டீச்சர்ஸ் அவ்வளவு ஸ்ட்ரிக்டா இருக்கறது எங்க நன்மைக்குத் தானேன்னு நான் தெரிஞ்சுக்கிட்டேன். ஏற்கெனவே அவங்களைப் பத்தித் தெரிஞ்சுக்கிட்டதனால நான் தயாராகவே இருந்தேன். மத்தவங்கள்ளாம் பாவம், ஆரம்பத்திலேயே நிறைய பனிஷ்மெண்ட் வாங்கினாங்க. நான் எல்லா வீட்டுப் பாடத்தையும் ஒழுங்கா, சிரத்தையா, முறையா பண்ணிடறேன். புது வகுப்பிலே டீச்சர்ஸ்கிட்ட 'நல்ல பையன்'னு பேர் வாங்கிட்டேன். அதை நிரந்தரமா நிலை நிறுத்திக்கணும்; அதுக்காக நான் கடுமையா உழைக்கப் போறேன்.

ஜே. விஜயஸ்ரீ:

ஏழாவதிலேயிருந்து எட்டாவது கிளாஸ் போயிருக்கேன் நான். என்னோட பழைய ஃப்ரெண்ட்ஸ்களே என் கூட வரணும்னு நான் ரொம்ப ஆசைப்பட்டேன். அதே மாதிரி அதே ஃப்ரெண்ட்ஸ் என் கூட என் செக்‌ஷன்லேயே வந்திட்டாங்க. ரொம்ப ஜாலியா இருந்தது. புது வகுப்புக்கு வந்தப் புறம் லீவிலே நான் மீட் பண்ணின ஃப்ரெண்ட்ஸோட எங்கெல்லாம் போனேன் — பீச், சினிமா — அப்படின்னு மத்தவங்ககிட்ட சொல்லி சந்தோஷப்பட்டுக்கிட்டேன். 'பரவாயில்லே நீங்க, பக்கத்துப் பக்கத்திலே



• ஜே. விஜயஸ்ரீ


இருக்கறதனால, லீவுலே கூட தினமும் மீட் பண்ணிக்கலாம்'னு மிச்ச ஃப்ரெண்ட்ஸ் சொன்னாங்க. 'அதனால என்ன, உங்க கூட இப்ப மீட் பண்ணிக்கலாமே'ன்னு அவங்ககிட்ட சொன்னேன். அதே மாதிரி புது ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்கெல்லாம் போய், அவங்களையும் என் வீட்டுக்கு வரச் சொல்லி நல்லா பழகிட்டேன். ஒவ்வொருத்தர் கிட்டேயிருந்தும் ஏதேனும் புதுப் புது விஷயங்களைத் தெரிஞ்சுக்க இந்தப் பழக்கம் ரொம்ப உதவியா இருக்கு. புது வகுப்பில் புதுப் புது விஷயங்களைத் தெரிஞ்சுக்கறது பாடங்களைத் தவிர — சுவையான அனுபவம் தானே!

படங்கள், பேட்டி: பிரபுசங்கர்

அதிசயப் பறவை பெங்குவின்


ஆழி

பசிபிக்- அண்டார்டிக் தீவுகளிலும், நியூஸிலாந்து, ஆஸ்திரேலிய, தென் அமெரிக்கா ஆகிய இடங்களில் பெங்குவின் பறவைகள் வாழ்கின்றன. பறக்க முடியாத பறவைகளில் பெங்குவினும் ஒன்று. இவற்றில் பல பிரிவுகள் இருக்கின்றன.





மிகப்பெரிய இனமான எம்பரர் பெங்குவின். 3½ அடி உயரம்.... .... மிகச்சிறிய இனமான நீலப் பெங்குவின் 1½ அடி உயரம் இருக்கும்.



பெங்குவின் பறவைகள் ஒன்றை ஒன்று விரும்பிய பின், ஒன்றுக்கொன்று கூழாங்கற்களை அன்பளிப்பாகக் கொடுத்துக்கொள்ளுகின்றன!




ஆண் பறவைதான் கற்பாறைகளில், சிறு சிறு கூழாங்கற்களைக் கொண்டு கூடு கட்டும். பெண் பறவை அதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும்!




பெண் பறவை இரண்டு முட்டைகள் இடும். முட்டை 10 செ.மீ.குறுக் களவும், ஒரு பவுண்டு எடையும் இருக்கும்.



முட்டை இட்டதும் பெண் பறவை அந்தச் சந்தோஷத்தில் அந்தப் பகுதியே கிடுகிடுக்கும்படி உரத்த குரலில் கத்தும்!



அத்துடன் சரி. பிறகு, பெண்பறவை 'இறக்கையை வீசிக்கொண்டு' கிளம்பிவிடும்! திரும்பிவருவதற்கு இரண்டு மாதங்களாகும்!



பாவம், ஆண் பறவை தான் அடைகாக்கும்! முட்டையிலிருந்து குஞ்சு வெளிவர இரண்டு மாதங்கள் ஆகும். அதுவரை ஆண் பறவை இரை ஏதும் சாப்பிடாமல், செல்லாமல், அடை காத்துக் கொண்டிருக்கும். அதன் உடலில் உள்ள கொழுப்புச் சத்து தான் அதைக் காக்கிறது!


உடலையும் எடையையும் ஒப்பிடும்போது, பறவைகளில் மிகவும் கனமான பறவை பெங்குவின்தான். மூன்று அடி உயரம் உள்ள ஒரு பறவை 60 முதல் 70 பவுண்டு வரை இருக்கும். அடைகாத்து முடிந்ததும், ஆண் பறவை தன் எடையில் மூன்றில் ஒரு பங்கை இழந்துவிடும்!







பெங்குவின்கள் ஆயிரக்கணக்கான தங்கள் பறவைக் கூட்டத்திலும்—இரண்டு மாத இடைவெளிக்குப் பிறகும்—குரலைக் கொண்டே தங்கள் ஜோடிகளைக் கண்டுபிடித்து விடுகின்றன!

பெண் பெங்குவின், தன் மீன் உணவை மாவுபோல் மென்று, தன் தொண்டையில் அடக்கிக்கொண்டு வந்து, குஞ்சின் எதிரே நின்று வாயைத் திறந்து கொள்ளும். குஞ்சு, தன் அலகைப் பறவையின் வாய்க்குள் நுழைத்துத் தொண்டையில் இருக்கிற இரையைக் கொத்தித் தின்னும்!








உடலில் கொழுப்புச்
சத்து அதிகம் உள்ள
பறவை பெங்குவின்.
பெங்குவின் பறவை
களிலிருந்து
எண்ணெய் எடுக்
கிறார்கள்.





'நிலா நிலா ஓடி வா... நில்லாமல் ஓடி வா...'
என்று பாடிக் காலம் காலமாக நாம் அழைக்கிறோம். ஆனால் அந்த நிலா வருவதாக
இல்லை. 'அது வராவிட்டால் என்ன? நாம் அங்கு போய்ப் பார்ப்போமே!'
என்று நினைத்த அமெரிக்க விஞ்ஞானிகள், அதற்கான
ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அவர்களது முயற்சி வெற்றி பெற்றது.
1969 ஜூலை 21 — ஆம் நாள், மனிதன் முதன் முதலாக,
நிலவுத் தரையில் தனது பாதத்தைப் பதித்து விட்டான்!
அந்த முதல் மனிதன் யார்? அவர் எப்படிச் சென்று
அங்கு இறங்கினார்? அதன் பிறகு என்ன ஆயிற்று?
இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இதோ விடை:


நிலவில் இறங்கிய முதல் மனிதர்

ஜானகி மணாளன்

நிலவில் கால் ஊன்றிய அந்த முதல் மனித்ன் நீல் ஆம்ஸ்ட்ராங். அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி வீரர்! அவர் நிலவுத் தரையில் வைத்தது ஒரு சாதாரண சிறிய காலடி தான். ஆனால், மனித இன வளர்ச்சியில் அது ஒரு மாபெரும் சாதனை! ஒரு காலகட்டத்திலிருந்து இன்னொரு காலகட்டத்துக்கு நடந்த மிகப் பெரும் தாவல். 'One small step for a man, one giant leap for mankind.' —— நீல் ஆம்ஸ்ட்ராங் தனது பாதத்தை நிலவுத் தரையில் பதிய வைத்ததும், இந்தச் செய்தியைத் தான், உலக மக்களுக்கு அங்கிருந்து அனுப்பினார். அவர் நிலவுத் தரையில் காலடி வைத்து நடந்ததை, நாம் தொலைக் காட்சியில் பார்த்தோம். வானொலியில் அவரது செய்தியைக் கேட்டோம்! அமெரிக்க நாட்டு விஞ்ஞானிகளின் அந்தச் சாதனையைப் புகழ்ந்தோம்!

நாம்வசிக்கும்இந்தப்பூமியிலிருந்து சந்திரன் ஏறத்தாழ நான்கு லட்சம் கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அதில் மனிதனை இறங்கச் செய்யும் 'அப்போலோ' ஆய்வுத் திட்டத்துக்கு வழி வகுத்தவர், அந்நாட்டு முன்னாள் குடியரசுத் தலைவர் ஜான் எஃப் கென்னடி தான். அதற்கான நிதியை ஒதுக்கி, 1962 மே 25 ஆம் நாள் உரையாற்றும் போது, ''அந்தப் பத்து ஆண்டுகள் முடிவதற்குள் மனிதனைச் சந்திரனில் இறக்கி, நலமுடன் அவரைப் பூமிக்குத் திரும்ப அழைத்து வருவதுதான் அமெரிக்காவின் குறிக்கோள்,'' என்று அறிவித்தார்.

அந்தக் குறிப்பிட்ட காலத்துக்குள்ளேயே, 1969 ஜூலை 21 ஆம் நாள், அமெரிக்கா அச்சாதனையைப் புரிந்து விட்டது!




* விண்ணில் செலுத்தத் தயார் நிலையில் அப்போலோ - 11

சந்திரனை எட்டிப்பிடிக்க அவர்கள் பயன்படுத்தியவிண்கலங்களுக்கு, 'அப்போலோ' என்று பெயர். கென்னடியின் அறிவிப்பு வெளிவருவதற்கு முன்னமேயே, அமெரிக்கா அம்முயற்சிக்கான அஸ்திவாரத்தை இட்டிருந்தது. அம்முயற்சி ஓரளவு வெற்றி நடையும் போட்டு வந்தது. 1958 இல் அமெரிக்கா தனது முதல் துணைக்கோளை ஏவியது. அதற்கு, 'எக்ஸ்ப்ளோரர் — I' என்று பெயர். அடுத்த மூன்று ஆண்டுகளில், பல துணைக்கோள்களை வெற்றிகரமாக ஏவியது. 1959 இல் 'ஆலன் ஷார்ப்' என்பவர் பூமியை வலம்வந்தார். 1962 பிப்ரவரி 20 ஆம் நாள், 'ஜான் க்லோன்' என்பவர் நான்கரை மணி நேரம் பயணம் செய்து, பூமியை மும்முறை வலம் வந்தார். அதன் பிறகு, 'மெர்குரி' என்ற கலம் மூன்று தடவை பயணம் செய்தது. மூன்றாவது தடவையில் 'கார்டன் கூப்பர்' என்பவர் 34 மணி நேரத்தில் பூமியை 22 தடவை வலம் வந்தார். இவையெல்லாம் மனிதனைச் சந்திரத் தரையில் இறக்குவதற்கான முன்னோடி நடவடிக்கைகள். அதையடுத்த 20 மாதங்களில், இரண்டிரண்டு பேராக, அடுத்தடுத்துப் பத்துத் தடவைகள் 'ஜெமினி' என்ற கலம்விண்ணில்பறந்தது. இவையெல்லாம் சாதாரணப் பயணங்கள். அவற்றுடன் கூடவே, துணைக்கோள் ஆராய்ச்சியும் தொடர்ந்தது.

ஏன் தெரியுமா? சந்திரனில் மனிதனை இறக்குவதும், நலமுடன் திரும்ப அழைத்து வருவதும் எளிய செயலல்ல. நன்கு திட்டமிட்டுத் துல்லியமாக நிறைவேற்ற வேணடும். எனவே, பல்வேறு ஆய்வுகளை மிக மிகக் கவனத்துடன் நிறைவேற்றினர்.

அப்போலோ திட்டத்தின் கீழ் 1968 அக்டோபரில் 'அப்போலோ — 7' என்ற கலம் விண்வெளியில் ஏவப்பட்டது. அதில் முதன் முதலாக மூன்று வீரர்கள் பயணம் செய்தனர். அடுத்த மூன்று மாதத்தில், 'அப்போலோ — 8' பூமியிலிருந்து கிளம்பி சந்திரனுக்கு 110 கிலோ மீட்டர் உயர அருகில் அதைச் சுற்றிவிட்டு, வெற்றிகரமாகப் பூமிக்குத் திரும்பியது. அது கென்னடி முனை என்ற இடத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டது. அங்கிருந்து அது கிளம்பும் போது, அங்கு சுமார் எட்டரை லட்சம் மக்கள் கூடி நின்று, அந்த அற்புதக் காட்சியைக் கண்டுகளித்தனர். அது பூமியிலிருந்து கிளம்பிப் பூமியைச் சுற்றிவிட்டுச் சந்திரனை நோக்கிச் சென்று அதைச் சுற்றி விட்டு, மீண்டும் பூமியை நோக்கித் கொண்டு தரையில் இறங்கியது.

1969 மே 18 அன்று, சந்திரனில் மனிதன் இறங்குவதற்காக ஒத்திகைப்



* நீல் ஆம்ஸ்ட்ராங் சந்திர மண்ணை எடுக்கிறார்


பயணம் சென்றது. அப்போது சென்ற கலத்துக்கு அப்போலோ — 10' என்று பெயர். அது சந்திரனை அதன் தரையிலிருந்து 9 மைல் உயரத்தில் சுற்றி விட்டுத் திரும்பியது

அடுத்த பயணம்தான், வரலாற்றுச் சிறப்புமிக்க, மனிதன் சந்திரனில் காலடி பதித்த பயணம்! அதற்கு அப்போலோ — 11' என்று பெயர். 1969 ஜூலை 16. புளோரிடா கடற்கரையில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து ராக்கெட் கிளம்பியது. அதில் இருந்த முக்கிய கலத்துக்கு 'கொலம்பஸ்' என்று பெயர். அதில் மூன்று வீரர்கள் பயணம் செய்தனர். அவர்கள் மைக்கேல் காலின்ஸ், எட்வின் ஆல்ட்ரின்,

நீல் ஆம்ஸ்ட்ராங் ஆகியோர்.

ராக்கெட் சந்திரனை நெருங்கியதும், மைக்கேல் காலின்ஸ் மட்டும் கொலம்பஸ் கலத்திலேயே தங்கிச் சந்திரனைச் சுற்றினார். அந்தக் கலத்துடன் இன்னொரு சிறிய கலம் இருந்தது. அதற்கு 'ஈகிள்' என்று பெயர். அதை 'சந்திர மாட்யூல்' என்போம். எட்வின் ஆல்ட்ரினும், நீல் ஆம்ஸ்ட்ராங்கும் அந்த 'ஈகிள்' கலத்துக்குள் சென்றனர். அது கொலம்பஸ் கலத்திலிருந்து பிரிந்து, அவ்விருவரையும் சுமந்து கொண்டு, மெல்ல மெல்லச் சந்திரனில் இறக்கியது. அதற்கு நான்கு நீண்ட கால்கள் உண்டு. அவை சந்திரத் தரையின் மேடு பள்ளங்களுக்கு ஏற்பத் தாமாகவே நீண்டு கொள்ளும் அல்லது குறுகிக் கொள்ளும். எனவே அந்த வாகனம் எளிதில் கவிழ்ந்து விடாது. இருந்தாலும் அது இறங்கப் போன இடத்தில் மிகப்பெரிய படுகுழி இருந்தது. கிரேட்டர் என்று பெயர். அது போன்றவை விண்ணிலிருந்து எரிகற்கள் விழுவதால் ஏற்படுபவை. பூமியில் அத்தகைய கற்கள் விழாது. ஏனெனில் நம் பூமியைச் சூழ்ந்துள்ள வாயு மண்டலம் அவற்றை எரித்துவிடும். சந்திரனைச் சூழ்ந்து வாயுமண்டலம் கிடையாது. எனவே அவை எரிக்கப்படாமல் சந்திரத் தரையில் 'பொத்' தென்று விழுவதால், அத்தகைய படுகுழிகள் அங்கு அதிகம். அவற்றில் ஒன்று தான் அது!


° சந்திர மண் சேகரிக்கப்படுகிறது



நல்ல வேளையாக அதில் ஈகிள் இறங்கிக் கவிழ்வதற்குள் ஆம்ஸ்ட்ராங் அதைப் பார்த்து விட்டார். வாகனத்தைச் சற்று விரைவாகச் செலுத்தி, அதில் விழாமல் சற்றுத் தூரத்தில் பத்திரமாகத் தரை இறக்கினார். அவ்வாறு அது இறங்குவதையெல்லாம் மேலே கொலம்பசில் சந்திரனைச் சுற்றிக் கொண்டிருந்த மைக்கேல் காலின்ஸ் கண்காணித்துக் கொண்டிருந்தார். அதிலிருந்த காமிராக்கள் அவ்விடத்துப் பல்வேறு காட்சிகளைப் படம் பிடித்து, உடனுக்குடன் பூமிக்கு அனுப்பிக் கொண்டிருந்தன.

பிறகு, ஆம்ஸ்ட்ராங் ஈகிளிலிருந்து வெளி வந்து, அதில் இணைக்கப்பட்டிருந்த ஏணி வழியாக மிகமிக நிதானமாக இறங்கி, நிலவுத் தரையில் முதல் மனிதப் பாதச் சுவடாகத் தமது காலடியைப் பதித்தார். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அற்புதக் காட்சியைப் பூமியிலிருந்து, அப்போது தொலைக்காட்சி வசதி பெற்றிருந்த உலக நாட்டினர் யாவரும் கண்டு ரசித்தனர். சந்திரனிலிருந்து முதன் முதலாக அவர் பேசியதை உலக நாடுகளின் வானொலி ஒலி பரப்பியது.

ஆம்ஸ்ட்ராங் இறங்கிய சற்று நேரத்துக்கெல்லாம் எட்வின் ஆல்ட்ரின் ஈகிளிலிருந்து, அதே போலச் சந்திரத் தரையில் இறங்கினார். இருவரும் 2 மணி, 36 நிமிடம் 17 நொடி நேரம் சந்திரத் தரையில் அங்குமிங்கும் நடந்து பல்வேறு அறிவியல் பணிகளைச் செய்தனர். பல தானியங்கி உபகரணங்களையும் அமைத்தனர். அவை, அவர்கள் பூமிக்குத் திரும்பிய பிறகும் அங்குள்ள நிலைமைகளைப் பூமிக்கு அனுப்பின. லேசரால் இயங்கும் சாதனம் ஒன்றையும் அங்கு அமைத்தனர். அது பூமியி



நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின், கேல் காலின்ஸ்

லிருந்து கிடைக்கும் லேசர் கிரணங்களைப் பெற்றுப் பூமிக்குப் பதில் தகவல்களை அனுப்பும். அதன் மூலம் பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள இடை தூரத்தைத் துல்லியமாக அறிய முடியும். எவ்வளவு தெரியுமா? 3 லட்சத்து 65 ஆயிரத்து, 192.2 கிலோ மீட்டர். பின்னர் கிட்டத்தட்ட 50 பவுண்டு சந்திரத் தரையின் மணலையும் பாறை மாதிரிகளையும் சேகரித்துக் கொண்டார்கள்.

சந்திரத் தரையில் வேறொரு பணியையும் அவர்கள் செய்தனர். என்ன தெரியுமா? பூமியிலிருந்து யார், எதற்கு அங்கு வந்தார்கள் என்று பிற்பாடு வேறு கிரகத்தினர் எவர் அங்கு வந்தாலும், அவர்களுக்குத் தெரிய வேண்டாமா? எனவே, நினைவுச் சின்னமாக அமெரிக்க நாட்டின் தேசியக் கொடி ஒன்றை அங்கு நிறுவினர்.

அடுத்ததாகத் தாம் அங்கு இறங்குவதற்குப் பயன்பட்ட ஏணியுடன் ஒரு பெரிய உலோகத் தகட்டை இணைத்தனர். அந்தத் தகட்டில் அவர்கள் எதற்காக அங்கு வந்தார்கள் என்ற விவரம் ஆங்கிலத்தில் செதுக்கப்பட்டிருந்தது. "Here men from yhe planet earth first set foot upon the moon... We came in peace for all mankind." அதாவது பூமிக் கிரகத்திலிருந்து மனிதர்கள் சந்திரத் தரையில் முதன் முதலாக இங்கு பாதம் பதித்தார்கள்... மனித இனத்தின் அமைதிக்கென நாங்கள் வந்தோம்.'

பின்னர் இருவரும் ஏணி வழியாக ஏறி மீண்டும் ஈகிளுக்குள் வந்தனர். அந்த ஈகிள் வாகனம் சந்திரத் தரையில் 22 மணி நேரம் தங்கியிருந்தது. பிறகு அங்கிருந்து கிளம்பி, மேலே சந்திரனைச் சுற்றிக் கொண்டிருந்த முக்கிய கலமான கொலம்பசுடன் இணைந்து கொண்டது. வெற்றி வீரர்கள் இருவரும் கொலம்பசில் இருந்த மைக்கேல் காலின்சுடன் சேர்ந்து கொண்டனர். பின்னர் ஈகிளைச்

சந்திரத் தரையிலேயே போட்டுவிட்டு, அவர்களது ராக்கெட் வந்த விதமாகவே பூமிக்குத் திரும்பிவிட்டது.

ஜூலை 24 ஆம் நாள் அவர்கள் மீண்டும் பூமியில் வந்து இறங்கினார்கள். இங்கு அவர்களுக்குப் பிரும்மாண்டமான வரவேற்புக் கொடுக்கப்பட்டது. சில நாட்கள் மருத்துவ சோதனைகளுக்குப் பிறகு, அவர்கள் சகஜவாழ்வை மேற் கொண்டனர். பின்னர் அம் மூவரும் உலக நாடுகள் பலவற்றுக்குச் சுற்றுப் பயணம் செய்தனர். பம்பாயில் நாம் அவருக்கு மிகப்பெரிய வரவேற்புக் கொடுத்தோம்.

அவர்கள் கொண்டு வந்திருந்த மண் மாதிரிகளை விஞ்ஞானிகள் பகுத்து ஆய்வு செய்தனர். அப்பணியில் தேவேந்திரலால், கே. கோபாலன் என்ற நம் நாட்டு விஞ்ஞானிகள் இருவரும் கூடச் சேர்ந்து கொண்டனர். சந்திரனின் பாறைத் துண்டுகள் உலகின் பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இந்தியாவுக்கும் ஒரு துண்டு வந்தது. அதை அப்போதய குடியரசுத் தலைவர் வி.வி. கிரி, பிரதமர் இந்திரா காந்தி உள்ளிட்ட லட்சக்கணக்கான இந்திய மக்கள் மிகுந்த ஆவலுடன் சென்று பார்த்து மகிழ்ந்தனர்.

தொடர்ந்து எத்தனை வகையான விண்வெளி ஆய்வைச் செய்தாலும் சரி. நிலவுக்கு மனிதனை அனுப்பி அதன் மூலம் பெற்ற அனுபவங்களை முன்னோடியாக வைத்துக் கொண்டு தான், மற்ற ஆய்வுகளைச் செய்ய வேண்டும். ஆகவே, நிலவில் மனிதன் முதன் முதல் பாதம் பதித்த நிகழ்ச்சியை நாம் என்றென்றும் மறந்து விட முடியாது. அந்நிகழ்ச்சியை மட்டுமல்ல. அந்நிகழ்ச்சி நடந்த ஜூலை 21 ஆம் நாளைக் கூடத்தான்!

எந்த வயதில் இசை பயிலலாம்?

இசைக்கு மகத்தான ஆற்றல் உண்டு என்பதை அறிவியல் உலகம் ஒப்புக் கொண்டுள்ளது. இசை, பயிர் விளைச்சலைத் துரிதப்படுத்தும் என்பது அறிவியல் அடிப்படையில் செய்து காட்டப்பட்டுள்ளது. கொந்தளிக்கும் மனத்தை அமைதிப்படுத்தவும், அலைபாயும் மனத்தைக் கட்டுப்படுத்தி ஒருமுகச் சிந்தனையில் சாதனை புரியவும் உதவுவது இசை.

'பாடத் தெரியாதவனைப் பாவி' என்று இகழும் அளவுக்கு இசை மனிதனின் வாழ்வில் இடம் பெற்றுள்ளது. இதன் அருமையை உணர்த்தத்தான் முத்தமிழில் இசைக்கு நடு இடம் தந்துள்ளார்கள்.

கொடிய செயல்களைப் புரிந்தவர்கள் பலரும் இசை பாடவோ, இசையை அனுபவிக்கவோ அறியாதவர்கள் என்பதைப் பல தகவல்கள் நிரூபிக்கின்றன. மனித மனத்தைப் பண்படுத்த வல்ல மகத்தான ஆற்றல் இசைக்கு உண்டு என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

அஞ்சல் மூலம் படிக்க இயலாத அருங்கலைகளுள் ஒன்று இசை. காதில் வாங்கி, மனத்தில் பதித்து, வாயால் பாடி, குருவால் திருத்தப்பட்டு முன்னேறுவதே சிறந்த இசைப் பயிற்சி.

படிக்கக் கற்கு முன்பேகூட இசைப் பயிற்சி தொடங்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் குரல் வசப்படும். அது மட்டுமல்ல; பாடும்போது உள்ளம் ஆனந்தப் பரவசம் அடைகிறது. குழந்தைகளுக்கு மகிழ்ச்சிதானே முக்கியம்!

நமது பாரம்பரியமான கர்நாடக சங்கீதத்தில் இசையோடு இறை உணர்வும் இரண்டறக் கலந்திருக்கிறது. தாளக் கணக்கும் சேர்ந்திருக்கிறது. பாடலின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு பாவத்தோடும் பக்தியோடும் பாடினால் அதற்கு ஈடு இணையே கிடையாது. இன்றைக்கு முன்னணி வரிசையில் உள்ள மூத்த இசைக் கலைஞர்களுள் பலர் சிறு வயதிலேயே பாட்டுக் கற்கத் துவங்கியவர்கள்தான்.



அட்டையில் — ஆறு வயதிலேயே பாட்டுக் கற்கத் துவங்கிவிட்ட சிறுமி எஸ். ஹரிணி. வண்ணப்படம்: உத்ரா.




டைனம் கிட்ஸின் உதவியுடன் பாட்டி கூடப் பாடம் நடத்தலாம்.



எஜிகேஷனல் வால்யூஸ்:


*தூரப்பார்வை உருவம், முப்பரிமாண உருவம், நேர்க்கோடு மற்றும் நேர்கோடு உருவம் இவற்றை நிர்மாணிக்க உதவுகிறது. பார்வை, செயல் இரண்டையும் நேர்முகப்படுத்தும் திறனை வளர்க்கிறது.

Price – Rs. 60/- + Rs. 20/- *




பார்வை/செயல் இவற்றை நேர்முகப்படுத்தும் பாவகத்தை வளர்க்கிறது.* அழகான, அலங்காரமான, உருவங்களை அமைக்க உதவுகிறது.* உண்டாக்கும் திறனை ஊக்குவிக்கிறது.

Price – Rs. 18/- + Rs. 10/-



வடிவம், வண்ணம், அளவு, தன்மை இவற்றைப் புரிந்துகொள்ள உதவுகிறது. கூட்டு முயற்சியை வளர்க்கிறது. பொருத்தம் சேர்ப்பு யோகத்தையும், மொழிவரிசையையும் வளர்க்கிறது. உருவாக்கும் திறனை ஊக்குவிக்கிறது.

Price – Rs. 84/- + Rs. 25/- *



வேகம், திசை இவற்றின் விசித்திரங்களை செயல்முறையாகக் கண்டுபிடிக்க உதவுகிறது. ஈர்ப்பு சக்தியின் காரண காரியங்களைக் கண்டுபிடிக்கும் ஆசையைத் தூண்டுகிறது.

Price – Rs. 50/- + Rs. 20/- *

(*வரிகள், கட்டும் செலவு, அனுப்பும் செலவு)

நாங்கள் பாட்டியின் அறிவையும் அனுபவத்தையும் மதிக்கிறோம்: விளையாட்டு முறையில் கல்வி கற்பிப்பதின் உபயோகத்தை 25 வருட அனுபவம் எங்களுக்கு உணர்த்தியிருக்கிறது.

டைனம் கிட்ஸ் குழந்தைகளுக்குள்ள கண்டுபிடிக்கும் திறமையைத் தூண்டிவிடுகிறது. மற்றும், இளம் உள்ளங்களில் ஒளிந்துகிடக்கும் படைக்கும் திறனை ஊக்குவிக்கிறது!

டைனம் கிட்ஸ் வளரும் குழந்தைகளின் சுயமாகக் கற்கும் திறனைக் கூட்டுவதில் தன்னையே அர்ப்பணிக்கிறது! வகுப்பறை நிலைமையிலும், கூட்டு முயற்சியிலும் கல்வி கற்கும் திறமையை வளர்க்கவும் உதவுகிறது டைனம் கிட்ஸ்.

டைனம் கிட்ஸ் உதவியுடன் விளையாடும் உங்கள் குழந்தையின் தன்னம்பிக்கை வளருவதை கவனியுங்கள்!

Dynam

எஞ்ஜினியரிங் கார்பொரேஷன்

138, சங்காதர செட்டி ரோட்,
பெங்களூர்-560 042.

ஆம்! எனக்கு .... கிட் (கிட்கள்) தேவை.
VPP என்னை வந்து சேரும்போது முழுத்தொகையும் செலுத்துவதாக உறுதி அளிக்கிறேன்.
பெயர்: ____________
விலாசம்: ____________

climb ads/DC/901

சொந்தங்கள்

நமக்குச் சொந்தமல்லாத பொருள்களை நாம் நமக்குச் சொந்தம் என்று எண்ணியும், சொந்தமென்று கூறியும் மதிமயங்கி நிற்கின்றோம்.

இந்த வீடு நம்முடையது என்கின்றோம். இதற்கு முன் எத்தனையோ பேர் இதனை என்னுடையது என்னுடையது என்று கூறினார்கள். நமக்குப் பின்னர் பலர் அவ்வாறு கூற இருக்கின்றார்கள். இந்த உலகங்கள் யாவும் இறைவனுடையவை. எல்லாவற்றையும் உடையவராதலின் இறைவனுக்கு உடையவர் என்ற பேருண்டு. எல்லாம் அவருடைய உடைமை! ''உடையானே'' என்றார் மணிவாசகர்.

நாம் விலைகொடுத்து நம் பேருக்குப் பதிவு செய்துள்ள நம் வீட்டில் வாழும் பல்லி, எலி, பூனை, எட்டுக்கால் பூச்சி முதலியவை அந்த வீட்டைத் தமக்குச் சொந்தமாகவே எண்ணுகின்றன. அதுபோல், எல்லாம் இறைவனுடைமையாக இருக்கவும் அவற்றை நம்முடையவை என்றெண்ணி மயங்குகின்றோம். என்னே நமது அறியாமை!

இனி, இந்த உடம்பும் நமக்குச் சொந்தமன்று. இந்த உடம்பு நமக்கு இறைவன் கொடுத்த ஒரு வாடகை வண்டி. இதில்ஏறி, நாம் பிரயாணம் பண்ணுகிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்தை நமக்கு அளவிட்டுக்கொடுத்துள்ளார். அக்கால எல்லைக்குள் நாம் முக்தியுலகை நாடிப் பிரயாணம் புரிய வேண்டும். பெரும்பாலோர் நமன் உலகை நாடியே போய்க்கொண்டிருக்கிறார்கள்.

இந்த உடம்பை நெருப்பு எனக்கென்றும், புழு எனக்கென்றும், மண் எனக்கென்றும். பருந்து எனக்கென்றும், நரி எனக்கென்றும், நாய் எனக்கென்றும் கூறுகின்றன. நாம் நம்முடையதென்று கருதி ஜபம், தவம், தியானம், ஆலய வழிபாடு முதலியன ஒன்றும் புரியாமல், வேளை தவறாமல் விலாப்புடைக்க உண்டு இந்த உடம்பை வளர்க்கிறோம்.

இந்த உடம்பு, செல்வம், வான், காற்று, கனல், புனல், மண் கதிர், மதி முதலியனவெல்லாம் இறைவனுடைய உடைமைகள். ஸ்வம் — சொத்து எல்லாவற்றையும் சொந்தமாக உடையவராதலின் 'ஸ்வாமி' யென்ற பெயரால் ஆண்டவரை அழைக்கின்றோம்.

முற்றுந் துறந்த முனிவர் ஒருவர் திருத்தல யாத்திரை புரிந்து வந்தார். பற்றற்ற பரம ஞானியாகிய அவர் இன்றிருந்த ஊர் நாளை இரார். ஒரு வேளையே உப்பில்லாத உணவை உண்பார். அவர் பொய்யை அதிகமாக வெறுப்பவர்.

'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரில் தலை'

என்ற திருக்குறளை இடையறாது கூறுவர். அவருடைய வாய் மறந்தும்



மீண்டு

திருமுருக
கிருபானந்த வாரியார்

பொய் புகலாது. அன்றியும், பொய் புகல்வார் மனையில் புசியார். இதனை மிகவும் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு ஒழுகினர்.

ஒருநாள் ஓர் ஊருக்குச் சென்றார். "இந்த ஊரில் உண்மையாளர் யாவர்?" என உசாவினார். "அதோ தெரிகின்ற மாடி வீட்டில் வாழ்கின்ற முதலியார் உண்மையாளர்; அடியார் பக்தியுடையவர்; ஒரு லட்சம் செல்வமும், நான்கு புதல்வரும் உடையவர்" என்று பலரும் பகர்ந்தார்கள். பின்னர்; முதலியாருடைய வீட்டை முனிவர் அணுகினார்.

ஆசனத்தில் அமர்ந்திருந்த முதலியார் உடனே எழுந்தார். ஓடி வந்து ஞானியார் அடிமலர் மீது விழுந்தார். அவரை ஆசனத்தில் எழுந்தருளல் புரிந்து, "பெருமானே! உணவு செய்ய எழுந்தருள வேண்டும்" என்று வேண்டினார். அவருடைய அன்பு அடக்கம் பணிவு முதலிய நற்குணங்களைக் கண்டு முனிவர் முக மலர்ந்து, உண்மையாளர்தானா என்று சோதித்தறிந்தபின்னரே உணவு செய்யவேண்டும் என்று எண்ணினார்.

"ஐயா! உமக்குச் செல்வம் எவ்வளவு உண்டு?"

"சுவாமி! இருபத்து இரண்டாயிரம் ரூபாயுண்டு.

"குழந்தைகள் எத்தனை பேர்?"

"சுவாமி! ஒரே புதல்வன்."

"உமக்கு என்ன வயது?"

"சுவாமி; எனக்கு வயது மூன்று வருஷம் ஐந்து மாதம் ஏழு நாள் பதினாறரை மணி."

முனிவருக்குப் பெருஞ்சினம் மூண்டது.

"ஐயா! நீர் சுத்தப் புளுகனாக இருக்கின்றீர். நீர் பேசுவதெல்லாம் பெரும் புரட்டு. உம் வீட்டு அன்னம் என் தவத்தையழிக்கும். நான் பொய்யார் வீட்டில் புசியேன்" என்று கூறிச் சீறி எழுந்தார்.

முதலியார் அவர் காலில் விழுந்து, "அருள் நிறைந்த அண்ணலே! அடியேன் ஒருபோதும் பொய் புகலேன்; சத்தியம் சொல்கின்றேன்; சற்று நிதானமாக ஆய்ந்து பார்த்து உண்மையுணர்வீராக" என்று கூறித் தமது வரவு செலவு புத்தகத்தைக் காட்டினார். அதில் இருப்புத் தொகை ஒரு லட்ச ரூபாய் என்றிருந்தது.

"அடேய்! இதோ உனக்குச் சொத்து ஒரு லட்சமென்றிருக்கிறதே, நீ இருபத்து இரண்டாயிரந்தான் என்று பொய் சொன்னாயே!" என்று கடிந்தார் முனிவர்.

"சுவாமி! ஒரு லட்ச ரூபாய் பெட்டியில் உள்ளது. ஆனால் பெட்டியில் உள்ள பணம் எனக்குச் சொந்தமாகுமா? இதோ பாருங்கள். தருமக் கணக்கில் இது காறும் இருபத்திரண்டாயிரமே செலவழிந்துள்ளது. தருமம் புரிந்த பணந்தானே என்னுடையது. இப்போது நான் மாண்டால் இந்தப் பெட்டியில் உள்ள பணம் என்னுடன்



வராதே. உடன் வருவது தருமம் ஒன்று தானே. ஆகவே எனக்குச் சொந்தம், தருமம் புரிந்த இருபத்திரண்டு ஆயிரந் தான்'' என்று கூறினார், முதலியார்.

முனிவர் இதைக் கேட்டு வியப் பற்றார். ''ஆமாம், உனக்கு நான்கு புதல்வர்கள் உண்டு என்று கேள்விப் பட்டேனே?''

''சுவாமி! எனக்குப் பிறந்த பிள்ளைகள் நால்வர்; ஆனால் என் பிள்ளை ஒருவன்தான்.''

''அப்பா! நீ சொல்வதன் கருத்து எனக்கு விளங்க வில்லையே!''

''சுவாமி! விளங்கவைக்கிறேன்.''

''மகனே! நடராஜா'' என்றழைத் தார் முதலியார்.

''சீட்டு விளையாடுகின்றேன், வர முடியாது'' என்று பதில் வந்தது.

''மகனே! வேல்சாமி!''

''ஏன் இப்படிக் கதறுகின்றாய்? வாயை மூடிக் கொண்டிரு.''

''மகனே! சிவசாமி!''

''உனக்குப் புத்தியிருக்கிறதா! உன் னோடு பேச என்னாலாகாது. பூமிக் குச் சுமையாக இன்னும் ஏன் இருக் கின்றாய்?''

''மகனே! கந்தசாமி.''

கந்தசாமி ஓடிவந்து பிதாவையும் முனிவரையும் தொழுது, ''சுவாமி! பால் கொண்டு வரட்டுமா? பழம் கொண்டுவரட்டுமா?'' என்று கேட்டு உபசரித்து, விசிறி எடுத்து வீசிக் கொண்டு பணிவுடன் நின்றான்.

முதலியார், ''சுவாமி! அந்த மூவர் களும் என் புதல்வர்களா? என் கருத் துக்கு முரணானவர்கள் பிள்ளை களா? போன பிறப்பிற் பட்ட கடன் காரர்கள், இவன் ஒருவன்தான் என் பிள்ளை'' என்றார்.

''அப்பா! உன் கருத்து உவகை யைத் தருகின்றது. வயது விஷயத்தில் நீ கூறியதன் உட்பொருள் யாது?''

''சுவாமி! அடியேன் நாளொன்றுக்கு 1½ மணி நேரந்தான் வழிபாடு செய் கின்றேன். மிகுதி நேரமெல்லாம் வயிற்றுக்காகவும் குடும்பத்துக்காக வும் உழைக்கின்றேன். பேசாத நாள் எல்லாம் பிறவா நாள்தானே? இறை வனைப் பூசிக்கும் நேரந்தான் எனக் குச் சொந்தம். அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து அறுபது ஆண்டுகள் ஆயின. ஐந்து வயதிலிருந்து பூசிக் கிறேன். நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம் பூஜை செய்கின்றேன். அந்த வகையாகப் பார்த்தால், முப்பதா யிரத்து நூற்றுப் பன்னிரண்டரை மணி நேரம் ஆகின்றது. ஆகவே அடியேன் பிறந்து அறுபது ஆண்டு களானாலும், எனக்குச் சொந்த வயது திட்டமாக மூன்று ஆண்டு ஐந்து மாதம் ஏழுநாள் பதினாறரை மணி தான்.

1. தருமம் செய்த பணம் எனக்குச் சொந்தம்.
2. என் கருத்தை அநுசரிக்கின்ற வனே எனக்குச் சொந்த மகன்.
3. பூஜை செய்த நேரம் எனக்குச் சொந்தம்''


என்றார்.

இதனைக் கேட்ட முனிவர் மகிழ்ந் தார். அவர் வீட்டில் உண்டு வாழ்த்தி விட்டுச் சென்றார்.

ஆகையால் இதைப் படித்த நீங்கள் இறைவனுடைய அருளைப் பெற நாளும் தானதர்மம் செய்து இறை வழிபாடு, தியானம், ஜபம் செய்யுங் கள். இறைவன் உங்களுக்கு அருள் புரிய வேண்டுகின்றேன்.







நில்! கவனி! புறப்படு!

7

உணர்ச்சி வேகம் உனை வீழ்த்தும் முள்

மேஜம் புகழ்மதி

வென்றுவிடும் ஆற்றலோடு விஸ்வரூபம் எடுக்கின்ற தென்றலே!

புதிய ஒரு சமுதாயத்தைப் படைக்கப் புறப்பட்டுவிட்ட உன் 'புலி வேகம்' என்னைப் புளகாங்கிதம் அடைய வைக்கிறது. எனினும் உன் உணர்ச்சி வேகம் வெறும் புஸ்வாணமாக ஆகிவிடாமல் நீ எச்சரிக்கையோடு பார்த்துக்கொள்ளவேண்டும். மழையினைப் பெற்றுத் தராத இடியினால் மண்ணுக்கு என்ன பயன்? வளர்ச்சிகளைப் பெற்றுத் தராத வெறும் உணர்ச்சி வேகத்தால் இளந்தலைமுறைகளுக்கு என்ன பயன்?

எனவே உன் உணர்ச்சிவேகம் ஆக்கரீதியாக அமைந்திருக்க வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

இந்த உணர்ச்சி வேகத்தினை உருவாக்குவதில் 'எழுச்சி,' 'கிளர்ச்சி' ஆகியவை பங்கு வகிக்கின்றன. உன்னதமான எழுச்சியின் பயனாக நீ உணர்ச்சி வேகம் கொண்டாயானால் வெற்றி உனக்கு நிச்சயம்.

பள்ளி தொடங்குகின்ற ஜூன், ஜூலையில் எல்லா மாணவர்களும் தாங்கள் வானத்தை வில்லாய் வளைத்து விடப் போவதாய்ப் பெருமையடித்துக் கொள்வார்கள். "இந்த ஆண்டு பாரேன்... நான் தினசரி பத்து மணி நேரம் படித்து நூற்றுக்கு நூறு வாங்கியே காட்டுவேன்," என வாய்ப் பந்தலிட்டு உணர்ச்சிக் கொடிகளைப் பரவ விடுவார்கள்.

ஆனால் வீசுகின்ற புயல் காற்றுத் தடைகளில் அவர்கள் பந்தல் 'பொசுக்' கென்று கீழே விழுந்துவிடும். உறுதியான கொள்கைகளின் அடிப்படையில் பிடிவாதமான மனபலத்தோடு அவர்கள் தங்கள் இலட்சியங்களைக் கடைவிரிப்பதில்லை; எனவேதான் ஒரு சிறு தடை வந்தாலே — ஒரு சின்னக் காற்று வீசினாலே அவர்களின் பந்தல் மளுக்கென்று கீழே முறிந்து விழுந்து விடுகின்றது.

எனவே அவர்கள் உணர்ச்சிவேகத்தில் திட்டங்கள் தீட்டாமல் உருப்படியான முறைகளில் தங்களின் எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். தமிழில் நூற்றுக்குத் தொண்ணூறு எடுக்க நினைத்தால் அதற்கான வழிமுறைகளை அமைதியாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'இலக்கணங்களை நன்கு படித்திருக்கிறோமா? 'கட்டுரைகளில் ஆசிரியர் திருத்தித் தருகின்ற பிழைகளை அவ்வப்பொழுது களைகின்றோமா? மனப்பாடப் பகுதிகளை நன்கு புரிந்து கொண்டு படிக்கிறோமா? புத்தகங்களிலுள்ள



பாடங்களை வாய்விட்டுப் படிக்கி றோமா?' என நமக்கு நாமே ஆராய்ந்து பார்த்துக் கொள்ள வேண்டும். இதனை விடுத்து எப்படி யும் நம்மால் முடியும் என்ற வெறும் உணர்ச்சி வேகத்தால் எதனையும் சாதிக்க முடியாது.

இவ்வாறு 'உணர்ச்சி வசப்படுவ தற்கு முக்கிய காரணமே நம்முடைய வலிமையினை நாம் சரியாகக் கணித்துக் கொள்ளாததுதான். குறள் சொல்லுவது போல,

'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முறிந்தார் பலர்.'

'நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந்தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.'

என்ற நிலையில் வெறும் உணர்ச்சி வேகம் நம் செயலின் வெற்றியை வீழ்த்தி விடுகிறது. நம்மை நாம் சரி யாக எடைபோட்டுக் கொள்ள வேண்டும்; நம்முடைய வலிமையான நமக்குத் தேவையான துறையில் நன்கு வளர்த்துக் கொள்ள வேண்டும். சிறந்த பாடகராக, இசை மேதையாக விளங்க வேண்டுமானால் சிறு வயதி லேயே இசைக் கலையை நன்கு பயில வேண்டும். அறிவியல் மேதையாக வேண்டுமெனில் ஒவ்வோர் அசைவை யும் ஊன்றிக் கவனித்து, 'ஏன், எப்படி?' என ஆராய வேண்டும். இதைப் போலவே தாங்கள் சிறந்த மேதைகளாக ஆக வேண்டும் என நினைக்கின்ற துறைகளிலும் தங்களை நன்கு ஈடுபடுத்திக் கொள்ள வேண் டும்.

தன்னால் எல்லாம் முடியும் என்று எண்ணுகின்ற 'தன்னம்பிக்கை' வேறு; தனக்கு எல்லாம் முடியும் என்ற அளவுக்கதிகமான மதிப்பீட்டினால் எழுகின்ற 'தலைக்கனம்' வேறு.

'உன்னால் எதுவும் முடியும்' எனப் பெரியோர்கள் நம்மைப் பார்த்து ஆணையிடும் பொழுது எழுச்சிமய மாக நம் இதயங்களில் அந்த ஆணை களை ஒளிர வைத்துத் திருவண்ணா மலை தீபம் போலப் புனிதமான எழுச்சியோடும் எந்நாளும் இயங்கும் கதிரவனாய் நம் நாடி நரம்புகளைக் கடமையின் வடிவமாக அமைத்துக் கொள்ளும் சத்தியக் கம்பீரத்தோடும் நாம் திகழ வேண்டும். வெறுமனே, 'என்னால் எதுவும் முடியும்,' என்ற தலைக்கனத்தோடு உணர்ச்சிவசப்படு வது நமக்கே தீங்காய் முடியும். சாதா ரணமாக நமக்குக் கிடைத்திருக்கக் கூடிய வளர்ச்சிகளைக் கூட இந்த



அதிவேக உணர்ச்சி வேகம் தரைமட்டமாக்கிவிட்டுப் போய்விடும்.

எதிர்காலத்தில் எதை எதையெல்லாம் நாம் செய்யக் கூடும் என்று நம்புகிறோமோ அதை வைத்து நம் திறமையை நாம் எடைபோட்டுப் பார்க்கிறோம். மற்றவர்களோ நாம் ஏற்கெனவே சாதித்ததை வைத்து நம்மை எடை போட்டுப் பார்க்கிறார்கள்,' எனக் கூறுகிறார் லாங் ஃபெலோ. எனவே வெறும் கற்பனையிலேயே உன் உணர்ச்சி வேகத்தை வைத்துக் கொண்டிருப்பதைவிட, கண்ணே இரே அதற்கான சில செயல்முறைகளைச் செயல்படுத்த வேண்டும் என்பதை நீ மறவாதே!

இதுவரை கணிதத்தில் 40 மதிப்பெண்கள் பெற்று வந்த நீ, 'என்னாலும் நூற்றுக்கு நூறு வாங்க முடியும்' என அடிக்கடி வாய்ப்பந்தல் போடுவதை நிறுத்திவிட்டுக் காலாண்டில் 50 மதிப்பெண்கள், அரையாண்டில் 60 மதிப்பெண்கள், மீள் தேர்வில் 75 மதிப்பெண்கள், ஆண்டுத் தேர்வில் நூறு சதவீதம் என்ற வகையில் உன் திறமையைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிக்காட்டும் வகையில் உன்னை வளர்த்துக் கொள்ள நீ முயல வேண்டும்.

எந்தப் பயிற்சியும் எதுவும் பெறாமல் வெறுமனே உணர்ச்சி வேகத்தில் எந்தப் போட்டியிலாவது கலந்து கொள்வதும், 'முதற் பரிசு எனக்குத் தான் பார்,' எனச் சவால் விடுவதும், அதற்கேற்ற முறையில் கடுமையாக உழைக்காமல் ஊர் சுற்றுவதும் — கடைசி நாளில் போட்டியன்று பரிதாபமாகத் தோற்பதும் சிலரின் வாடிக்கை. அவர்களைப் பார்த்து மற்ற மாணவர்களும், 'அடேயப்பா... என்னமா பீத்திக்கிட்டான்; இஷ்டத்துக்கு ரீல் விட்டான். நான் கூட அசந்

துட்டேன். ஏதோ வானத்தை வளைக்கிற மாதிரி மார்தட்டினவன் அதல பாதாளத்தில் போய் விழுந்துட்டானே... இரண்டாவது, மூணாவது அட... ஆறுதல் பரிசுகூட வாங்கலியே!' என்று பல மாணவர்கள் பேசுவதை — கேலி செய்வதை நீ பார்த்திருக்கலாம்.

'என்னால் எதுவும் முடியும்' என்ற சுலோகம் உனக்குத் தன்னம்பிக்கையை வளர்க்கப் பயன்பட வேண்டும்; தலைக்கனத்தை வளர்க்கப் பயன்படக்கூடாது. 'உன்னால் எதுவும் முடியும்' எனப் பெரியவர்கள் நம்மைப் பார்த்துக் கூறுகையில் நாம் நமது தன்னம்பிக்கையை அதற்கேற்ற வகையில் வளர்த்து, எதில் புகழ்பெற ஆசைப்படுகிறோமோ அத்துறையில் விடாமுயற்சியுடன் மெய் வருத்தம் பாராமல் கண்துஞ்சாமல் கருமமே கண்ணாகச் செயல்படுகின்ற பெருமிதத்தை நம் இதயத்திற்கு ஊட்டுகின்ற வகையில் நம்மை அமைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பெரியோரின் ஆசிகள் நமக்குப் பலிக்கும்.

வீரசிவாஜிக்கு அவரது அன்னை சிறு வயதிலிருந்தே 'உன்னால் எதுவும் முடியும்' என்ற உயரிய நம்பிக்கையை ஊட்டி வளர்த்தார். அவர் வெறும் உணர்ச்சி பூர்வமான முழக்கம் போல இதனை ஆக்கிவிடவில்லை. அந்த உயரிய எழுச்சிக்கு அவரைக் கொண்டு செல்லும் விதத்தில் சிறு வயதிலிருந்தே இராமாயணம், பாரதம் போன்ற நூல்களைக் கற்பித்தார்; பல்வேறு விதமான போர்ப் பயிற்சிகளைக் கற்றுக் கொள்ளச் சிவாஜிக்கு ஊக்கம்தந்தார். அவ்வாறு அவர் சிவாஜிக்குச் செயலூக்கம் தந்ததன் காரணமாகச் சிறப்பான வெற்றிகளைச் சிவாஜியால் எதிர்காலத்தில் பெற முடிந்தது.

'என்னால் எதுவும் முடியும்' என்ற வெறும் உணர்ச்சி வேகத்தை மூலதனமாக வைத்தே ஏராளமான மாணவர்கள் இன்று தங்கள் வினைகளை முடித்துவிடவும் வெற்றிக்கொடி நாட்டவும் மனப்பால் குடிக்கின்றனர். அந்த வினையை முடிப்பதற்கேற்ற வகையில் கடுமையாக உழைத்து, தங்களைத் தகுதியுள்ளவராக ஆக்கிக் கொள்ளாமல் வெறும் வாய்ப்பந்தல் மட்டுமே போடுகின்றனர்; இறுதியில் தோல்வியினைச் சந்திக்கின்றனர். இதனால்தான் எடிசன் கூறுகிறார்: 'தோல்வி தலைக்கனத்தால் விளைகிறது. கடுமையாக உழைக்காமலே வெற்றி காணும் அளவுக்குத் தங்களிடம் கெட்டிக்காரத்தனம் இருப்பதாக நினைத்துப் பலர் கஷ்டப்பட்டு வேலை செய்வதில்லை.'

தன்னால் எதுவும் முடியும் என இறுமாப்போடு ஒவ்வொரு முறையும் பொங்கிப் பொங்கித் தோல்வியடைந்த விசுவாமித்திரர் கதை உனக்குத் தெரியாதா?

விசுவாமித்திரர் 'வசிஷ்டரை எப்படியும் வீழ்த்த வேண்டும்' என்ற உணர்ச்சி வேகத்தில் அவரோடு போரிட்டு மிக வெட்கக்கேடான தோல்விகளை அடைந்தார். அதன் பிறகு வசிஷ்டருக்குச் சமமாகத் தன்னை ஆக்கிக் கொள்ளும் விதத்தில் கடுமையாக உழைத்துத் தவம் புரிந்தார். பிரம்மரிஷி ஆவதற்காக அவர் பட்டபாடு — அடைந்த துன்பங்கள் — எண்ணிப் பார்த்தால் பிரமிப்பூட்டும். நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்குக் கடுமையாக உழைத்த பின்தான் வசிஷ்டர் வாயால் வாழ்த்தப்பெற்று பிரம்மரிஷியானார். பல முறை உணர்ச்சி வேகத்தில் தம் தவத்தின் பலனையெல்லாம் பரிதாபமாக இழந்து இழந்து, அதற்குப் பின் எந்தவித உணர்ச்சி வேகத்திற்கும் இனி இடம் கொடுக்கக் கூடாது என்ற மன உறுதியோடு ஆயிரம் ஆண்டுகள்



ஆசியாவைச் சேர்ந்த பெரியதும்பிகள், அவ்வப்போது, குறிப்பாக வெப்பம் மிகுந்த காலகட்டங்களில் தமது வழித்தோன்றல்க

ளுக்கு ஆபத்து நேரும்போது கூட்டம் கூட்டமாக நெடுந்தொலைவுக்கு இடம் மாறுகின்றன. அப்போது, கழிவுப் பொருள்கள் அவற்றிலிருந்து வெளிப்படுகின்றன. இதன் விளைவாக, அவற்றின் உடலில் வெப்பநிலை குறைகிறது. தங்களது ஒரு பயணத்தின் போது 4,800 தும்பிகள், 1850 தெர்மஸ் கலோரிகளை வெளியேற்றுகின்றன. அந்தப் பொருள்கள் 'மஞ்சள் மழை' என்ற வடிவத்தில் பூமியை அடைகின்றன.

நன்றி: நல்வழி.

சீதா, சென்னை — 93.

தவம் புரிந்த பின்னர்தான் இத்தகைய பெருமை அவருக்குக் கிடைத்தது.

காட்டிலே ஒரு முனிவர் மரத்தினடியில் அமர்ந்திருந்த பொழுது ஒரு கொக்கு மேலிருந்து எச்சமிட்டது. அதனால் எரிச்சலடைந்த முனிவர் அந்தக் கொக்கை அண்ணாந்து பார்த்தார்; அவ்வளவுதான், அடுத்த விநாடி கொக்கு பஸ்பமானது. 'கொக்கையே நம் பார்வையால் வீழ்த்தி விட்டோம்; இனி நம்மால் முடியாதது எதுவுமில்லை' என்ற தலைக்கனத்தோடு ஊருக்குச் சென்றார். ஒரு வீட்டின் முன் நின்று யாசகம் கேட்டார். அந்த இல்லத்தின் தலைவியோ அந்த நேரத்தில் தான் மேற்கொண்டிருந்த இல்லத்துக் கடமையினை முடித்துவிட்டு அதன்பின் பிட்சை எடுத்து வந்தார். உடனே வராமல் காலம் தாழ்த்தி வந்தமை கண்டு கோபத்தோடு அப்பெண்ணை முனிவர் பார்த்தார். உடனே, அப்பெண் அமைதியாகக் கேட்டாள்: ''கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?'' என்றாள். 'காட்டில் கொக்கை எரித்தது இப்பெண்ணுக்கு எப்படித் தெரிந்தது? இவ்வளவு ஞானம் பெற்ற இவள் இத்தனை அமைதியோடு இருக்கிறாளே! நாமோ உணர்ச்சி வேகத்தில் நம்மை மிஞ்சிட ஆளில்லை' என மனக்கோட்டை கட்டினோமே; நாம் பெறவேண்டிய அறிவு இன்னும் எவ்வளவோ இருக்கிறது என எண்ணித் தம் கர்வத்தை அந்த விநாடியே சுக்கு நூறாக்கிவிட்டு அப்பெண்ணையே தம் குருவாக ஏற்றார் அம்முனிவர்.

எதையும் உணர்ச்சிபூர்வமாக ஏற்றுக் கொள்வதைவிட அறிவுபூர்வமாகச் சிந்தித்து, அதன்படி நடக்க உன்னைப் போன்ற இளந்தலைமுறையினர் பழகிக் கொள்ள வேண்டும். நடைமுறைக்கு எவ்வெவற்றை எந்தெந்த அளவிற்கு, எந்தெந்த முறையில் பயன்படுத்தலாம் எனப் பகுத்தறிந்து தீர்மானிக்க வேண்டும். இராமகிருஷ்ணர் கூறிய கதையொன்றை உனக்குக் கூறுகிறேன்.

ஆசிரமம் ஒன்றில் ரிஷி தம் சீடர்களுக்கு 'உயிர்கள் அனைத்தும் நாராயணனே!' என உபதேசித்தார். அதைக் கேட்ட ஒரு சீடன் உணர்ச்சிபூர்வமாக, 'எவ்வுயிரும் நாராயணனே,' என நம்ப ஆரம்பித்தான். ஒரு முறை யானையொன்று மதம் பிடித்துத் தெருவில் ஓடிவந்து கொண்டிருந்தது. மாவுத்தனோ பின்னாலேயே அனைவரையும் எச்சரித்தபடி, ''யானைக்கு மதம் பிடித்துவிட்டது; விலகி ஓடுங்கள்,'' என்று சத்தமிட்டுக் கூறினான். சீடனோ, அதனைப் பொருட்படுத்தாமல் நடுச்சாலையிலேயே நின்று, ஓடிவரும் யானையைப் பார்த்தபடி, ''நாராயணா, நாராயணா...'' எனத் தொழ ஆரம்பித்தான். யானையோ, சீடனை அலாக்காகத் தூக்கித் தூர எறிந்துவிட்டது. பலத்த அடிபட்டுக் கிடந்த சீடனைப் பார்க்க வந்தார் ரிஷி. சீடன் கேட்டான்: '' ஐயா, யானையிலும் நாராயணன் இருக்கிறானே; அவனை வணங்கிய எனக்கு ஏன் இத்துன்பம் நேர்ந்தது?'' ''சீடா, யானை நாராயணனை வணங்கிய நீ, மாவுத்த நாராயணனின் எச்சரிக்கையை ஏன் உதாசீனம் செய்தாய்?'' என்றார் ரிஷி. எனவே அறிவுபூர்வமாகச் சிந்திக்காமல் உணர்ச்சிவசப்பட்டு நடத்தல் நமக்கே தீங்காய் முடியும்.

இனிய என் இலக்கியமே, இவையெல்லாம் உனக்குத் தெரியாததல்ல. உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவும் எடுக்காமல் நன்கு தீர யோசித்தே தெளிவாகச் சிந்தித்தே எந்த முடிவையும் எடுப்பாய்; எடுத்த முடிவின்படி, எவர் தடுத்தாலும் அவர்களை மீறி நடப்பாய் என நான் அறிவேன். அறிவுச் செல்வமே, அடுத்த மடலில் சந்திக்கிறேன்.

(தொடரும்)

முயலார் ஆடிய புலி வேட்டை

கதை, படம்: அரஸ்







முயல் புலியைப்பெரிய தேனீக்கள்
தங்கியிருக்கும் கூட்டிற்கு அழைத்துச்
சென்றது...
உன்னுடைய பலம் திறமையை யும் பயன்படுத்தி இதனை உன்னால் பிடிக்க இயலுமா?
3


புலி தேனீக் கூட்டினருகே
சென்றது.
தேனீக்கள் புலியைப்
பயங்கரமாகக் கொட்டின...
4


அடுத்து முயல் புலியை ஒரு குளத்திற்கு அழைத்துச் சென்றது. அங்கே தவளை ஒன்று தாமரை இலை மீது அமர்ந்திருந்தது.
எங்கே, உன் வேகத்தைக் காட்டி, தவளையைப் பிடிக்க முடியுமா...?
5


புலி தவளையைப் பிடிக்கத் தாவியது... தவளை ஒரே தாவாக அடுத்த இலைக்குத் தாவியது. புலி தண்ணீரில் விழுந்தும் மூழ்கியது...
6


கடைசியாக முயல் புலியை ஒரு பெரிய மரத்தினருகே அழைத்துச் சென்றது...
இந்த மரத்திற்குப் பின்னால் ஒரு வேட்டைக்காரன் ஒளிந்திருக்கிறான். நீ சிறந்த அரசனானால், உன்னுடைய வீரத்தை அவனிடம் காட்டிப் பார்....


புலி வேட்டைக்காரன் மீது பாய்வதற்கு ஆக்ரோஷமாகத் தாவியது. ஆனால் அது வேட்டைக்காரனால் வலை விரிக்கப்பட்ட பெரிய பள்ளத்தில் விழுந்தது... புலி மாட்டிக் கொண்டது. புத்திசாலி முயல் தப்பியது...

பிருந்தாவனக்



விலைக்கு வாங்க முடியாது?

பாபுவும் கோபுவும் ஒரே வகுப்பு.

பாபு பெரிய செல்வந்தர் மகன். தந்தைக்குப் பணம் இருக்கும் தைரியத்தில் சரியாகப் படிக்க மாட்டான். ஏழைகளை அலட்சியமாகப் பேசுவான். கோபு ஏழைத் தொழிலாளி மகன். கஷ்டப்பட்டுப் படிப்பான். எல்லாவற்றிலும் அவன்தான் முதல்!

பள்ளி ஆண்டு விழாவில் சிறந்த மாணவன் என்பதற்காகக் கோபுவுக்கு மாவட்டக் கலெக்டர் நூறு ரூபாய் பரிசளித்தார்; பாராட்டிப் பேசினார். மாணவர்களும் ஆசிரியர்களும் கோபுவைப் பாராட்டியது பாபுவுக்கு எரிச்சலைத் தந்தது. ''இது என்ன பிரமாதம்! கலெக்டர் நூறு ரூபாய் கொடுத்ததற்கா இப்படிப் பாராட்டுகிறார்கள்! எங்கப்பாவிடம் வேண்டிய அளவு நூறு ரூபாய் இருக்கு. எத்தனை வேண்டுமானாலும் நான் எடுத்துக் கொள்வேன்,'' என்றான் அகம்பாவமாக.

அதைக் கேட்டுக் கொண்டே வந்த பாபுவின் தந்தை, ''பாபு உனக்கு எவ்வளவு நூறு ரூபாய் வேண்டுமானாலும் கிடைக்கும். ஆனால் அதெல்லாம் என்னுடையவை; நான் சம்பாதித்தவை. அவற்றை நீ எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அதில் ஒன்றைக் கூட கலெக்ட்டர் தன் கையால் கொடுத்து உன்னைப் பெருமைப்பட வைக்க முடியாது. பெருமை, உழைப்பால்; கடின முயற்சியால் கிடைக்கப் பெறுவது. அதைத் தந்தை சேர்த்த சொத்தால் ஒருகாலும் அடைய முடியாது,'' என்றார்.

பாபுவின் கண்கள் திறந்தன. இப்பொழுதெல்லாம் கோபுவுக்குப் போட்டியாகப் பாபுவும் படிக்கிறான்!

— பி. திருநாவுக்கரசு, வந்தவாசி.

பொய் சொன்ன பொன்னம்மா

காட்டூர் கிராமத்தில் பொன்னம்மா என்ற பணக்காரி இருந்தாள். கழுத்து நிறைய கைகள் நிறையப் பவுன் நகைகள் போட்டுக் கொண்டிருப்பார். ஆனால், ஊரார் கேட்டால் இதெல்லாம் கவரிங் செயின். கவரிங் வளையல் என்று பொய் சொல்லுவாள்.

பக்கத்து ஊரில் பெரிய தனவந்தர் வீட்டுக் கல்யாணம். காட்டூர் கிராமமே கிளம்பத் தயாரானது. பொன்னம்மாவுக்கு வேண்டிய சில பெண்மணிகள் ''அக்கா... உங்க நகைகளில் ஆளுக்கொன்று கொடுங்கள். கல்யாணத்திற்குப் போய் விட்டுத் திருப்பித் தந்து விடுகிறோம்,'' என்று பொன்னம்மாவிடம் கேட்டனர்.

பொன்னம்மாவுக்குச் சங்கடமாகப் போயிற்று.

எல்லாம் உண்மையான பவுன் நகைகள் என்று சொன்னால் பொய் சொன்னது தெரிந்து விடும். சொன்ன பொய் அப்படியே இருக்கட்டும் என்று ஆளுக்கொரு நகையாகக் கொடுத்தாள்.

கல்யாணம் முடிந்தது. சாப்பாட்டை முடித்துக் கொண்டு பெண்கள் அனைவரும் கிளம்பி பஸ் நிலையம் வந்தனர். பஸ் வர



கதையரங்கம்

வில்லை.

கண்டக்டர் ஒருவரைப் பிரயாணி அடித்து விட்டதால் திடீரென்று பஸ் ஸ்டிரைக்!

வேறு வழியின்றி, பொன்னம்மாவும் மற்றப் பெண்களும் நடக்க ஆரம்பித்தனர்.

ஆர்ச் அருகே வரும் போது நாலைந்து பேர் முகமூடி — தடிக்கம்பு களுடன் தோன்றி, "கழட்டுங்கள் நகையை... இல்லையேல் உயிர் போகும்," என்று கத்தியைக் காட்டினர்.

ஒருத்தி மட்டும் துணிச்சலாக, அய்யா... எங்களை விட்டுடுங்க. இதெல்லாம் கவரிங் நகைகள்," என்றாள்.

"ஹஹ்ஹா!" — முகமூடிகளில் ஒருவன் சிரித்தான்.

"பொய் சொல்லாதீங்க. நல்ல பவுன் டால் அடிக்குது. மரியாதையாக் கழட்டுங்க," என்று மீண்டும் மிரட்ட.


"அக்கா... கவரிங் நகைகள் தானே? கொடுத்து விடுவோம். நமக்கு உயிர்தானே முக்கியம்?" என்றாள் ஒருத்தி.

வேறு வழியின்றி எல்லாரும் நகைகளைக் கழற்றிக் கொடுத்து விட்டு உயிருக்குப் பயந்து ஓடினர்.

கிட்டத்தட்ட 20 பவுன் நகைகளை இழந்த பொன்னம்மா மயங்கி விழுந்தாள்.

— பி. ஆர். பார்த்தசாரதி.

எத்தனை புழுதி



வடநாட்டுப் புலவர் ஒருவர் ஸ்ரீரங்கத்துக்கு வந்தார்.

"சகலகலா வல்லவன் வந்தான்! வந்தான்
சரிநிகர் இல்லாதவன் வந்தான்! வந்தான்!

என்று சீடர்கள் பராக்குரைத்து முன்னே வர, முத்துப் பல்லக்கிலே அப் புலவர் செருக்கோடு வீதி வலம் வந்தார்.

ஒரு சிறுவன் தன் தோழர்களுடன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தான். புலவர் செருக்கோடு பவனி வரும் ஆரவாரத்தைக் கண்ட சிறுவன், பல்லக்கின் முன் வழி மறித்து நின்றான்.

புலவரின் சீடர்களை நோக்கி, "உம் ஆசான் சகலகலா வல்லவர் சரிநிகர் இல்லாதவர் என்றால் நான் கேட்பதற்கு விடை சொல்லுவாரா?" என்று பணிவுடன் வினவினான் சிறுவன்.

புலவனுக்குச் சினம் மூண்டது. "அறியாச் சிறுவன் நம் பவனியை எதிர் மறிப்பதா?" என்று வெகுண்டார். அற்பச் சிறு பயல். இவன் அப்படி என்ன பெரிதாகக் கேட்டு விடப் போகிறான் பார்ப்போமே,' என்ற அகந்தையுடன், "நீ கேட்பதைக் கேட்கலாம். விடை சொல்லுகிறேன்," என்றார் மிடுக்குடன்.

சிறுவன் தன் கைகளால் தெருப் புழுதியை அள்ளினான். "இது எத்தனை மண்? இதைச் சொல்லி விட்டால் நீர் பெரும் புலவர்தாம். உமக்கு இப் பெருமிதப் பவனி ஏற்றதே. பதில் சொல்ல முடியவில்லையேல் நீர் தோற்றவராவீர். இவ்வூரை விட்டு ஓடி விட வேண்டும்," என்றான்.

புலவர் விழித்தார். 'கையில் அள்ளிய புழுதியை எப்படிக் கணக்கிட்டுக் கூறுவது? ஒரு சிறுவனுக்கு விடை சொல்ல முடியவில்லையே?' என்று பொருமினார்.

"உன்னால் சொல்ல முடியுமா?" என்று எதிர் வினாத் தொடுத்தார் புலவர்.

"முதலில் நீர் தோற்று விட்டதாக ஒப்புக் கொள்ளும். பிறகு நான் சொல்கிறேன்," என்றான் சிறுவன்.

வேறு வழியின்றிப் புலவர், தான் தோற்று விட்டதாக ஒப்புக் கொண்டார்.

"எத்தனை என்பதற்கு, எண்ணிக்கை என்று மட்டுந்தானா பொருள்? எவ்வளவு என்றும் பொருள் உண்டல்லவா? இது ஒரு பிடி மண் என்று கூறத் தெரியாத உமக்கு இந்தப் பெருமிதம் ஏன்? ஆரவாரம் ஏன்? பவனி ஏன்?" என்று சிறுவன் ஏளனமாகக் கூறினான்.

சிறுவனின் மதிநுட்பம் கண்டவர் அவனை வியந்தனர். வடநாட்டுப் புலவரும் அச் சிறுவனை அள்ளி உச்சிமோந்து, அரிய பரிசு பல தந்து ஊரை விட்டுப் போனார். அவர் அகந்தை அழிந்தது.

அந்தச் சிறுவன்தான் பராசர பட்டர் என்று பிற்காலத்தில் பெருமை பெற்ற வைணவப் பேராசிரியர்.

— ஹரி கிருஷ்ணன், மேலப்பாளையம்.



யாருக்குச் சாமர்த்தியம்?

பஸ்சில் இருவர் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். ஒருவர் படித்தவர், நகரவாசி. இன்னொருவர் படிக்காதவர், கிராமவாசி.

அப்பாவியான கிராமவாசியை ஏமாற்றிப் பணம் பறிக்கத் திட்டமிட்ட நகரவாசி, "விடுகதைப் போட்டி வைப்போம். என்னுடைய விடுகதைக்கு உனக்கு விடை தெரியவில்லை என்றால் ஒரு ரூபாய் தர வேண்டும். உன் விடுகதைக்கு எனக்கு விடை தெரியவில்லை என்றால் நான் ஒரு ரூபாய் தந்து விடுகிறேன்," என்று ஆசை காட்டினார்.

"என்னை விட நீங்க படிச்சவங்க. அதனால் நான் தோற்றால் ஐம்பது காசு தான் தருவேன். நீங்கள் தோற்றால் மட்டும் ஒரு ரூபாய். சம்மதமா?" என்று கேட்டார் கிராமவாசி.

"சரி," என்றார் நகரவாசி.

கிராமவாசி முதலில் விடுகதை போட்டார். "நடக்கும் போது மூன்று கால். பறக்கும் போது இரண்டே கால். எது சொல்லு?"

நகரவாசி அசந்து போனார். விடை தெரியாததால் ஒரு ரூபாயைக் கொடுத்தார். இப்பொழுது அவருடைய முறையாதலால், கிராமவாசி போட்ட அதே விடுகதையை இவர் போட்டு விடை கேட்டார்.

சாவகாசமாக எழுந்து கொண்ட கிராமவாசி, "எனக்கும் விடை தெரியாது. இந்தாங்க பந்தயப்படி ஐம்பது காசு." என்று ஐம்பது பைசாவைக் கொடுத்து விட்டு, தான் ஜெயித்த ஐம்பது காசுக்குக் கடலை வாங்கிக் கொறித்தார்.

கிராமவாசியை எளிதாக எண்ணிய தனது மடமையை நொந்து கொண்டார் நகரவாசி.

— எஸ். ஏ. அப்துல் ஹக்கீம் அலி.

கனமான கவிதை

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் புலவர்களையோ, அவர்களது புலமையையோ மதிப்பதில்லை. புலவர்கள் அந்த ராஜாவைப் பற்றிப் புகழ்ந்து பாடல்கள் பாடிக்கொண்டு வருவார்கள். அந்த ஓலைச் சுவடிகளையெல்லாம் தராசில் போட்டு நிறுத்து, அதன் எடைக்கேற்ற பொற் காசுகளைப் பரிசாகத் தந்து அனுப்புவார் மன்னர். மற்றபடி பாடலின் சுவையையோ, பொருளையோ உணர்ந்து அனுபவிப்பதில்லை அரசர்.

புலவர்களுக்கெல்லாம் இது மிகவும் வருத்தம்! அப்படி வருந்திய ஒரு பெரும் புலவர், புலவர்களையும், புலமையையும் மதிக்காத அம் மன்னனுக்கு நல்ல பாடம் புகட்ட விரும்பினார். அவர் ஒரு பாடலைப் பாடிக்கொண்டு வந்தார்.

வழக்கம் போல் அரசர், "மந்திரி, அந்தப் பாடலை நிறுத்து. அதன் எடைக்குரிய பொற்காசைக் கொடுத்தனுப்பி விடும்," என்றார்.

"எங்கே பாடல்?" என்றார் மந்திரி!

"ஐயா, மந்திரியாரே! கவிதை வெளியே இருக்கிறது. வந்து பாரும்," என்றார் புலவர்!

பார்த்தார் மந்திரி! பெரிய ஒரு கருங்கற் பாறையில் நாலு வரி கவிதை எதுகை மோனையோடு செதுக்கப்பட்டிருந்தது. அந்தப் பாறைக் கவிதையை பல நூறு வீரர்கள் புரட்டி எடுத்துத் தராசில் வைத்தனர். அரண்மனைப் பொக்கிஷமெல்லாம் காலியானது. கவிதைப் பாறையிருந்த தராசுத் தட்டு மேலே எழும்பவில்லை. ராசாவும், மந்திரியும் விழித்தார்கள். மற்றப் புலவர்களும், ஊர் மக்களும் கூடி நின்று சிரித்தார்கள். அரசன் தன் தவறை உணர்ந்தான். பாடலுக்குத் தகுந்த, புலமைக்குத் தகுந்த பரிசளிப்பதென்று உறுதி பூண்டான்.

— டாக்டர் கு. நிர்மலா தேவி.

சிவப்பு ரோஜா



வெள்ளை ரோஜா

அந்த ஏழை விதவைப் பெண்ணிற்கு அவள் வளர்க்கும் இரண்டு ரோஜாச் செடிகள் போலவே இரண்டு பெண்கள். ஒருத்தியின் பெயர் வெள்ளை ரோஜா, மற்றவள் பெயர் சிவப்பு ரோஜா. அவர்கள் இருவரும் பூக்களைப் போலவே அழகானவர்கள், இனிமையானவர்கள்.

வெள்ளை ரோஜாவும் சிவப்பு ரோஜாவும் இணைபிரியாத சகோதரிகள். வெள்ளை ரோஜா அவள் சகோதரி சிவப்பு ரோஜாவைப் பார்த்து, "நாம் உயிரோடு வாழும் வரை காலமெல்லாம் ஒற்றுமையாக ஒருவரை ஒருவர் பிரியாமலிருக்க வேண்டும்," என்றாள்.

சிவப்பு ரோஜாவும், "ஆமாம், ஆமாம். நமக்குப் பிரிவென்பதேயில்லை," என்றாள்.

அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த அவர்கள் அம்மா அவர்களருகில் வந்து, "இருவரும் இன்று போல் என்றும் ஒற்றுமையாக வாழ வேண்டும். எது கிடைத்தாலும் இருவரும் பகிர்ந்து கொண்டு வாழ வேண்டும்," என்று அறிவுரை கூறினாள்.

அவர்கள் இருவரும் ஒற்றுமையாகக் காட்டில் பூ, பழம் எல்லாம் பறித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் காட்டில் வாழும் ஜந்துக்கள் ஒரு தீங்கும் செய்ததில்லை. மாறாக, அவர்கள் அருகில் வந்து அன்போடு பழகின. சின்ன முயல்கள் அவர்களருகில் வந்து அவர்கள் கையிலிருக்கும் கோஸ்களை எடுத்துச் சாப்பிட்டன; மான்கள் அன்போடு அவர்களிடம் ஒட்டி உரசி விளையாடின; பறவைகள் மரக்கிளைகளில் அமர்ந்து பாட்டுப் பாடி அவர்களை மகிழ்வித்தன. இப்படி விலங்குகள், பட்சிகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது நேரம் கடந்து இரவு இருட்டி விட்டாலும் சகோதரிகளிருவரும் காட்டிலேயே மரத்தினடியில் படுத்து உறங்கி விடுவார்கள். விடிந்ததும்தான் வீடு போய்ச் சேருவார்கள்.

அவர்கள் தாயாரும் கவலையின்றி, 'மகள்கள் எப்படியும் செளக்கியமாக இருப்பார்கள்; எந்தப் பயமுமில்லை,' என்றிருப்பார்.

ஒருநாள் காட்டிலேயே உறங்கி விட்டுக் காலையில் கண் விழித்துப் பார்த்த வெள்ளை ரோஜாவுக்கும் சிவப்பு ரோஜாவுக்கும் ஓர் அதிசயம்

மூலம்: கிரிம் சகோதரர்கள்

தமிழில்: எஸ். சித்ரா

தென்பட்டது. அவர்கள் படுத்து எழுந்த இடத்தினருகே கொள்ளை அழகான குழந்தையொன்று வெள்ளைத் துணியில் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. இதுவரை அவர்கள் வாழ்க்கையில் இதுபோன்ற அழகான குழந்தையை அவர்கள் கண்டதேயில்லை. கையில் எடுக்கக் குனிந்தபோது, கண் இமைக்கும் நேரத்தில் குழந்தை மறைந்து விட்டது.

வீட்டுக்குப் போனதும் அவர்கள் கண்ட காட்சியைத் தாயாரிடம் சொன்னதும் அவள், "பெண்களே, நீங்கள் பாக்கியசாலிகள். நீங்கள் பார்த்த குழந்தை நிச்சயமாக வன தேவதையின் அவதாரம்தான். குழந்தைகளைக் காப்பாற்றும் தேவதையாக அது இருக்க வேண்டும்," என்றாள்.

அப்போது பனிக்காலம் ஆரம்பமான நேரம். போகப் போக வெளியில் தலைகாட்ட முடியாமல் பனியும் குளிரும் வெடவெடக்கச் செய்து வீட்டிலேயே கம்பளி போர்த்திக் கொண்டு மக்களை அடைய வைத்தது.

சகோதரிகளிருவரும் அவர்கள் அம்மாவோடு குளிர் அடுப்பின் பக்கத்தில் உட்கார்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வளர்க்கும் வெள்ளைப் புறா அருகில் அமர்ந்து கொண்டு தலையை இறக்கையினுள் மறைத்துக் கொண்டிருந்தது. பெரிய புத்தகத்திலிருந்து கதைகளை அம்மா உரக்கப் படிக்க, பெண்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது கதவு தடதடவென்று தட்டப்படும் ஓசை கேட்டது.

அம்மா பெண்களிடம், "யாரோ வந்திருக்கிறார்கள், சிவப்பு ரோஜா, நீ போய்க் கதவைத் திறந்து யாரென்று பாரம்மா," என்றாள்.

சிவப்பு ரோஜா தயங்கிக் கொண்டே கதவைத் திறந்தாள். இருட்டில் கரிய உருவம் ஒன்று நிற்பது கண்ணில் பட்டது. அது என்ன? ஒரு கரடி! குளிரில் வெடவெடத்துக் கொண்டிருந்தது.

அவ்வளவுதான். சிவப்பு ரோஜா வீல்என்று அலறிக்கொண்டு உள்ளே ஓடி வந்த வேகத்தில் வெண் புறா பயத்தால் சிறகை விரித்துப் படபடவென்று பறக்க ஆரம்பித்தது. வெள்ளை ரோஜாவோ பயம் நெஞ்சைக் கவ்வ, அப்படியே தாயாரின் பின்னால் போய்ப் பதுங்கிக் கொண்டாள்.

இதையெல்லாம் பார்த்த கரடி, "பயப்படாதீர்கள். பயப்படாதீர்கள். நான் உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன். பனியில் அப்படியே பாதி உறைந்து விட்டேன். ஆகையால்



என்னைக் கொஞ்சம் உள்ளே விட்டால் குளிர் காய்ந்துவிட்டு என் வழியே சென்று விடுவேன்," என்று கெஞ்சியது.

"அடப்பாவமே!" என்று அம்மா பரிதாபப்பட்டாள். "உள்ளே வா, கரடியே, உள்ளே வந்து கணப்பினருகே உட்கார்ந்து உன்னைச் சூடாக்கிக்கொள். பார்த்து... உன் உரோமங்கள் தீயில் பட்டுக் கருகிவிடாமல் ஜாக்கிரதையாக இரு," என்று அன்போடு அழைத்தாள்.

கரடியும் உள்ளே வந்து கணப்பி னருகே அமர்ந்தது.

''வெளியே வாருங்கள் பெண் களே, இந்தக் கரடி மிகவும் நல்லது. உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாது. பயப்படாதீர்கள்,'' என்று அழைத் தாள் அம்மா.

இருவரும் வெளியே வந்தார்கள். உடல் முழுவதும் பனித்துகள்களுடன் இருந்த கரடி, இரண்டு பெண்களை யும் பார்த்து, ''பெண்களே, என் உட



லில் ஒட்டியிருக்கும் பனித்துகள்க ளைத் தட்டி விடுவீர்களா?'' என்று வேண்டியது.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உள்ளேயிருந்து பிரஷ் ஒன்றைக் கொண்டு வந்து கரடியின் உடலில் ஒட்டியிருக்கும் பனித்துகள் களைச் சுத்தம் செய்தனர் இருவரும்.

பனி விலகிய உடலுடன் கரடி சந் தோஷமாகத் தீயின்முன் சாய்ந்து படுத்துக் கொண்டு நன்றாகக் குளிர் காய்ந்தது. பெண்களைப் பார்த்துச் சிரித்து அருகில் வந்து விளையாடும் படி அழைத்தது.

இருவரும் கரடியுடன் நன்றாக விளையாடினார்கள். அதைக் கேலி செய்து மகிழ்ந்தார்கள். கரடியும் அவர்கள் செய்த கேலியையும், கிண் டலையும் நல்லபடி சந்தோஷமாக எடுத்துக் கொண்டு விளையாடியது.

இப்படியாக இரவு வரை விளை யாடிக் கொண்டிருந்தார்கள். படுக்கும்நேரம் வந்ததும்பெண்களின் தாயார் கரடியிடம் வந்து, ''கரடி யாரே! நீங்கள் இதோ இந்த அறை யிலே கணப்பருகே, ஜாக்கிரதையாக ஒரு மூலையில் குளிருக்கு இதமாக நன்றாகப்படுத்துத்தூங்குங்கள்,'' என் றாள்.

விடிந்ததும் கரடி எழுந்து அவர்க ளிடம் விடைபெற்றுக் காட்டுக்குப் போய்விட்டு,மாலை வீடு வருவதாகச் சொன்னது.

மாலை கரடி வீடு வந்ததும் இரண்டு ரோஜாக்களும் அதனோடு சந்தோஷமாக விளையாடி மகிழ்ந் தனர். இப்படியே தினமும் கரடி மாலை வீட்டுக்கு வருவதும், அவர்க ளோடு விளையாடுவதும் வாடிக்கை யாகிவிட்டது.

பனிக்காலம் முடிந்துவிட்டது. கோடை ஆரம்பமானது.

கரடி ரோஜாக்களைப் பார்த்து, ''நான் உங்களை விட்டுப் பிரியும் நேரம் வந்துவிட்டது, பெண்களே! கிளம்புகிறேன். என் வழியில் போக வேண்டும்நான். இந்த வெயில்காலம் முடியும் வரை உங்களை நான் திரும்பப் பார்ப்பேனா? சந்தேகமா யிருக்கிறது,'' என்று சோகமாகச் சொன்னது.

இரண்டு பெண்களும் அதிர்ச்சி யோடு, ''கரடியே, நீ ஏன் போக வேண்டும்?'' என்று கேட்டார்கள்.

''என்னுடைய பொன்னையும் பொருளையும் இராட்சசக் குள்ளர்க ளிடமிருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பிலிருக்கிறேன். இவ்வளவு நாள் பனிக்காலமாயிருந்தது. குள்ளர் கள் வெளியே வராமல் பனிக்காகப் பயந்து உள்ளே அவர்கள் குகையில் வாழ்ந்து வந்திருப்பார்கள். வெயில்

காலம் வந்துவிட்டதே! இனி வெளியே வந்து என்னுடைய பொருட்களையெல்லாம் அபகரித்துக் கொண்டு சுரங்கப் பாதையில் நிமிஷமாக மறைந்து விடுவார்கள். நான் போய் ஜாக்கிரதையாக எல்லாவற்றையும் காப்பாற்ற வேண்டும்,'' என்றது.

பிரியாவிடைபெற்றுச்சென்றகரடியின் உரோமம் கதவிடுக்கில் சிக்கிக் கொஞ்சம் பிய்ந்தது.

அந்த உரோமம் பிய்ந்த இடத்தில் பளிச்சென்று தங்கமயமான உடல் தெரிவதை வெள்ளை ரோஜா கவனித்தாள்! அவள் கண்களில் பளீரென்று அந்தக் காட்சி தோன்றி மறைந்தது. தான்கண்டது உண்மையா? பொய்யா? என்ற குழப்பம் அவளுக்கு.

கொஞ்ச நேரம் கழித்து, சோகமாயிருந்த இரண்டு சகோதரிகளையும் பார்த்து அவர்கள் அம்மா, ''சரி, சரி, கரடி ஒரு நாள் நிச்சயம் திரும்பி வரத்தான் போகிறது. நீங்கள் போய்க் கொஞ்சம் விறகு பொறுக்கி வாருங்கள்,'' என்றாள்.

தாய் சொல்லைத் தட்டாமல் காட்டுக்குப் போன பெண்கள் கண்களில் ஒரு விநோதமான உருவம் தென்பட்டது. கரடி சொன்ன இராட்சசக் குள்ளன் போல ஒரு குள்ளன் வெள்ளைத் தாடியோடு ஒரு பெரிய மரத்தை ஒட்டினாற்போல் மேலும்கீழும் குதித்துக் கொண்டிருந்தான். அருகில் சென்று பார்த்த பிறகுதான் அந்தக் குள்ளனுடைய நிலை விளங்கியது. குள்ளனது வெள்ளைத் தாடி மரக் கிளையில் நன்றாக மாட்டிக்கொண்டிருந்தது.

இருவரையும் குள்ளனும் பார்த்துவிட்டான். உடனே அவன் ஆத்திரமாக, ''என்ன வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்னை வந்து காப்பாற்றுங்கள் மடப்பெண்களே!'' என்று கத்தினான்.

இருவரும் ஒன்றும் தெரியாதது போல், ''உங்களுக்கு என்ன ஆயிற்று, குள்ள மனிதரே?'' என்று கேட்டார்கள்.

மேலும் ஆத்திரமடைந்த குள்ளன், ''வாத்து மடச்சிகளே! மரக்கிளையில் நான் தாடி மாட்டிக்கொண்டு தவிக்கிறேன். நீங்கள் பட்டுப்போன்றகன்னங்களோடு 'என்ன ஆயிற்று?' என்று பரிகாசமா செய்கிறீர்கள்? அறிவு கெட்டவர்களே!'' என்று மேலும் வசை பாடினான்.

இரண்டு பெண்களும் அவர்கள் சக்திக்கு முடிந்தவரை தாடியைப் பிடித்து இழுத்தார்கள். ஆனால் அவர்களால் குள்ளனை விடுவிக்க முடியவில்லை. தாடி நன்றாக மாட்டிக் கொண்டிருந்தது.

குள்ள ராட்சசனோ கண்டபடி பெண்களைத் திட்டித் தீர்த்தான். ''என்னைக் காப்பாற்ற வேறு வழி தெரியவில்லையா? முட்டாள்களே! ஆ... ஊ...'' என்று கத்தினான்.

பெண்களும் பலவாறு யோசித்து, ஒரு கத்திரிக்கோல் எடுத்து வந்து அவனது வெண் தாடியைக் கொஞ்சம் வெட்டி அவனை விடுவித்தனர். அதற்கு நன்றி கூறாமல் மறுபடியும் பெண்களைப் பார்த்து, ''என் அழகான தாடியைச் சேதப்படுத்தி விட்டீர்களே மடப்பெண்களே!'' என்று திட்டினான்.

பெண்கள் ஒன்றும்பேசாமல் அவர்கள் வழியே சென்றார்கள்.

இன்னொருநாள் காட்டில்போய்க் கொண்டிருந்த போது ராட்சசக் குள்ளன் திரும்பத் தென்பட்டான். இந்த முறை பெரிய ராட்சசக் கழுகு குள்ளனைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தது.

குள்ளன், ''காப்பாற்றுங்கள்...காப்

''உங்க தெருவில் எப்பப் பார்த்தாலும் அடிதடி சண்டையாவே இருக்கும்னியே, ஏன்?''

''சண்டைக் காட்சிகளையெல்லாம் எங்க தெருவில்தான் வச்சு ஷூட்டிங் எடுக்கிறாங்க!''

— குத்தாலம். வி. சுந்தரராமன்.







பாற்றுங்கள்...'' என்று கத்திக்கொண்டிருந்தான்.

பெண்கள் இருவரும் பெரும்பாடு பட்டுக் குள்ளனைக் கழுகின் பிடியிலிருந்து போராடிப் பிரித்து இழுத்துக் காப்பாற்றினார்கள். அதற்கும் குள்ளனுக்கு நன்றியில்லை. மறுபடியும் பெண்களை ஏசினான்.

மற்றொரு நாள் மாலை வெகு நேரமாகிவிட்டது. பெண்கள் காட்டு வழியாக வீட்டுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கே தரையில் பளபளவென்று விலையுயர்ந்த வைரக்கற்கள் மின்னின. கண்கள் கூசின. சுற்றுமுற்றும் பார்த்தால்... அங்கே அவர்கள் பல முறை காப்பாற்றி, யாரிடம் திட்டு வாங்கிக் கட்டிக் கொண்டார்களோ அதே ராட்சசக் குள்ளன் தன் முன் நிறையச் செல்வங்களைக் கொட்டிச் சரிபார்த்துக் கொண்டிருந்தான்.

பெண்கள் கொஞ்ச நேரம் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். நிமிர்ந்து பார்த்த குள்ளன் தங்களைக் கவனிப்பது தெரிந்து விட்டது. கோபப்பட்டுக் குள்ளன் திட்ட ஆரம்பிப்பதற்குள் அந்த இடத்தை விட்டு வேகமாக விலகினார்கள்.

அதற்குள் ஓர் உருவம் அவர்களை நோக்கி வருவது தெரிந்தது. யாரது? அவர்களுடைய பழைய நண்பன் கரடிதான்!

அது அந்தக் குள்ளனருகே வந்து நின்றது. உடனே குள்ளனுக்குப் பயம் எடுத்துக் கொண்டது. திருட்டு முழி முழித்துத் தடுமாறினான்.

அதற்குள் அந்த இடத்தைவிட்டு நகர்ந்து விட்ட பெண்களைக் கை தட்டிக் கரடி அழைத்தது. ''வெள்ளை ரோஜா! சிவப்பு ரோஜா! நான் உங்கள் நண்பன் கரடிதான். பயப்படாதீர்கள். வாருங்கள்,'' என்று அழைத்தது.

அவர்கள் அருகே வந்தார்கள்.

அப்போது குள்ளன், ''என்னை விட்டுவிடு நான் என்ன ஒரு சாதாரண ராட்சசக் குள்ளன். இந்த அழகான பெண்களை எடுத்துக்கொண்டு என்னை விடுவித்துவிடு. இந்தச் செல்வங்களையெல்லாம் நீயே எடுத்துக் கொள்ளப்பா,'' என்று கெஞ்சினான்.

அவன் சொல்வதையெல்லாம் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் கரடி அருகில் வந்து குள்ளனை ஒரே மிதிமிதித்துச் சாகடித்தது.

அந்தக் குள்ளன் மாண்ட மறு நிமிடமே, கரடி ஓர் அழகான ராஜகுமாரனாக மாறிவிட்டது!

ரோஜாப் பெண்கள் ஆச்சரியத்தோடு அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

அவர்களருகில் இருந்த ராஜகுமாரன், ''நான் இதோ, இந்த ராட்சசக் குள்ளனால் சபிக்கப்பட்டுக் கரடித் தோற்றத்தோடு இத்தனை காலம் வாழ்ந்தேன். இந்தக் குள்ளனை என்று நான் கொல்கிறேனோ அன்றுதான் எனக்குப் பழைய உருவம் வரும் என்று சொன்னார்கள். இன்று குள்ளனைக் கொன்றேன். என் செல்வங்களைத் திருடி, எனக்கே தானம் செய்வதாய்ச் சொன்னான் ராட்சசன். உங்களைக் கூடத் துன்புறுத்தியிருப்பானே! ஒழிந்தான் ராட்சசன். இனி நமக்கு விடுதலைதான். உங்கள் தாயாரையும் கூட்டி வாருங்கள். என்னுடைய அரண்மனைக்குப் போகலாம்,'' என்று அழைத்துச் சென்றான்.

அழகானதொரு மாளிகைக்கு அழைத்துச் சென்ற ராஜகுமாரன் அங்கு எல்லோருக்கும் அவர்களை அறிமுகம் செய்து வைத்தான்.

ராஜகுமாரன் தன் தம்பிக்குச் சிவப்பு ரோஜாவை மணமுடித்து வைத்தான். வெள்ளை ரோஜாவைத் தான் திருமணம் செய்து கொண்டு, ரோஜாக்களின் அம்மாவோடு எல்லோருமாய்ப் பல்லாண்டு காலம் சந்தோஷமாய் வாழ்ந்தார்கள்.



வேண்டாமே பரிசு வேட்டை!

"ஏங்க! நம்ம கோமதி ஓவியப் போட்டிக்கு அனுப்பினாளே ஒரு படம், அதற்கு முதற்பரிசு கிடைத்திருக்கிறது!'' கடிதத்தைப் படித்துவிட்டு மகிழ்ச்சியோடு குரல் கொடுத்தாள் பார்வதி.

அந்தப் பரிசுக்குப் பின்னால் ஒரு கதை இருந்தது!

செய்தித்தாளைப் படித்துக் கொண்டிருந்த வேதநாயகத்தின் பார்வையில் அந்தவிளம்பரம்பட்டது!

ஒரு விளம்பர நிறுவனத்தார் நடத்தும் ஓவியப் போட்டி முதற்பரிசு ஆயிரம் ரூபாய்! பள்ளி மாணவர், மாணவியர் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

அந்தச் சமயத்தில் சதீஷ்குமார் சென்னையிலிருந்து வந்திருந்தான். அவன் பார்வதியின் அக்காள் மகன். நன்றாகப் படம் வரைவான். சிறப்பாக வண்ணம் தீட்டுவான்.

வேதநாயகத்தின் மூளை உடனே ஒரு திட்டத்தைத் தீட்டி விட்டது. 'சதீஷ்குமாரைப் படம் வரையச் சொல்லி, கோமதியின் பெயரைப் போட்டு அனுப்பி விட்டால் என்ன?'

பார்வதியிடம் சொன்னார். அவள் மறுக்கவில்லை.

சதீஷ்குமாரிடம் இருவரும் சொன்னார்கள். அவனும் சம்மதித்தான்.

அவன் விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்தபடி ஓர் இயற்கைக் காட்சியை மிக அழகாக, நேரில் காண்பது போல் வரைந்து விட்டான்.

படத்தின் பின்புறம் கோமதியிடம் ஒரு கையெழுத்து வாங்கிக் கொண்டார் வேதநாயகம். 'அவளிடம் போட்டி பற்றிய செய்திகளைச் சொன்னால் குழப்பமடைவாள். அதனால் அவளுக்குத் தெரிய வேண்டாம்,' என்று நினைத்தார் அவர்.

பள்ளிக்குச் சென்றார். தலைமை ஆசிரியர் முத்துவேலரிடம் படத்தைக் காட்டினார்.

தலைமை ஆசிரியர் மிக நல்லவர். திறமைசாலிகளைக் கண்டால் பாராட்டக்கூடிய இயல்பு உடையவர். அவர் சொன்னதை நம்பினார்.

''அப்படியா, மிகுந்த மகிழ்ச்சி! கோமதி இவ்வளவு அற்புதமாக வரைவாள் என்று எனக்குத் தெரியாதே...'' என்றவர், அவர் காட்டிய இடத்தில், 'இது கோமதி வரைந்த படம் என்பதற்குச் சான்று அளிக்கிறேன்,' என்ற வரிக்குக் கீழே ஒரு கையெழுத்தைப் போட்டுக் கொடுத்தார்.

பள்ளிக்கூடம் முடிந்து கோமதி வந்தாள். ''கோமதி, ஓவியப்போட்டியில் உனக்கு முதற் பரிசு கிடைத்திருக்கிறது!''

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ''நான் எங்கே ஓவியப் போட்டியில் கலந்து கொண்டேன்? போட்டிக்குப் படம் போடுகிற அளவுக்கு எனக்கு வரையத் தெரியாதே!''

பூதலூர் மஞ்சு



"பையனை ஏன் இப்படி அழவிட றீங்க? அவன் கேட்பதை வாங்கிக் கொடுங்களேன்."

"வெளிநாட்டுக் குண்டு சிக்கியது'ன்னு பேப்பரில் படிச்சேன். அந்தக் 'குண்டை' வாங்கித் தரச் சொல்கிறான்."

— நந்தி.

அவளிடம் உண்மையைச் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது என்று புரிந்து கொண்ட வேதநாயகம், "படத்தை சதீஷ்குமார் வரைந்தான். உன் பெயரைப் போட்டு அனுப்பியிருந்தோம். அதற்குத்தான் பரிசு கிடைத்திருக்கிறது," என்று சொல்லி விட்டார்.

'பிறர் எழுதியதைப் பார்த்து அது கதையோ, பாட்டோ, படமோ, துணுக்கோ எதுவாக இருந்தாலும் 'காப்பி' அடிக்கக் கூடாது. அடுத்தவருடைய படைப்பை எழுதி உங்கள் பெயரைப் போட்டுக் கொள்வது தவறு' என்று 'பிருந்தாவனம்' பத்திரிகை ஆசிரியர் எழுதியிருந்தாரே! அதை இவர்கள் படிக்கவில்லையா?

கோமதிக்கு ஒன்றும் புரியவில்லை. அமைதியாக இருந்தாள்.

"பரிசு ஆயிரம் ரூபாய்! அந்தப் பணத்திலே உனக்குத் தீபாவளிக்கான உடை எடுக்கலாம். உன் அக்காளுக்குப் புடைவை எடுக்கலாம். நீ வெகு நாளாகக் கேட்டாயே 'மழைக் காப்பு உடை' அது வாங்கலாம்!" வேதநாயகம் அவளுடைய சிந்தனைகளைத் திசை திருப்பினார்.

"உன்னுடைய படத்துக்குப் பரிசு கிடைத்திருக்கிறது என்று சொல்கிறோம். முகத்தில் கொஞ்சங்கூட மகிழ்ச்சி இல்லையே!" பார்வதி அவளை அருகில் அழைத்து அணைத்துக் கொண்டாள்.

"சதீஷினுடைய படம் என்று சொல்லுங்கள். நான் எங்கே வரைந்தேன்?" கோமதி அழுத்தமாகக் கூறினாள்.

பரிசளிப்பு விழாவுக்கான அழைப்பு வந்துவிட்டது.

கோமதி வேண்டிக் கொண்டாள்: "கடவுளே! இது எனக்கு உரிமையில்லாத பரிசு. என் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நல்ல புத்தியைக் கொடு. இவ்வளவு வயதாகியும் அவர்கள் தாம் செய்வது இன்னதென்று தெரியாமல் செய்கிறார்கள்!"

தலைமை ஆசிரியர் முத்து வேலர் கோமதியை அழைத்தார்.

"கோமதி உன்னால் இந்தப் பள்ளிக்கூடத்துக்கே பெருமை. விழாவுக்கு நான் நிச்சயமாக வருகிறேன். நீ இதுபோல இன்னும் பல பரிசுகள் வாங்க வேண்டும்." உள்ளன்போடு வாழ்த்தினார்.

அந்தப் பாராட்டுக்களை கேட்டு அவளுடைய உள்ளம் மகிழ்ச்சியடையவில்லை. அவளுடைய குழப்பம் இன்னும் அதிகரித்தது.



அவள் வகுப்பில் நன்றாகப் படிக்கக்கூடியவள். அடுத்த வாரம் ஒரு தேர்வு இருந்தது. இரண்டு மூன்று நாட்களாய் அவளுடைய நெஞ்சில் இருந்த துயரச் சுமை அவளைச் சரியாகப் படிக்க விடாமல் செய்தது.

'கடவுளே இது என்ன சோதனை!' என்று புலம்பியது அவளுடைய இதயம்.

பரிசளிப்பு விழா.

எங்கு நோக்கினும் தோரணங்கள். வண்ண விளக்குச் சரங்கள்!

மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே கோமதி வந்தாள். அவள் பரிசைப் பெற்ற போது காமிராக்களின் 'பிளாஷ்' ஒளி மின்னியது.

பரிசு பெற்ற படங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. 'கோமதியின் படம்' எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது.

அந்த விழாவில் மற்றொரு பரிசளிப்பு நிகழ்ச்சியும் நடந்தது.

அதே நிறுவனம் ஓராண்டுக்கு முன் நடத்திய மெல்லிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசுகளையும் அமைச்சர் வழங்கினார்.

அமைச்சருடன் சிறப்பு விருந்தினராக வந்திருந்த ஒரு பெண்மணி ஒரு வேண்டுகோள் விடுத்தார்:



''இப்போது மெல்லிசைப் பாடலுக்காகப் பரிசு பெற்றவர்களை இந்த மேடையில் பாடுமாறு வேண்டுகிறேன். அந்தப் பாடல்களைக் கேட்க எங்கள் உள்ளம் ஆவலாக இருக்கிறது.''

முதற் பரிசு பெற்ற பெண் மேடைக்கு விரைந்து வந்தாள். 'மைக்'கைப் பிடித்துக் கொண்டு உள்ளத்தில் ஆர்வம் பொங்க, முகத்தில் மகிழ்ச்சி துள்ள, குரலின் இனிமை எல்லோருக்கும் தேனாக இனிக்கப் பாடினாள். அரங்கம் அதைக் கேட்டு ஆனந்தத்தில் கையொலி எழுப்பியது.

இரண்டாவது, மூன்றாவது பரிசு பெற்றவர்களும் வந்து இனிமையாகப் பாடினார்கள்.

'பாடலோடு விட்டு விடுவார்கள்' என்று வேதநாயகமும் பார்வதியும் நினைத்தார்கள்.

அந்தப் பெண்மணி விழாவை ஏற்பாடு செய்தவர்களை அழைத்து மெதுவாக ஏதோ கூறினாள். சற்று நேரத்தில் மேடைக்கு அருகே மூன்று கரும்பலகைகளைத் தூக்கி வந்து அவற்றுக்குரிய தாங்கியில் நிறுத்தினார்கள்.

கோமதியின் உள்ளம் பரபரப்புக்கு உள்ளாயிற்று.

அந்தப் பெண்மணி, ''அடுத்த வேண்டுகோள். இங்கே கரும்பலகைகளை வைத்துள்ளோம். ஓவியப் போட்டியில் பரிசு பெற்றவர்களை அழைக்கிறோம். அவர்களுடைய கைவண்ணத்தை இங்கே காட்ட வேண்டுகிறோம்.

கோமதியின் பெற்றோருடைய உள்ளம் நடுங்கியது. செய்வதறியாது நின்றார்கள். ஆழந்தெரியாமல் காலை விட்டு விட்டதை உணர்ந்தார்கள். கோமதியும் நெருப்பில் எறும்பாகத் தவித்தாள்!

''முதற்பரிசு பெற்ற செல்வி கோமதியை அழைக்கிறோம்.''

அந்த அழைப்பைக் கேட்டவுடன் கோமதி உள்ளம் துடிக்க நாற்காலியை விட்டு எழுந்தாள். தலை சுற்றிக் கொண்டு வந்தது. கண்கள் இருளடைந்தன. அடுத்த வினாடி மயக்கத்தில் கீழே விழுந்து விட்டாள்.

அவளுடைய பெற்றோரின் நெஞ்சம் பதற்றம் அடைந்தது.

அவளைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார்கள்


கோமதியின் மயக்கம் தெளிந்து விட்டது. வீட்டுக்குத் திரும்பினார்கள். ஆனால் இரவெல்லாம் அவளுக்குக் கடுமையான காய்ச்சல். முனகிக் கொண்டே இருந்தாள்.

ஓர் ஆசை — நியாயமற்ற ஆசை எந்த அளவுக்குக் கொடுமைப்படுத்திவிடும் என்பதை வேதநாயகமும் பார்வதியும் உணர்ந்து கொண்டார்கள்.

அப்போது தலைமை ஆசிரியர் முத்துவேலர் கோமதியின் வீட்டுக்கு வந்தார்.

''விழாவில் கோமதி மயக்கம் போட்டு விழுந்தது எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. ஏன், அவளுக்கு என்னாயிற்று? நன்றாகத் தானே இருந்தாள். இப்போது அவளுக்கு நல்ல ஓய்வு தேவை. கவனித்துக் கொள்ளுங்கள்.''

அவர்கள் மௌனம் சாதித்தார்கள்.



"அவள் நல்லவிதமாக உடம்பு தேறி வரட்டும். அவள் முதற்பரிசு பெற்றதைப் பாராட்டி, பள்ளிக்கூடத்தில் ஒரு நிகழ்சசி ஏற்பாடு செய்யலாம் என்று இருக்கிறேன். இந்த விழாவில் அவள் போட முடியாமல் போன படத்தைப் பள்ளி விழாவில் ஜாம் ஜாம் என்று போடட்டும்..." அவருடைய குரலில் மகிழ்ச்சியும் பெருமையும் பொங்கின.

அவர்கள் அவரைக் கையெடுத்துக் கும்பிட்டார்கள். "அந்த மாதிரி எதுவும் வேண்டாம் சார்! கோமதியை இதற்கு மேல் துன்புறுத்த நாங்கள் விரும்பவில்லை."

முத்துவேலர் ஒன்றும் புரியாமல் திகைத்தார். கோமதியைத் தொடர்புபடுத்தி அவர்கள் செய்த தவற்றை அவரிடம் எடுத்துக் கூறினார்கள். உள்ளம் நெகிழ்ந்து மன்னிப்புக் கேட்டார்கள்.

நடந்த நிகழ்ச்சிகள் அவரை வேதனைக்குள்ளாக்கின. "கோமதி நன்றாகப் படிக்கக்கூடிய பெண். அந்த ஆர்வம் தடைப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

"கலைத் திறமை என்பது இயல்பாக — ஆர்வத்தால் வரக்கூடியது. நம்மைப் போன்றவர்கள் தூண்டுகோலாக இருக்கலாமே தவிர தவறான பாதையைக் காட்டுபவர்களாக இருக்கக் கூடாது. தவறான பாதையைக் காட்டினால் குழந்தைகளின் கலை வளராது; பழிதான் வந்து சேரும்; நற்பெயர் பிற துறைகளில் அவர்கள் உண்மையான ஆர்வமும் திறமையும் கொண்டவர்களாக இருந்தாலும், இதைப் போன்ற நிகழ்ச்சிகள் அவர்கள் மீது சந்தேகத்தை ஏற்படுத்தும்; முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகி நிற்கும்.

"குழந்தையிடம் இயல்பாக உள்ள திறமைகளைக் கண்டறிந்து அவற்றை முறையாக வளர்ப்பது நல்லது! பரிசுகள் நமக்கு முக்கியம். அதை விட மனிதத் தன்மையும், தன்மானமும் மிக மிக முக்கியம்! இந்தப் பரிசு, முறையாக இன்னொருவருக்குப் போக வேண்டிய பரிசு. அதைத் தடுத்து விட்டீர்கள். குழந்தையின் பெருமைக்கும் ஊறுவிளைவித்து விட்டீர்கள்; அவளுடைய மனநலத்தையும் சீர் குலைத்து விட்டீர்கள்.

"பிள்ளைகளுக்குப் புத்தி சொல்லலாம். பெற்றோருக்கு? எல்லாவற்றையும் உணர்ந்த நிலையில் வருத்தம் தெரிவித்துள்ளீர்கள். நான் இதை யாரிடமும் கூற மாட்டேன். அவளிடமும் நினைவுபடுத்த மாட்டேன். காலம் அவளுடைய துன்பத்தை மாற்றும்.."

முத்து வேலர் மனம் நெகிழ்ந்து கூறினார். "இந்தப் பரிசுத் தொகையை அந்த நிறுவனத்துக்கே திருப்பியனுப்ப முடிவு செய்து விட்டோம். இந்தக் கடிதத்தில் ஒரு கையெழுத்துப் போடுங்கள்."

உள்ளம் திருந்தியதோடு அவர்கள் எடுத்த அந்த முடிவு அவருக்கு நம்பிக்கையை ஊட்டியது. இனி, கோமதியின் எதிர்காலம் இவர்கள் கரங்களில் செழுமையாக இருக்கும்!

அந்த நினைப்பு அவருடைய நெஞ்சுக்கு நிம்மதியை அளித்தது.







ஒருமைப் பாட்டைக் காத்திடுவோம்!

ஜி. ஜெயராமன்



சிறுவன் ஒருவன் நேருவிடம்
சென்றே கேட்டான் 'ஆட்டோகிராஃப்!'
'தருவாய் நோட்டை' என வாங்கித்
தன்கை ஒப்பம் பதித்திட்டார்!

அறிவுரை ஏதும் இல்லாத
ஆங்கில ஒப்பம் தனைக் கண்டு
சிறுவன் வருந்தி நேருவிடம்,
'சுபகாமனாயேம் வேண்டும்,' என்றான்.

'பிறரை மதித்து நீ நடந்தால்,
பலபேர் உன்னை மதிப்பார்கள்;
அறிவாய்!' என்றே எழுதிட்டார்;
அழகாய் இந்தி மொழி தனிலே!

'எனினும் 'தாரிக்' எழுதிடவே,
ஏனோ மறந்தீர்?' எனச் சிறுவன்
பணிவாய்க் கேட்க, நேருவுமே,
போட்டார் தேதி 'உருது'விலே!

'ஆட்டோ கிராஃபை மும்மொழியில்
அளித்தது ஏனோ?' எனச் சிறுவன்
கேட்டான்; நேரு மறுமொழியாய்க்
'கேட்டது நீயே,' எனச் சொன்னார்!


"நீதான் 'ஆட்டோ கிராஃப்' என்றே,
நல்ல ஆங்கிலம் தனில் கேட்டாய்;
தோதாய் அந்த மொழி தனிலே
தந்தேன் என்கை ஒப்பத்தை!

இந்தியில் 'சுபகாம னாயேம்' என்றாய்;
எழுதினேன் 'அறிவுரை' அம்மொழியில்!
தந்திடு 'தாரிக்' என 'உருது
தனிலே கேட்டாய்; தந்துவிட்டேன்!'


மும்மொழி தனிலே நீ கேட்டாய்!
முறையாய்த் தந்தேன் அவ்விதமே!
தம்பி! நீயும் எனைப் போலே,
தேறப் பலமொழி பயில்." என்றார்!

நேரு சொன்ன வழி தனிலே
நாமும் பலமொழி கற்றிடுவோம்!
ஊரில், நாட்டில், நமக்குள்ளே,
ஒருமைப் பாட்டைக் காத்திடுவோம்!









இளவரசர்கள் குமணனும் அமணனும் புலவரிடம் பாடம் படித்தார்கள்.
புலவரே! வனபோஜனத்துக்குப் போவோமா?
கதை சொல்கிறீர்களா?
இருவர் விருப்பத்தையும் ஒரு பூர்த்தி செய்தார்...
கானகத்தின் அதிசயங்களை அறிந்து கொள்வதும் படிப்புதான்... இது முதிரமலை.
கொடை வள்ளல் குமணன்
கதை: ஆனந்தி
படம்: கிஷு
அண்ணா! அதோ பாருங்கள்! எத்தனை பெரிய குரங்கு! பலாப்பழத்தையே உடைத்து விட்டதே!
ஒரு நாட்டுக்கு வனவளம் முக்கியமானதும்... வனங்கள் செழித்தால் மழை பொழியும்...
விருந்தில் பங்கேற்க மந்திகள் ஓடி வருகின்றன!
காட்டு ஆறு ஒன்றின் கரையில் உணவருந்தினர்...
அடே அப்பா! மீன்கள் எவ்வளவு செழுமை!
உன் அரசாட்சியில் புலவர்களும் இப்படிச் செழிக்கவேண்டும்!


கதை சொல்கிறேன், என்றீர்களே...
...தகடூரைத் தலைநகராகக் கொண்டு குதிரை மலைப் பிரதேசத்தை ஆண்டு வந்தான்...
சொல்கிறேன், கவனமாய்க் கேளுங்கள்... அதியமான் நெடுமானஞ்சி மாவீரன், கொடை வள்ளல்....
வளம் மிக்க நம் நாட்டைக் கைப்பற்ற எதிரிகள் காத்திருக்கிறார்கள்....
...நமது நால்வகைப் படையினரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
புலவர்களைத் தவிர வேறு யாரும் நம் நாட்டில் தைரியமாக நுழைய மாட்டார்கள்!
அஞ்சியைக் கண்டு அஞ்சாமலிருக்க முடியுமா?
புலவர் பெருஞ்சித்திரனார் தகடூர் வந்தார்...
ஐயா அசலூர் போலிருக்கு! இது அதியமான் ஆளும் நாடுங்க... யாரும் பிறர் சொத்துக்கு ஆசைப் படமாட்டாங்க!
இதென்ன, நெல்லும் இதர தானியங்களும் குவிந்து கிடக்கே! யாராவது எடுத்துக் கொண்டு போய் விடமாட்டார்களா?
அட!


புலவர் பெருஞ்சித்திரனார் அரச சபைக்குச் சென்றார்...
அரசே! வீட்டின் மேற்கூரையில் அரணிக்கட்டை செருகப்பட்டு அடக்கமாக இருக்கும். ஆனால் எடுத்துக் கடைந்தால் தீ உண்டாகும். அதைப்போல் அடக்கமாக இருக்கும் நீங்கள், தேவைப் படும் போது வீரத்தைக் காட்டுகிறீர்கள்! ✶
✶ புறநானூறு
ஆகா! என்ன உவமை!
கருத்துச் செறிவு!
அருமையான பாடல்...
இவ்வளவு சிறப்பாகப் பாடிய உங்களுக்கு எத்தனை சன்மானம் அளித்தாலும் போதாது!
வள்ளல் அதியமான் வாழ்க!
புலவர் கதையை நிறுத்தி...
குமணா! அமணா! மறவாதீர்கள், வீரனுக்கு அணிகலன் அடக்கமே!
அதியமானின் கொடைத்திறனைப் புலவர்கள் பாடவில்லையா?
ஒரு யானையின் துதிக்கையில் அகப்பட்ட உணவு அதன் வாய்க்குள் போவது எவ்வளவு உறுதியோ, அவ்வளவு நிச்சயம், அதியமானிடம் செல்வோர் பரிசு பெறுதலும் என்று பாராட்டியிருக்கிறார்கள்!



குமணன் ஆர்வத்துடன்...
குருவே! அதியமானின் வள்ளல் தன்மை பற்றி மேலும் சொல்லுங்கள்!
ஒருநாள் அதியமானைக் காண ஔவை சென்றாள்....
...அறியாமையால் வாயில் காப்போர் அவளை வழிமறித்து விட...
'புலவருக்கு அடைக்காத வாசல் இது' என்று எண்ணி வந்தேன்... புலவர்களை அறிந்து போற்றும் வேறு அரசர்களிடம் போகிறேன்...
ஔவை மனம் வருந்தித் திரும்பிவிட்டதைக் கேள்விப்பட்ட அமைச்சர் அந்தப்புரம் விரைந்து...
அரசே! அரசே! தவறு நேர்ந்து விட்டது!
விஷயமறிந்த அதியமான்...
ஆ! ஔவையைச் சமாதானப் படுத்தி அழைத்து வருவேன்! ராணி! என்னோடு வா!
சாலையோடு நடந்த ஔவையை முந்திச் சென்ற அதியமான்...
ஔவையே! அறியாமையால் நடந்த பிழையை மன்னிக்க வேண்டும். எங்கள் விருந்தினராகச் சில காலமாவது தங்க வேண்டும்...


ஔவை அதியமானின் அழைப்பை ஏற்று...
அரசே! வாயில் காப்பவன் செய்த தவறை உன் தவறாக எண்ணி மன்னிப்புக் கேட்கும் உன் உயர்ந்த உள்ளத்துக்காக நான் அரண்மனைக்குத் திரும்பி வருகிறேன்...
குருவிடம் கதை கேட்டு வந்த குமணன்...
ஆகா! அதியமானின் பண்பாடு எவ்வளவு உயர்ந்தது!
நீங்களும் அவனைப் போல் சிறந்து விளங்க வேண்டும்...
... அதியமானின் கொடை உள்ளத்தைச் சித்தரிக்கும் இன்னொரு நிகழ்ச்சியும் உண்டு...
சொல்லுங்கள்! சொல்லுங்கள்!
ஒரு சமயம் அதியமான் உயரமான மலை மீது ஏறி அபூர்வமான நெல்லிக்கனி ஒன்றைப் பறித்தான்...
இது அமிர்தம் போன்றது; இதை உண்டால் பல்லாண்டு காலம் உயிர் வாழலாம்...
நெல்லிக்கனியுடன் அதியமான் அரண்மனை திரும்பிய போது...
அரசே! ஔவையார் தங்களைக் காண வந்திருக்கிறார்...
இதோ வந்து விட்டேன்...


உடைகூட மாற்றிக் கொள்ளாமல் ஔவையைக் காணச் சென்றான்...
நலமுடன் நீடு வாழ்வாயாக!
தங்கள் தமிழ் கேட்டு இன்புற எத்தனை காலம் வாழ்ந்தாலும் போதாது!
இந்தச் சுவையான நெல்லிக் கனியை உண்டு இளைப் பாறுங்கள். உடை மாற்றிக் கொண்டு நொடியில் வருகிறேன்...
அதியமான் அப்பால் சென்றதும்...
அடடா! என்ன ருசி!
நெல்லிக்கனியை உண்டு முடித்தாள் ஔவை...
என் சோர்வெல்லாம் போய் விட்டதே! புத்துணர்ச்சி பிறக்கிறதே!
கேட்டுக் கொண்டே வந்த அதியமான்...
ஆம்! நீங்கள் உண்ட நெல்லிக் கனி அமிர்தம் போன்றது. பல ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் கிடைக்கும். மலை ஏறி அலைந்து திரிந்து கண்டு பிடித்தேன்...


அரசே! உன்னைப் போன்ற வள்ளலை உலகம் கண்டதில்லை. அமுதத்தை ஒரு கிழவிக்கு அளித்தாயே...
இல்லை தாயே! தமிழுக்கு அளித்தேன்!
அமணனுக்கும் குமணனுக்கும் கதை கூறி முடித்தார் புலவர்... ..அமணன்...
குருவே என்னதான் சொல்லுங்கள், அரசர்க்கு வீரம் தான் முக்கியம்; அதற்குத்தான் முதலிடம்.
குமணன்...
அப்படியே இருந்தாலும், தன் ஆயுளைப் பெருக்கிக் கொள்ள நினைக்காமல் நெல்லிக் கனியை ஔவைக்குத் தந்தானே அது மாபெரும் வீரம் தானே!
வீரம் என்பது போர்க்களத்தில் மட்டும் காட்டப் படுவதில்லை. சத்தியத்தையும் தர்மத்தையும் காப்பதில், தியாகம் புரிவதில் வீரம் இருக்கிறது!
ஆகா! சரியாகச் சொன்னாய்!
அமணன் கோபத்துடன்...
அண்ணன் அரசாளத் தொடங்கினால் ஆள்வதற்கு ராஜ்யமே இராது! எல்லாவற்றையும் தானம் பண்ணி விடுவான்!
தவறு! குமணன் பெரும் புகழ் பெறுவான்!



தொடர்ச்சி 49ம் பக்கம்



மரணப் படுக்கையில் இருந்த வள்ளல் வெளிமான் தமது தம்பியை அழைத்து...
தம்பி, இவருக்கு வேண்டிய பொன் கொடு!
ஆகட்டும்.
இளவெளிமான், பெருஞ் சித்திரனாரைத் தனியே அழைத்துப் போய் ஒரு பொன் கொடுத்தான்.
புலவர்களாம் புலவர்கள்! சாகும்போதுகூட ஒருவரைச் சும்மா விடமாட்டீர்களே!
அவமதிக்கப்பட்ட பெருஞ்சித்திரனார்...
வேண்டாம்! போய் வருகிறேன்!
...முதிரமலை நாட்டில் குமணனிடம் வந்து சேர்ந்தார்....
மன்னா! பேரரசர்கள் எல்லாம் நாணும்படி, உன் வள்ளல் தன்மை தெரியும்படி வழங்கு!
குமணன் யோசித்தான்...
இவரை யாரோ அவமதித்திருக்கிறார்கள்... இல்லாவிட்டால் இப்படி கேட்கமாட்டார்...


யானை சுமக்கும் அளவு பரிசில்கள் வழங்கினான் குமணன்...
யானையோடு சேர்த்து ஏற்றுக் கொள்ளுங்கள்!
குமணா! உன் கொடையுள்ளத்தைச் சரித்திரம் கொண்டாடும்!
பெருஞ்சித்திரனார் நேரே வெளிமானூர் சென்று...
இளவெளிமானே! இந்த யானையை உனக்கு நான் பரிசாக அளிக்கிறேன்! பெற்றுக் கொள்.
பெருஞ்சித்திரனார் தமது ஊர் திரும்பினார். அவர் மனைவி...
இப்படி அள்ளிக் கொடுத்த வள்ளல் யார்?
வேறு யார்? குமணன்தான். யானை போக பாக்கி இது!
குமணன் காரியம் எதுவும் தம்பி அமணனுக்குப் பிடிக்கவில்லை...
நாடு முழுவதும் புலவர்களுக்குத் தானமாகப் போவதற்குமுன் அண்ணனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி விடுகிறேன்...
சரியான காரியம்!
அமணன் செய்யும் சூழ்ச்சிபற்றி ஒற்றர் மூலம் அறிந்த குமணன்...
அருமைத் தம்பி!... நாடு வேண்டும் என்று கேட்டால் கொடுத்து விடுவேனே... எதற்காகச் சூழ்ச்சி?


ஓலை எழுதி வைத்து விட்டு இரவோடு இரவாகக் காட்டுக்குப் போய் விட்டான் குமணன்...
நேற்று அரசன், இன்று ஆண்டி! என்ன விசித்திர வாழ்க்கை!
மறுநாள்...
கேட்டால் கொடுத்திருப்பானாம்! ஹஹ்ஹஹா! பயந்து ஓடிவிட்டான்!
அமணன் அரியாசனம் ஏறினான். பட்டத்து யானையில் பவனி வந்தான்...
இப்படியும் ஒரு தம்பியா! அண்ணனைக் காட்டுக்குத் துரத்தி விட்டானே!
ஒற்றர் தலைவன் அமணனிடம்....
மக்கள் குமணனிடம் பேரன்பு கொண்டிருக்கிறார்கள்.. கிளர்ந்து எழலாம்...
அமணன் துர்மந்திரியிடம் யோசனை கேட்க...
குமணன் உயிரோடு இருக்கும் வரைதான் கவலை. அவன் தலையைக் கொண்டு வருகிறவருக்கு ஆயிரம் பொன் பரிசு அறிவிப்போம்!




மறுநாள்....
குமணன் தலைக்கு ஆயிரம் பொன் பரிசு...
சீ! அண்ணன் காட்டில் வாழ்வது கூடவா பிடிக்கவில்லை? அநியாயம்!
மக்களில் சிலர் ரகசியமாகக் கூடி....
பொன்னுக்கு ஆசைப்பட்டு யாராவது குமணனைக் கொன்று விட்டால் என்ன செய்வது....?
சாத்தனார் என்ற புலவர்...
குமணனை எச்சரிக்க வேண்டும். எனக்குத் துணையாக ஓர் இளைஞன் வரட்டும்!
நான் வருகிறேன்.
இருவரும் பல நாள் தேடி...
அதோ ஒரு மலைக் குகை...
... குமணனை நெருங்கி....
அரசே! தாங்கள் காட்டில் வாழ்வதைக் கூட அமணனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. தங்கள் தலைக்கு ஆயிரம் பொன் பரிசு அறிவித்திருக்கிறான்!
அட, என் தலைக்கு அவ்வளவு மதிப்பா!..


இருக்கட்டும், தாங்கள் யார்?
புலவன்; பெருந்தலைச் சாத்தன். உங்களைக் காணவந்த இடத்தில் குமணனின் கதி பற்றிக் கேள்வியுற்று...
... உங்களை எச்சரிக்க இந்த இளைஞனின் துணையுடன் வந்தேன்.
நீங்கள் என்னைக் காணவந்த காரணம்?
உங்களைப் பாடிப் பரிசில் பெற எண்ணினேன். ஆனால் உங்களை இந்த நிலையில் காண்கிறேனே!...
சற்று யோசித்து குமணன்...
சாத்தனாரே, வருந்த வேண்டாம்! இதோ வாள். என் தலையை வெட்டி எடுத்துப்போய்த் தம்பியிடம் கொடுங்கள். உங்கள் வறுமை தீர்ந்து விடும்...
கொடைவள்ளல்களில் உமக்கு நிகர் யாருமில்லை!
சற்று நேரத்தில் வாளுடன் புறப்பட்டார் புலவர்...
குமணா! உங்கள் சிரம் இனி என்னுடையது. அதைப் பத்திரமாகப் பாதுகாத்து வையுங்கள். திரும்பி வருகிறேன்.


இதற்கிடையில் அமணன் மனம் கலங்கியது... அரசி...
அரசே! தூக்கம் வரவில்லையா?
எப்படி வரும்? நான் செய்தது பெரும் பாவம் அல்லவா?
குமணனை யாராவது கொன்று விட்டால்...? தெய்வம் என்னை மன்னிக்குமா?
வருந்தாதீர்கள்! அண்ணனைக் கண்டு பிடித்து நாட்டைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்... நீங்கள் அரசாண்டது போதும்...
ம்...
மறுநாள் அரச சபையில் அமைச்சர்...
மன்னா! ஏன் கண்கள் சிவந்திருக்கின்றன?
அண்ணன் நினைவாகவே இருக்கிறேன். தூக்கமே வருவதில்லை...
அப்போது பெருந்தலைச் சாத்தனார் வந்து...
இதோ, குமணனின் வாள்! இந்தத் தட்டில் அவன் தலை! பரிசைக் கொடு!


அமணன் பயங்கரமடைந்து...
ஐயோ! இதென்ன கொடுமை!
புலவனுக்கு இல்லை' என்று கூற அந்த வள்ளலால் முடியவில்லை . . . .
... அதனால் தன் தலையையே அளித்து, அதற்குண்டான பரிசைப் பெற்றுக் கொள்ளச் சொன்னான். மங்காப்புகழை அடைந்து விட்டான்.
புலவர் மேலும் அமணனை நெருங்கி...
ம்ம்.. வாளையும் தலையையும் பெற்றுக் கொண்டு, பரிசைக் கொடு!
ஆ! என் பாதகச் செயலுக்கு நிச்சயம் எனக்கு நரகம் தான்...
... என் மனம் மாறி, அண்ணனைக் கண்டு பிடித்து அரசாட்சியைத் திரும்பவும் அவரிடம் ஒப்படைக்க எண்ணியிருந்தேனே. அதற்குள் இப்படி ஆகி விட்டதே!
சாத்தனாரே! புலவர்களைப் போற்றிய குமணனை ஒரு புலவரா-கிய நீர் எப்படிக் கொன்றீர்? எவ்வாறு மனம் வந்தது...
மெய்யாலுமே உன் மனம் மாறிவிட்டதா, என்ன?


அரசி வந்து...
சாத்தனார் தாம் நாடகமாடியதை விளக்கி...
அமணா! அமைதி அடைவாய். உன் அண்ணன் பத்திரமாக இருக்கிறான். இது மரத்தினான தலை!
ஆ! அப்படியா!
ஆம், புலவரே...! அவர் சரியாகத் தூங்கிப் பல நாட்களாகி விட்டன. இப்போது இவர் பழைய அமணன் இல்லை...
குமணனை அழைத்து வர, அமணன் தானே நேரில் சென்றான்... நடந்ததைக் கூறி...
என்னை மன்னித்து விடுங்கள், அண்ணா!
இந்தப் பெருந்தலைச் சாத்தனார் உன்னைத் தண்டித்தும் விட்டார். எப்படிப்பட்ட அதிர்ச்சி உனக்கு!
அண்ணா! உன் புகழ் இவர் பாடலால் என்றென்றும் நிலைத்திருக்கும்.
குமணன் நல்லாட்சி நடத்தினான். அமணன் பக்கபலமாக நின்றான்.
வாழ்க, வள்ளல் குமணன்!



Colour photo : M. Parwathisam



8

எங்கேயோ ஏதோ விழா தொடங்குகிறார்கள். அங்கிருந்து தான் கேட்போர் காதுகள் செவிடாகும்படி சினிமாப் பாட்டுக்களை ஒலி பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஆசிரியைகள் மாணவிகள் எல்லோருக்குமே புரிந்தது.

தமிழாசிரியை எழில் வதனி தன் காதுகளைப் பொத்திக் கொண்டு வெளியே வந்து நின்றார். அவரைப் போலவே மற்ற வகுப்பு ஆசிரியர்களும் வெளியே வந்து தவித்துக் கொண்டிருப்பதை அவர் கவனித்தார்.

சில நிமிடங்களில் தலைமை ஆசிரியையும் தம் அறையை விட்டு வெளியே வந்து, வேகமாகப் பவித்ராவின் வகுப்புக்கு வந்தார். தலைமை ஆசிரியை வகுப்பை நோக்கி வருவதைக் கவனித்த தமிழாசிரியை வகுப்பு வாயிலுக்கு வந்து நின்றார்.

தலைமை ஆசிரியை அந்த வகுப்புக்குள் எட்டிப் பார்த்துப் பவித்ராவைக் கையசைத்துத் தம் அருகே அழைத்தார். எல்லா மாணவிகளும் எழுந்து நின்றார்கள். பவித்ரா தலைமை ஆசிரியை முன் சென்று பணிவோடு நின்றாள்.

''கொஞ்சங் கூட யோசனை இல்லாமல் இப்படிச் சினிமாப் பாட்டை ஊரெல்லாம் எதிரொலிக்கும்படி ஒலிபெருக்கி மூலம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்களே, யார் செய்கிறார்கள், எங்கே செய்கிறார்கள் என்பதைத் தெரிந்து வர இரண்டு பியூன்களையும் அனுப்பியிருக்கிறேன். இந்த வட்டாரத்திலே மூன்று பள்ளிக்கூடங்கள் இருக்கே. எல்லா இடத்துக்கும் இது கேட்கும். எந்தப் பள்ளியிலும் பாடம் நடத்த முடியாது. நீ போய், எல்லா வகுப்பு மாணவத் தலைவிகளையும் அழைத்துக் கொண்டு வா. நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு.''

புனைவு அமுதன்

என்றார் தலைமை ஆசிரியை.

''ஆண்டு இறுதித் தேர்வு நெருங்கி வருகிற நேரத்திலே இப்படி ஓர் இடையூறு. பிள்ளைகள் படிப்பை எவ்வளவு தூரம் பாதிக்கும்! இந்தத் தொந்தரவு கொஞ்ச நேரம் இருக்குமா, தொடர்ந்து இருக்குமா, தெரியவில்லையே மேடம்!'' என்றார் தமிழாசிரியை.

''தெரிந்து வரத்தான் ஆட்களை அனுப்பியிருக்கிறேன். மற்றப் பள்ளிகளிலே எப்படியோ?'' என்று வேதனைன்ய முகத்தில் தேக்கிக் கொண்டு சொன்னார் தலைமை ஆசிரியை.

பவித்ரா ஒவ்வொரு வகுப்பாகச் சென்று வகுப்புத் தலைவியரை அழைத்தாள். எல்லோருமாகச் சேர்ந்து தலைமை ஆசிரியை அறைக்குச் சென்றார்கள். அதற்குள் அவர் அங்கு சென்று அவர்களுக்காகக் காத்திருந்தார்.

''அருமை மாணவியரே! கிட்டத்தட்ட அரை மணி நேரமாகப் பாட்டுச் சப்தம் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. பெரும்பாலும் விரசமான பாட்டுக்கள். கேட்கவே அருவருப்பாக இருக்கும் பாட்டுக்களை எப்படித்தான் இவ்வளவு உச்சஸ்தாயியிலே வைக்கிறார்களோ தெரியவில்லை. இது எங்காவது கோயிலில் இருக்கலாம். அல்லது பொது விழாவில் இருக்கலாம். எங்கே இருந்து வந்தாலும் தொந்தரவு தொந்தரவு தானே! எந்த இடத்திலே எப்படிப்பட்ட பாட்டை ஒலிபரப்புவது என்ற விவஸ்தையே இல்லாமல் போய் விட்டதே!

''இந்தத் தொந்தரவு தொடரக்



கூடாது. நிறுத்தியாக வேண்டும். ஆட்களை அனுப்பியிருக்கிறேன். நிறுத்தி விடும்படிக் கேட்டுக் கொள்ளச் சொல்லியிருக்கிறேன். நம் வேண்டுகோளுக்குப் பிறகும் இந்த இடையூறு நீடிக்குமானால் போலீசில்தான் சொல்ல வேண்டும் என்றிருக்கிறேன்.

"நீங்கள் எல்லோரும் உங்கள் வகுப்புகளில் மாணவியர்களிடையே அமைதி குலையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பாட ஆசிரியர்களும் இருப்பார்கள். எல்லோரும் பொறுமையுடன் இருங்கள்," என்று தலைமை ஆசிரியை நீண்டதொரு சொற்பொழிவே ஆற்றினார்.

மாணவிகள் கலைந்து தங்கள் வகுப்புகளுக்குச் செல்ல இருந்த நேரத்தில் பள்ளிப் பியூன்கள் இருவர் அங்கே வேக வேகமாக வந்து சேர்ந்தனர். "அம்மா! பஸ் ஸ்டாண்ட் பக்கத்திலே இருக்கிற மைதானத்திலேதாம்மா பாட்டுப் போட றாங்க," என்றார் ஒருவர்.

"புள்ளைங்க படிப்பு பாழாகுதில்லே? பாட்டை நிறுத்துங்கன்னு நான் கேட்டுக்கிட்டேன். போய்யா உன் பாட்டுக்குன்னு ஒரு வாலிபப் பையன் கையை ஓங்கிக்கிட்டு வந்திட்டான்மா," என்றார் வயதான மற்ற பியூன்.

"அப்படியா? பஸ் ஸ்டாண்ட் பக்கத்து மைதானத்தில்தானா? என்ன விசேஷமாம்?" என்று கேட்டார் தலைமை ஆசிரியை.

"நான் கூட ஏதோ அம்மன் கோயிலிலே திருவிழா ஆரம்பம் போலிருக்குன்னு நினைச்சேன். ஏதோ அரசியல் கூட்டம் நடக்கும் போல இருக்கு அப்படின்னும் யோசிச்சேன். அப்புறம் பார்த்தால்... யாரோ சைக்கிள் விடப் போறானாம். அதுக்குத்தான் இத்தனை கூத்து," என்று சலித்துக் கொண்டார் அவர்.

"சைக்கிள் விடறதுக்குக் கூடவா இப்படி ஊரைக் கலக்கணும்? கேட்டால், 'ஊரைக் கூட்டறதுக்குத்தானே ஒலிபெருக்கி வச்சிருக்கோம்?' அப்படிங்கிறாங்க!"

"ஓஹோ! நானே நேரில் போய்க் கேட்கிறேன்," என்று புறப்பட்டார் தலைமை ஆசிரியை.

"நாலு டீச்சருங்களையும் கூட்டிக்கிட்டுப் போங்கம்மா. நாங்களும் கூட வரட்டுமா?" என்று கேட்டார் வயதான பியூன்.

"மேடம்! மாணவிகள் நாங்கள சில பேரும் உங்களோடு வருகிறோம்," என்றாள் பவித்ரா.

அவர்கள் யாவரும் அந்த மைதானத்துக்குப் போனபோது நிறையக் கூட்டம் சேர்ந்திருந்தது. தென்னங்கீற்றுகளால் வேயப்பட்ட





ஒரு பந்தல் ஓர் ஓரத்தில் தெரிந்தது. அந்தப் பந்தலின் நடுவே சில நாற்காலிகளும் ஒரு மேஜையும் போடப் பட்டிருந்தன. மேஜை மேலே நாலைந்து சோடா புட்டிகளும் ஒரு ரோஜாப் பூ மாலையும் இருந்தது. மேஜையையொட்டி ஒரு மைக் கீழே நிறுத்தப்பட்டிருந்தது. அவர்கள் எல்லாரும் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது தலைமை ஆசிரியையும் மற்றவர்களும் அங்கே போய்ச் சேர்ந்தார்கள். அப்போதும் ஒரு சினிமாப் பாட்டு வானைப் பிளந்து கொண்டிருந்தது.

பாட்டின் சப்தமும் அப்படித்தான் இருந்தது. அந்தப் பாட்டின் பொருளும் அப்படித்தான் தெரிந்தது.

'வைக்கோலை எடுப்பேன்
வானத்தைப் பொளப்பேன்!
கைக்கோலைத் தூக்கி
சூரியனை அடிப்பேன்!
தையா தைக்கா தையா தைக்கா!
உய்யா!'

அண்மையில் வெளிவந்த ஒரு சினிமாவில் ஒரு ஹீரோ இப்படிப் பாடி, கண்டபடி குதித்து ஓடி, ரசிகப் பெருமக்களைக் குஷிப்படுத்துகிறாராம்.

பீடியை உறிஞ்சி கொண்டே ஒரு பெரியவர் சுவாரஸ்யமாக விளக்கிக் கொண்டிருந்தார். அதையெல்லாம் காதில் வாங்கிக் கொண்டே தலைமை ஆசிரியை அங்கே யாரையோ தேடிக் கொண்டிருந்தார். யாரைத் தேடுகிறார்? பவித்ரா சுற்று முற்றும் பார்த்தாள். அங்கே நின்றிருந்த ஒருவர் முகம் புரிந்தது அவளுக்கு.

அவர் அவள் வீட்டுக்குப் பால் கொடுக்கும் முனியம்மாளின் புருஷன். அவர், நரைத்துப் போனாலும் விறைப்பாக இருந்த மீசையைத் திருகி முறுக்கிக் கொண்டே அந்தப் பாட்டுக்கு ஏற்றபடி காலால் தாளம் போட்டுக் கொண்டு நின்றிருந்தார்.

"இங்கே யார் ஐயா இதெல்லாம் நடத்தறது?" என்று தலைமை ஆசிரியர் யாரையோ கேட்க, காதில் விழுந்த எல்லோருமே, "ஏன் நாங்க தான்! என்னம்மா வேணும்?" என்று அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"இந்தச் சப்தத்தை உடனடியாக நிறுத்துங்க," என்று சப்தமாகச் சொன்னார் தலைமை ஆசிரியர்.

அப்போது பவித்ரா, அந்த முனியம்மாள் புருஷன் அருகே சென்று, "மைக்கை நிறுத்தச் சொல்லுங்கய்யா," என்று அவரிடம் சொன்னாள்.

"ஏம்மா நீ அந்தப் பங்களா ஊட்டுப் பொண்ணில்லே? ஏன் கண்ணு, இந்தப் பாட்டு ஒனக்குப் புடிக்கலையா?" என்று கேட்டார் அவர்.

அவர் அருகே சென்ற போது 'குப்' பென்று ஏதோ நாற்றம் அடிப்பதையும் பொறுத்துக் கொண்டு, "எங்கள் படிப்பெல்லாம் பாழாகுது. நிறுத்தச் சொல்லுங்க," என்றாள் பவித்ரா.

"சரிதான். நான் அப்படிச் சொன்னால் என் பொழைப்பெல்லாம் பாழாயிடும். நான் இங்கே ட கடை வைக்கப் போறேம்மா" என்று சொல்லி விட்டு அவர் ஒதுங்கிப் போனார்.

பவித்ரா திரும்பித் தலைமை ஆசிரியையைப் பார்த்தாள். அவரைச் சுற்றி நின்று கன்னாபின்னா என்று கத்திக் கொண்டிருந்தவர்கள் மத்தியிலே அவர் காதுகளைப் பொத்திக் கொண்டு கண்களையும் இறுக்கமாக மூடிக் கொண்டு நின்றிருந்தார். மற்ற ஆசிரியைகளும் மாணவிகளும் யார் யாரிடமோ ஏதேதோ வாதாடிக் கொண்டிருந்தார்கள்.

"ஆமாம்... போங்கம்மா பெரிசாப் பள்ளிக்கூடம் நடத்தறிங்க.

அதெல்லாம் ஒண்ணும் லவுட்ஸ் பீக்கரைப் போடாமே இருக்க முடியாது. எவ்வளவோ கஷ்டப்பட்டு ஏற்பாடு பண்ணியிருக்கிறோம்.. போங்க.. போங்க.. இடத்தைக் காலி பண்ணுங்க,'' என்று விரட்டுகிற தொனியில் பேசினார் சினிமாவில் வருகிற ரௌடியைப் போலவே இருந்த ஒரு முரட்டு ஆசாமி.

தலைமை ஆசிரியை முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ஏதும் செய்ய முடியாமல் விர்ரென்று திரும்பிப் போனவர், எதிரே போலீஸ் இன்ஸ்பெக்டர் மோட்டார் பைக்கில் வருவதைக் கவனித்தார். அவரை நிறுத்தினார். அப்போது பவித்ராவும் மற்ற மாணவிகளும் அங்கே ஓடினார்கள்.

''இப்படி லவுட்ஸ்பீக்கரைச் சத்தமாக வைத்துச் சினிமாப் பாட்டுப் போட்டுக் கொண்டிருந்தால், பக்கத்திலேயேயிருக்கிற எங்கள் பள்ளியிலே எப்படிப் பாடம் நடத்த முடியும்? முதலிலே இதை நிறுத்தச் சொல்லுங்கள்!'' என்றார் தலைமை ஆசிரியை.

''சொல்ல முடியாதுங்களே மேடம்! அவங்க போலீஸ் பர்மிஷன் வாங்கிக்கிட்டுத்தான் இதைச் செய்யறாங்க,'' என்றார் அந்த இன்ஸ்பெக்



அன்புச் சொற்கள்

டர் நிதானமாக.

''பர்மிஷன்...! நீங்கள் எப்படிக் கொடுக்கலாம்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டார் தலைமை ஆசிரியை.

''என்ன கேட்கறிங்க மேடம்? முறையாக் கேட்டாங்க. முறையாக் கொடுத்திருக்கோம். உங்களைக் கேட்டுக்கிட்டுத்தான் நான் பர்மிஷன் தரணுமா என்ன?'' என்று கேலியாகச் சிரித்தார் இன்ஸ்பெக்டர்.

பொறுத்துக் கொள்ள முடியவில்லை பவித்ராவால். 'முறையா சார் நீங்கள் பர்மிஷன் கொடுத்தது?' என்று கேட்க மனம் துடித்தது. ஆனால் வார்த்தைகளை வாய்க்குள்ளேயே அடக்கிக்கொண்டு, ''இந்த ஏரியாவிலே பக்கத்திலே பக்கத்திலே மூன்று பள்ளிகள் இருக்கு சார். மூவாயிரம் பேருக்கு மேலே படிக்கிறோம் சார். ஒரு வார காலத்துக்கு இங்கே இப்படி ஒரே சத்தமாகயிருந்தால், நாங்கள் எல்லாம் எப்படிப் படிப்பது?'' என்று சற்றுத்துணிவுடனேயே கேட்டாள் பவித்ரா.

''பள்ளிக்கூடங்களை இழுத்து மூட வேண்டியதுதான் ஒரு வாரத்துக்கு!'' என்று ஒரு புதிய குரல் அங்கே கேட்டது.

அந்தக் குரலுக்குரியவர் நெடுஞ்சாலையிலிருந்த நறுமலர் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர்.

''என்ன சார் இது அநியாயம்! உங்கள் நறுமலர் உயர்நிலைப் பள்ளி, எங்கள் மலர் மகள் மகளிர் உயர்நிலைப்பள்ளி, பக்கத்திலே உள்ள மூன்று ஆரம்பப் பள்ளிகள்... இவ்வளவும் ஒரு வாரத்துக்கு எப்படி சார் ஒழுங்காக நடக்கும்?'' என்று அவரிடம் கேட்டார் தலைமை ஆசிரியை ஜெயலட்சுமி.

''அதையேதான் நானும் கேட்க வந்தேன். இன்ஸ்பெக்டரே இப்படிச் செய்கிறாரே... இவ்வளவு பள்ளிகளில் படிப்பு பாழாகி விடுமே என்று இவர் யோசித்திருக்க மாட்டார். இல்லையா இன்ஸ்பெக்டர்?'' என்று தலைமை ஆசிரியர் கேட்டதும்—

''இப்படியெல்லாம் இன்சல்ட் பண்ணினா என்னால சும்மாயிருக்க முடியாது. பர்மிஷன் கேட்டவர்கள் பெரிய புள்ளிகள். நானும் யோசிக்கத்தான் செய்தேன். மேலிடத்து உத்தரவு. எனக்கு ஏன் பொல்லாப்பு?'' என்று அவர் வேகமாக மோட்டார்பைக்கை உதைத்துக் கொண்டு போய் விட்டார்.

திடீரென்று பாட்டு நின்றது. ஓர் அறிவிப்பு அலறியது. ''நம் தலைவர்! உண்மைத் தொண்டர்! சேவா ரத்னம்! ஊழியர் திலகம்! உயர்திரு வாளர் தேவ மாணிக்கம் இன்னும் அரை மணி நேரத்தில் வந்து விடுவார். அவர் வந்தவுடனேயே இந்த வட்டத்துப் பொது நல மன்றத்தின் நிரந்தரச் செயலாளர் நிரஞ்சன் தாஸ் தம் ஏழு நாள் சைக்கிள் ஓட்டும் வீரதீரப் பராக்கிரமச் செயலை வெற்றிகரமாகத் தொடங்கி வைப்பார். நமது அருமை நண்பர் நிரஞ்சன் தாஸ் எவ்வளவு பெருமையுடையவர் என்பதை இந்த வட்டத்துப் பெருமக்கள் கட்டாயம் அறிந்திருப்பார்கள். அவர் எடுத்த காரியத்தை முடிக்காமல் இடையே நிறுத்தவே மாட்டார். இப்போது இங்கே பகல் இரவு என்று பாராமல் தொடர்ந்து ஏழு நாள் இடைவிடாமல் சைக்கிள் ஓட்டப் போகிறார். சைக்கிளிலேயே குளிப்பார்; உடை மாற்றிக் கொள்வார்; உணவு எடுத்துக் கொள்வார். இந்தக் கோலாகலக் காட்சியை நாமெல்லாம் கண்டுகளிக்கப் போகிறோம். பொது மக்களே திரண்டு வாருங்கள். ஆதரவு தாருங்கள்! வணக்கம்.''

அறிவிப்பை அடுத்து, உடனே திரைப்படப் பாடல் ஒலிக்கத் தொடங்கி விட்டது மீண்டும்.

பவித்ரா தம் பள்ளி மாணவிகளிடம் ஏதோ சொல்லியனுப்பினாள். அவர்கள் வேக வேகமாகத் திசைக்கு இருவராகப் பிரிந்து சென்றார்கள். அவளும் தலைமை ஆசிரியை

அன்புக்குரியவர்களை விநோதமாக எல்லாம் பல நாடுகளில் அழைக்கிறார்கள். காட்டு மலரே என்று கொஞ்சுவான் லிதுவேனியன். சின்னஞ்சிறு பன்றியே என்பது இடேத் மக்கள் செல்லமாக அழைக்கும் முறை. சிறு நத்தையே என்று விளிப்பது வியன்னா மக்கள் வழக்கம். வெட்டுக் கிளியே என்கிறான் செர்பியன். யூகோஸ்லாவியாவில் சின்னஞ் சிறு புல்லே என்கிறார்கள்.

— ஆர். மகாதேவன், திருநெல்வேலி–6.

பின்னே ஓடினாள். நறுமலர்ப் பள்ளித் தலைமை ஆசிரியர் விறைப்பாக அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

தம் தலைமை ஆசிரியையிடம் ஏதோ சொல்லி விட்டு அவர் தடுத்தும் கேளாமல் பவித்ரா நறுமலர்ப் பள்ளித் தலைமை ஆசிரியர் நின்று கொண்டிருந்த இடத்துக்கு ஓடி வந்தாள். அவரிடமும் சில நொடிகள் ஏதோ பேசினாள்.

"யு ஆர் வெரி பிரில்லியண்ட்! பெஸ்ட் ஆஃ லக். என்னால் முடிந்ததை நானும் செய்கிறேன்," என்று அவர் தம் சைக்கிளில் ஏறித் தம் பள்ளியை நோக்கிச் சென்றார்.

பத்துப் பதினைந்து நிமிடங்களில், அந்த மைதானத்தின் வடக்கு மூலையில் நின்று கொண்டிருந்த பவித்ராவைச் சுற்றிலும் பல பள்ளிகளிலுமிருந்து வந்த மாணவ மாணவியர் திரள் திரளாகக் குழுமி விட்டனர்.

"இவர்கள் நடத்தப் போகிற இந்த விழாவை ஆரம்பித்து வைக்க வேத மாணிக்கம் வரப் போகிறார். அவரை நெடுஞ்சாலையிலேயே நாம் சந்தித்தாக வேண்டும்," என்றாள் பவித்ரா.

"அவர் காரில் வருவாரே? நிறுத்த முடியுமா, நம்மால்?" என்று தன் ஐயத்தை எழுப்பினான் ஒரு மாணவன்.

"ஏன் முடியாது? நாம் கூட்டமாக நின்று மறித்தால், நிற்காமல் போக முடியாது. இந்த விழா இங்கே வேண்டாம் என்று சொல்வோம். இங்கே தான் நடக்கும் என்று சொல்லி விட்டால், ஒலிபெருக்கியை உபயோகப் படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளலாம்."

"இது நடக்குமா? நம் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளா விட்டால்....?"

"காரைப் போக விடாமல் தடுக்க வேண்டியதுதான்" என்றான் வள்ளலார் பள்ளி மாணவத் தலைவன்.

"கேரோ செய்வதா?" என்று கேட்டான் நறுமலர்ப் பள்ளி மாணவத் தலைவன்.


"அதற்கு என்ன பேரோ! நமக்கு நியாயம் கிடைக்க வேண்டும். நம் பள்ளியில் பயிலும் அத்தனை பேரும் அப்படியே அவர் எதிரில் மறியல் செய்யத் துணிவோடு நிற்க வேண்டும். நம் பக்கம் நியாயம் இருப்பதால் பொது மக்களும் நம் பக்கம் துணையாக நிற்பார்கள்," என்று அழுத்தமாகக் கூறினாள் பவித்ரா.

"சிறுவர் சிறுமியர் என்று யாரும் நம்மை அலட்சியம் செய்து விட முடியாது. ஊருக்கு வெளியே எத்தனையோ மைதானம் இருக்கே! அங்கே போய் வைத்துக் கொள்ளட்டுமே... சைக்கிள் விடும் வீரத்தனத்தை!" என்று கோபத்தோடு கூறினான் ஒருவன்.


அதற்குப் பிறகு தங்கள் திட்டத்தை அங்கு கூடியிருந்த எல்லாப் பிள்ளைகளுக்கும் தெளிவாகச் சொல்லி விட்டு, அந்த மூவரும் நெடுஞ்சாலைக்குச் சென்று நின்று கொண்டார்கள். அவர்கள் பின்னே மூன்று பள்ளிகளையும் சேர்ந்த பிள்ளைகள் இரு நூறு பேர்களுக்கு மேல் குழுமி நின்றார்கள்.

சிறிது நேரத்தில், அவர்கள் எதிர்பார்த்தபடி தேவ மாணிக்கம் காரிலே வந்தார். மாணவர்கள் காரை நிறுத்தினார்கள். காரும் நின்றது. அந்தக் காருக்குள் தேவ மாணிக்கத்தின் பக்கத்திலே அமர்ந்திருந்தவரைப் பார்த்ததும் அப்படியே திகைத்துப் போய் விட்டாள் பவித்ரா.

(தொடரும்)



கருத்து: நந்தி



கருத்து: N. சிவகுமார்



நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!



ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

''சிப்-சாப்'' நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் ''சிப்-சாப்''!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது • பாதுகாப்பானது • எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது • ஸால்டரிங் இல்லை – கனெக்ஷனுக்கு ''பேட்டென்டுடன்'' கூடிய விசை • கையாள எளிது.

பரிசோதனைகள்: • மியூஸிகல் ஆர்கன்* ஷூட்டிங் விளையாட்டு • ஃபயர் அலாரம்* ஒயர்லெஸ் பீப்பர் * ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர்* லைட் ஆபரேட் அலாரம் இன்னும் பலப் பல.

ரூ. 350/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

''எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்''

எஜுடெக்

187, முதல் மாடி, வீரபிள்ளை தெரு,
பெங்களூர் – 560 001. இந்தியா.
போன்: 578801.

எனக்குத் தேவை ''சிப்-சாப்'', கிட் ஒன்றுக்கு ரூ. 400/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து ....கிட்/கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'க்ராஸ்' செய்யப்பட்ட டி.டி./போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட் ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித்தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.

பெயர் ....

விலாசம் ....

பள்ளி ▢ கல்லூரி ▢



பிருந்தாவனக்




வேண்டும் வேண்டும்

நல்லவை கேட்டிட வேண்டும்
நன்மைகள் செய்திட வேண்டும்
அன்பாய் இருந்திட வேண்டும்
அறிவை வளர்த்திட வேண்டும்

நல்லவை பார்த்திட வேண்டும்
நாடுசன். போற்றிட வேண்டும்
புன்னகை பூத்திட வேண்டும்
புதுமைகள் செய்திட வேண்டும்

நல்லவை பேசிட வேண்டும்
நன்மைகள் பெருக்கிட வேண்டும்
இன்னலை நீக்கிட வேண்டும்
இனியவை பேசிட வேண்டும்

— சே. புஷ்பராஜ், குமரி மாவட்டம்.



இமய மலை

உலகத்திலே உயர்ந்தமலை
இமயமலை — நெற்றித்
திலகத்தைப் போல் நமது நாட்டில்
திகழும் மலை!

ஹில்லரியும் டென்சிங்கும்
வென்றமலை — நிகர்
நில்லாத எழில்மிகுந்த
நிமிர்ந்த மலை!

வரலாற்றுப் புகழ்மிகுந்த
வெள்ளிமலை — நாடி
வருவோரை வரவேற்கும்
விந்தை மலை!

பாரதியார் பாடல்பெற்ற
புனிதமலை — தலையில்
கார்முகிலே மகுடமெனக்
காணும் மலை!

— பி. வி. கிரி.





மரம் வளர்ப்போம்

எடுப்பு

மரம் வளர்ப்போம், மரம் வளர்ப்போம்
தம்பிகளே! — அதில்
மலர் பறிப்போம், கனி பறிப்போம்
தங்கைகளே

தொடுப்பு

வரம் தருவாள்; வளம் தருவாள்
தம்பிகளே! — தன்
மனம் குளிர்ந்து இயற்கையன்னை,
தங்கைகளே! (மரம்)

முடிப்பு

பச்சை எழில் பசுமை எழில்
கொஞ்சிடுமே — அதில்
பறவை இனம் மிருக இனம் மிஞ்சிடுமே!
நிச்சயமாய்த் தூய காற்று
கிடைத்திடுமே! — நம்
நாடு எங்கும் நல்ல சூழல் படைத்திடுமே!
(மரம்)


பருவ காலம் குறித்த நேரம்
வரவழைக்கும்! — அதில்
பயனை நமக்கு வாரிஇங்கேதர உழைக்கும்!
உருவமொன்று உலகுக்கென்றே
நிலைத்திருக்கும் — அதில்
உயிர்களெல்லாம் காலம் காலம்
தழைத்திருக்கும்! (மரம்)

— மா. ஜோசப்ராஜ், சென்னை — 42.









வெடிக்காத பலூன்

மாமா வாங்கித் தந்த பலூன்
மனத்தை அள்ளுதே! — நெஞ்சோ
"ஆகா! அழகு!" என்றே சொல்லி
ஆடித் துள்ளுதே!

ஊத ஊத வண்ண பலூன்
உப்பிப் பெருக்குதே! — அதன்
வாயில் நூலைக் கட்டி விட்டால்
வானில் பறக்குதே!

விங்கிப் பெருத்த பலூன் ஏனோ
வெடித்துத் தொலையுதே! — அதை
வாங்கித் தந்த மாமா மேலே
கோபம் வருகுதே!

வெடித்திடாத பலூன் இருந்தால்
எனக்குச் சொல்லுங்கோ! — அதை
வாங்கிக் கொடுக்க மாமாவைநான்
வளைத்து வருகிறேன்!

— அழகு பழனிச்சாமி,
சென்னை — 15.



நல்ல பிள்ளை

அன்னை பாடிய பாட்டினையே
அழகாய் நானும் பாடுவேன்.
அமுதம் ஊட்டும் போதினிலே
அன்பாய் நானும் உண்ணுவேன்!


பெரியோர் கூறும் வார்த்தையினைப்
பெரிதும் மதித்து நடந்திடுவேன்.
பெற்றோர் எந்தன் தெய்வமெனப்
பெருமைகொண்டேவணங்கிடுவேன்!



சோம்பல் எனக்குப் பிடிக்காது;
சோர்வு என்னை அண்டாது;
உயிரைச் சிதைப்பது பிடிக்காது;
உறவை நெஞ்சம் வெறுக்காது!

பண்பாய் நானும் நடந்திடுவேன்;
பகையை நானும் விரட்டிடுவேன்;
பள்ளிக்கூடம் சென்றே நான்
பாங்காய்ப் பாடம் படித்திடுவேன்!

— நா. மல்லிகா, மேட்டூர் அணை — 1.



சந்தையும் மந்தியும்

மந்திமாமா கூடையில்
மாம்பழமாம் மாம்பழம் — அதைச்
சந்தையிலே விற்றிடவே
முந்தி முந்திப் போனாராம்!

ஓடியோடிக் களைத்த மாமா
ஓரிடத்தில் அமர்ந்தாராம் — பசி
ஓயாமலே இருந்ததால்
ஓர் பழத்தைக் கடித்தாராம்!


"கனிகளிலே இனித்த கனி
மாங்கனியே" என்றாராம் — உடன்
கனிந்த கனி ஒன்றெடுத்து
களிப்புடனே தின்றாராம்!

"யாருமில்லா நடுவழியில்
காரமில்லா விருந்தடா — இதை
நானுண்ணாமல் மற்றொருவர்
உண்ணுவதா, சொல்லடா?"


இப்படியே சொன்னபடி
எல்லாப் பழமும் தீர்த்தாராம் — பின்பு
அப்படியே சந்தை விட்டு,
அவர்வழியைப் பார்த்தாராம்!

— அ. இராஜப்பன், கருமத்தம்பட்டி.


எட்டுக்கு எட்டு
14
கதை:
படம்: ஜெ...
போலீஸ்காரரிடமிருந்து, ரஞ்சித் பைனாகுலரை வாங்கி–
குழந்தையைக் கோணியிலே கட்டி எடுத்துட்டுப் போறாங்க...
எஸ்.. அவங்களே தான்.. ஹரியப்!
மறைத்து வைத்திருந்த பரிசல்களில் ஏறி....
ரஞ்சித்தும், சசிவர்ணமும், போலீஸாருடன் பின் தொடர்ந்தார்கள்–
அவங்களை விட்டுவிடக்கூடாது... சீக்கிரம்...
இதோ– மடக்கிடலாம், சாமி...



நான் போய் அப்பனைக் கூட்டி யாரேன்..
வேணாம்ணா. புள்ளையை அவர்கிட்ட கொண்டு போயிடலாம்.
தாங்கள் குறிவைக்கப் பட்டிருப்பதை அறியாத சின்னானும், அங்குசாமியும் எதிர்க்கரையை அடைந்து—
இருவரும் காட்டுப் பாதையில்—
தூரத்தில் ஒரு இடிஓசை—
இன்னைக்குத் தான் நம்ம அப்பன் முகத்திலே சிரிப்பைப் பாக்கலாம்!
இருக்காதா பின்னே? ஜமீனின் எட்டு வாரிசுக்கும் ஒட்டு மொத்தமா கொள்ளி போடப் போறமில்லே!
ரஞ்சித் கோஷ்டி எதிர்க் கரையை அடைந்து—
அவங்க போன வழியே தெரியலையே!
இந்தக் காலடி காட்டிக்கொடுத் திடும்.


இன்ஸ்பெக்டர் ரஞ்சித் அங்கே பாருங்க
எல்லாரும் அங்க தான் இருக்கணும்.. வாங்க... பீ...கேர்புல்!
குடிசைக்குள் — கோணியை அவிழ்த்ததும், மொத்தம் எட்டு குழந்தைகள் — அங்கே திம்மையா —
அழாதீங்க ஜமீந்தார்..... இதோ ஆச்சு!.. அந்த சீமெண்ணெய் டின்னை... எடுடா.!
எட்டுக்குழந்தைகளையும் குடிசைக்குள் அடைத்து —
குடிசையெல்லாம் சீமெண்ணெயாலே குளிப்பாட்டியாச்சா..சரி!..... கத்துறீங்களா? கத்துங்க!
இப்படித்தானே எங்க குழந்தைங்க கத்தினாங்க! ஜமீந்தார் ஜெகவீர பாண்டியா! எட்டுக்கு எட்டா! எடு தீப்பெட்டிய!



அதே சமயம் திம்மையாவின் தீப்பெட்டி பிடித்த கையை ரஞ்சித்தின் துப்பாக்கி பதம் பார்த்தது —
ஆ!
இழுத்துட்டுப் போங்க அந்த மிருகங்களை...
சசிவர்ணம் குடிசைக்குள் சென்று...
கடவுளே! எங்க பிள்ளைகளை ரஞ்சித்தா வந்து காப்பாத்திக் கொடுத்துட்டீங்க!
முற்றும்.

* சு. ஜோ. சூரியநாராயணன், ஆலம் பூண்டி.


கே: தேள் கடித்தால் ஏன் அந்த நிமிடத்தி லிருந்து அடுத்த நாள் அதே நேரம்வரை வலி இருந்து கொண்டே இருக்கிறது?

ப: நீ தேள்கடிபட்ட அனுபவம் இந்தக் கேள்வியில் தெரிகிறதே! என் ஆழ்ந்த அனுதாபங்கள். சரி, தேள் கொட்டியதை மறந்துவிட்டு விஞ்ஞான பூர்வ விளக்கமாய் நான் கொட்டுவதை வாங்கிக் கொள்:

தேளின் கொடுக்கு முனையில் ஒரு மணி போன்ற பகுதி இருக்கிறதே. அதற்குள்தான் விஷ(ய)ம் இருக்கிறது. அதற்குள் இருப்பது **PROTEINS, POLYPEPTIDES** என்ற திரவங்கள் இருக்கின்றன. தேள் கொட்டும் போது கொடுக்கு முனையின் கூரிய பகுதிக்கு இந்தத் திரவம் குவிந்து நிற்கும். கொட்டிய தும் அந்தக் கூர் முனை உடைந்து உடம்பில் பொத்துக் கொண்டுவிடும். அப்புறம் அதில்



உள்ள திரவம் உன் உடம்பின் ரத்த நாளங் களில் ஊடுருவுகிறது. உண்மையில் அந்தத் திரவம் ஆபத்தானதில்லை. அது உன் உடம் பிலேயே பரவலாக இருக்கும் **Histomine** என்ற திரவத்தை ஒன்றுகூட்டிக் கடிவாயில் கொண்டு வந்து சேர்க்கிறது. அந்த **Histomine** தான்வேதனையைஏற்படுத்துவது.சொல்லப் போனால் அசல் விஷம் உன் உடம்புக்குள் ளேயே இருக்கிறது. தேள் கொட்டி, அதைக் கிளப்பி விடுகிறது. அவ்வளவுதான். இதே போல்தான் குளவி கொட்டினால் அதன் கொடுக்குமுனை உடைந்து உள்ளே தங்கிக் கடுக்கிறது. அப்படிக் கொட்டுவாயில் குவிந்த **Histomine** பழையபடி ரத்தநாளங்க ளில் பிரிந்து செட்டில் ஆவதற்கு ஒரு நாள் ஆகிறது. அதனால்தான் அந்தத் தேள்கடி வேதனை ஒரு நாள் வரை நீடிக்கிறது. ஒன்று ஞாபகம் வைத்துக் கொள். தெரிந்தோ, தெரி யாமலோ நீ தேளைச் சீண்டினால்தான் அது உன்னைத் தீண்டும். இல்லாவிட்டால் பின் ளைப் பூச்சியாய் அது பாட்டுக்குப் போய்க் கொண்டேயிருக்கும்.



* எஸ். ஷர்மிளா, அன்னூர்.


கே: பல் ஓர் எலும்பா, அல்லது வேறு எதுவுமா?

ப: பல் எலும்பல்ல; வேறு ஒன்று. அதை **DENTINE** என்கிறார்கள். அதனால்தான் பல் வைத்தியருக்கு **DENTIST** என்று பெயர். இந்த டென்டைனுக்குள் ரத்த ஓட்டம் இருக் கும். இந்தப் பல் பகுதியில் முக்கியமான பாகம் பல்லுக்கு மேலே கவசமிட்டிருக்கும் எனாமல். உடம்பில் உள்ள உறுப்புக்களில் மிகக் கடினமானது எது என்று கேட்டால், அடித்துச் சொல்லலாம் இந்த எனாமல்தான் என்று. அதனால்தான் கடினமான உணவுப் பொருள்களைக் கடித்து நொறுக்க முடிகி றது. இந்த எனாமல் போய்விட்டால்தான் பல் கூசுகிறது. எனாமல் ஏன் போகிறது. தேய்கிறது. அதைப் பாதுகாப்பது எப்படி என்று இந்த இடத்துக்குள் சொல்ல முடி யாது. 'பல் பாதுகாப்பு' சம்பந்தமாய்த் தேர்ந்த பல் வைத்தியர் ஒருவர் எழுதிய நூலைப் படித்துத் தெரிந்து கொள்.

* ச. நந்தகுமார், தருமபுரி.

கே: பறக்கும் தட்டு என்றால் என்ன? அது இருப்பது உண்மையா?

ப: செமை கற்பனையைக் கிளறிவிடும் தட்டு இந்தப் பறக்கும் தட்டு. தேவதைக் கதைகள் போல இந்தப் பறக்கும் தட்டை வைத்து எத்தனை எத்தனை கதைகள், திரைப் படங்கள், வதந்திகள் வந்து கொண்டே யிருக்கின்றன! உண்மையில் பறக்கும் தட்டு என்று ஒன்று உண்டா? இதற்கு விஞ்ஞானக் குறிப்பாய் **UFO** என்று சொல்கிறார்கள். விளக்கம்: **Unidentified Flying Object** — அடையா ளம் காண முடியாத பறக்கும் வஸ்து. இந்த விளக்கத்தைக் கொண்டே பறக்கும் தட்டு என்று குறிப்பாய் எதுவும் கிடையாது என்ற





சொல்லப்படும்

> கவனிக்க:
>
> இந்தப் பகுதிக்குக் கேள்வி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியும் தந்தால் மேலும் பயன் பெறலாமே! உங்கள் கேள்வி தேர்ந்தெடுக்கப்பட்டால் அது விடைபெறும் இதழ் உங்கள் கைக்கு வந்து சேரும்.
>
> — சின்ன அண்ணன்.

முடிவுக்கு வரலாம். இருந்தாலும் உலகம் முழுவதும் பறக்கும் தட்டு பற்றிய வதந்திகள் உலவிக் கொண்டுதான் இருக்கின்றன. பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளில் இவை தென்படுவதாய்த்தான் பெரும்பாலும் பேச்சு அடிபடுகிறது. ஏன், புகைப்படமே எடுத்திருப்பதாய்க் கூடப் பிரசுரித்திருக்கிறார்கள். இதுபற்றித் தீர ஆராய்ந்து ஒரு சில உண்மைகளையும் வெளியிட்டிருக்கிறார்கள். அதன் படி, இந்தப் பறக்கும் தட்டு எழுபத்தைந்து விழுக்காடு மழை நாளிலே தோன்றும் ஒரு வகை மின்னல்தான். இதற்கு Ball Lightning என்று பேர். ஈரப் பதத்தில் பூமியிலிருந்து உற்பத்தியாகி வட்டப்பந்து போல் மேலெழும்பிச் சென்று சற்றே நீடித்துச் செல்லும் மின்னல் வகை. புகைப்படம் எடுத்ததும் இதைத்தானாம். சரி, பறக்கும் தட்டைப் பகலில் பார்த்தவர்கள் யாராவது உண்டா? இரவிலே அதுவும் ஈரமான பருவத்திலே தான் தென்படுவதாய்ச் சொல்கிறார்கள்.

கடைசியாய் ஒரு விஷயம். இந்தப் பறக்கும் தட்டைப் பற்றி ஆய்வு நடத்த அமெரிக்காவில் ஒரு விசேட நிபுணர் குழுவை அமைத்தார்கள். அவர்களும் ஆய்வு நடத்தித் தங்கள் முடிவை விஸ்தாரமாய் எழுதிக் கொடுத்தார்கள். அது என்ன என்பது அடுத்த தலைமுறைக்குத்தான் தெரியும். ஆமாம், அப்படி எழுதி சீல் வைத்து அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது அந்த ரிப்போர்ட். ஆய்வுக் குழு அப்படி ஓர் இரகசியத்தை ஒப்படைத்து விட்டால், அமெரிக்க ஜனாதிபதியே நினைத்தாலும், அதைப் பிரித்துப் பார்க்க முடியாது என்றால், கேவலம் இந்தச் சின்ன அண்ணனால் அதைத் தெரிந்து கூற முடியுமா? பறக்கும் தட்டில் என்னமோ விஷயம் இருக்கிறது; நம்ம தலைமுறைக்குள் அது வெளிப்படுமா? பார்ப்போம்.

* கே. எஸ். குமணன், கல்லிடைக்குறிச்சி.

கே: கம்ப்யூட்டர் மொழி 0, 1 என்ற இந்த இரு எண்கள் மட்டும்தான் என்கிறார்களே, அது உண்மையா?

ப: கம்ப்யூட்டர் மொழியில் கீழ்மட்டம் (Low Level), மேல் மட்டம் (High Level) என்று இருவகை உண்டு. கீழ்மட்டத்திலும் மெஷின் மூலமாக மட்டும்தான் கம்ப்யூட்டருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும். அந்த மொழிக்குத்தான் 0, 1 என்ற எண்கள் மட்டும் பயன்படுகின்றன. மேல் மட்ட மொழிகளில் Basic, Cobol, Fortran போன்ற பல வகைகள் உண்டு. இந்த மொழிகளில் தொடர்பு கொண்டாலும் உள்ளிருக்கும் மொழி பெயர்ப்புக் கருவி இவற்றை மெஷின் மொழிக்கு மாற்றித் தந்துவிடும். அதாவது தமிழ் மட்டுமே தெரிந்தவரிடம்



ஆங்கிலத்திலோ, இந்தியிலோ பேசினால் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்வதைப் போல.

தந்தியில் கட் கட என்ற ஒலிக்குறிப்பை மட்டும் பயன்படுத்திச் செய்தி சொல்வதில்லையா? அதுபோல் 0, 1 மட்டும் பயன்படுத்திக் கம்ப்யூட்டரில் எல்லாவற்றையும் கணக்குச் செய்கிறார்கள்.

சின்ன அண்ணன்

ஞாபகமறதி

பெர்னார்ட்ஷாவிடம் ஒருத்தர் கேட்டார்:

பெரிய அறிஞர்களுக்கெல்லாம் ஞாபக மறதி அதிகம் என்று நீங்கள்தானே கூறினீர்கள்?

"அப்படியா? எனக்கு ஞாபகமில்லையே!" என்றார் பெர்னார்ட்ஷா.

— அ. க. கிருஷ்ணன், சென்னை — 39.



பிருந்தாவனம்

தங்கமான விஷயம்



தங்கம் எங்கு வெட்டி எடுக்கப்பட்டாலும், அதன் விலை லண்டனில்தான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஐந்து பாங்குகளைச் சேர்ந்தவர்கள் லண்டன் தங்க மார்க்கெட் விலையை நிர்ணயிக்கிறார்கள். ஒரு நாளில் காலை மாலை இரு வேளைகளிலும் முடிவுகள் எடுக்கப்படுகிறது. இதைப் பொறுத்துத்தான் தங்கத்தின் விலை இடத்திற்கேற்ப நிர்ணயிக்கப்படுகிறது.

— ஆர்: ச. சசி, நாமக்கல்.

எமனுக்கு மனமில்லை



அறிஞர் விஸ்வேஸ்வரய்யா நூறாண்டு வாழ்ந்த பொறியியல் மேதை.

'உங்களுடைய நீண்ட ஆயுளின் ரகசியம் என்ன?' என்று செய்தியாளர்கள் அவரிடம் கேட்கின்றனர்.

அப்போது அந்த மேதை புன்முறுவலோடு, ''என்னைப் பார்ப்பதற்காகப் பல முறை வீடு தேடி வந்திருக்கிறான் எமன். அவன் வரும்போதெல்லாம் நான் என் அலுவலக அறையில் ஏதாவது வேலை பார்த்துக் கொண்டிருப்பேன். மெதுவாக எட்டிப் பார்த்த எமன், 'வேலை செய்து கொண்டிருப்பவரைத் தொந்தரவு செய்யக் கூடாது.' என்று போய் விடுவான். அது தான் என் நீண்ட ஆயுளின் ரகசியம்.'' என்று உழைப்பின் சிறப்பைப் பற்றி நயமாகச் சொல்லுவார் டாக்டர் விஸ்வேஸ்வரய்யா.

— ரேவதி பாஸ்கர், சென்னை — 44.



ஏத்தனை ஏமண்டி!

தெலுங்கு நாட்டைச் சேர்ந்தவரும், தமிழகத்தைச் சேர்ந்தவரும் ஒரு ரயிலில் போய்க் கொண்டிருந்தனர்.

தமிழருக்குத் தெலுங்கு தெரியாது; தெலுங்கருக்குத் தமிழ் தெரியாது!

தமிழர், 'இந்த ஸ்டேஷன் பெயர் என்னங்க?' என்று கேட்டார்.

தெலுங்கர், 'ஏமண்டி?' என்றார். (அதாவது, 'எதற்கு? என்ன?' என்று பொருள்)

பத்து நிமிடத்துக்குப் பின், 'இது எந்த ஊர்?' மீண்டும் தமிழர் கேட்டார்! 'ஏமண்டி?' என்று மீண்டும் பதிலுரைத்தார், தெலுங்கர்.

'தமிழகத்தில் சின்ன சேலம், சேலம் என

சேலம் இரண்டு இருப்பது போல் 'ஏமண்டியிலும் இரண்டு இருக்கும் போலும்!' என நினைத்தார், தமிழர்.

அரை மணி நேரத்திற்குப் பின்னர், தமிழர் தெலுங்கரை மீண்டும் அதே கேள்வியைக் கேட்க, அவரும் அதே பதிலையே சொன்னார்.

இதனால் கோபங் கொண்ட தமிழர், 'ஏய்! ஏமண்டி ஏமண்டி என்று திருப்பித் திருப்பிச் சொல்லி, என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்?' என்றபடி அடித்தார்.

தெலுங்கர் உடனே, 'ஆ! கொட்டத்து, கொட்டத்து!' என்றார். (அதாவது 'அடிக்காதே, அடிக்காதே என்று பொருள்)

தமிழர் அடிப்பதை நிறுத்தினார். வெற்றிப் பெருமிதத்துடன், 'நான் அடிப்பதற்கு முன்பே 'இந்த ஊரின் பெயர் 'கொட்டத்து' என்று சொல்லியிருக்கலாமே!' என்றார்.

— தருமை ஆதீனம் கலைக் கல்லூரிப் பேராசிரியர், டாக்டர். மு. சிவச்சந்திரன் அவர்களின் மேடைப் பேச்சிலிருந்து
கேட்டவர்: குத்தாலம், வி. சுந்தரராமன்.

மௌசியன்

மௌசியன் என்ற கிரேக்க வார்த்தையிலிருந்துதான் மியூசியம் என்ற சொல் பிறந்தது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அலெக்ஸாண்டிரியா நகரில் உள்ள நூலகத்தில்தான் மியூசியம் என்ற வார்த்தை முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டது. மௌசியன் என்றால் அரிய பொருட்களைச் சேகரித்து வைத்தல் என்று பொருள்.

— எஸ். ஜெயஸ்ரீ, திருச்சி.



பிரம்மபுத்ரா ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு பெயர் கொண்டு விளங்குகிறது. ஆம், சீனாவில் பாயும் பொழுது 'ட்ஸாங்போ' எனப்படுகின்றது. இந்தியாவில் பாயும் பொழுது 'பிரம்மபுத்ரா.' பங்களாதேஷ் நாட்டில் பாயும் பொழுது 'போஸ்டா.' இதே நாட்டில் கங்கையும், பிரம்மபுத்ராவும் கலந்த பிறகு, இந்நதி 'பத்மா' ஆகின்றது.

— மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு.

உரிமைக்குரல்

நெற்பயிர் சொன்னது: புல்லே, நீ குடிக்கும் நீர் எனக்கு இரைக்கப்படுவதாகும்.

புல் சொன்னது: நெல்லே, நீயும் ஒரு புல்தான் என்பதை மறந்து விடாதே.

நெற்பயிர்: நான் மனிதனுக்கு உணவாகிறேன்.


நெற்பயிர்: என்னால்தான் நீ உயிர் வாழ்கிறாய் என்பதை மறந்து விடாதே!

புல் கடவுளிடம் இவ்வாறு வேண்டிக் கொண்டது:

''இறைவா, நான் புல்லாகப் பிறந்தது குறித்துக் கவலைப்படவில்லை. என் பிறப்பு, உன் கருணை என்றாலும் உன்னிடம் ஒரு வேண்டுகோள். நெல்லுக்கு இறைக்கின்ற நீர்தான் எனக்குப் பாய வேண்டும் என்றால் என்னை நெல்லாகவே படைத்து விடு. இல்லையெனில் எனக்கென்று தனியாக நீர் இறைக்க வழி செய், கருணையின் வடிவே!''

(ராஜபாளையம் 'ராஜுக்கள் கல்லூரி' ஆண்டு மலரில் பேராசிரியர் வேம்புலு எழுதிய குட்டிக் கதை இது.)

தகவல்: வெள்ளகால், இரா. சுந்தையா.



விமான நிலையத்திற்கு ஆங்கிலத்தில் ஏரோட்ரோம் என்று பெயர். இந்தப் பெயர் எப்படி வந்தது தெரியுமா?

காற்று என்று பொருள்படும் ஏர் (air) என்ற ஆங்கிலச் சொல்லுக்குக் கிரேக்கச் சொல் aer என்பதாகும். எட்ரோமன் (edromon) என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஓடுதல் (to run) என்று பொருள். அதாவது ஏரெட்ரோமன் (Aeredromon) என்ற கூட்டுச் சொல்லுக்கு 'காற்றில் ஓடுதல்' என்று பொருள். ஏரெட்ரோமன் என்ற கிரேக்க மொழிச் சொல்லிலிருந்து வந்ததுதான் ஏரோட்ரோம் என்ற ஆங்கிலச் சொல்.

— ஆர். மகாதேவன், திருநெல்வேலி



முதல் அச்சகம் முதல் நூல்!

நெல்லை மாவட்டம் புன்னைக் காயலில் 'என்டிரிக் என்டிரிகுஸ்' என்ற பாதிரியார் 1578ல் அமைக்கப்பட்ட அச்சகம் தான் தமிழகத்தில் முதன் முதலாக அமைக்கப்பட்டது.

தமிழகத்தின் அச்சுக் கலையின் தந்தை என இவர் அழைக்கப்படுகிறார்.

சிறந்த தமிழறிஞரான இவர் எழுதிய தம்பிரான் வணக்கம்' என்ற தமிழ் நூல் தான் தமிழகத்தில் அச்சான முதல் நூல்.

ஆ. ராஜேந்திரன், குமாரமங்கலம்.



சகோதரப் பிச்சை!

ஒரு முறை டால்ஸ்டாய் ஒரு தெருவின் வழியே சென்று கொண்டிருக்கும் போது பிச்சைக்காரன் ஒருவன் டால்ஸ்டாயிடம் நெருங்கி, "ஒரு நாணயம் தர்மம் செய்யுங்களேன்," என்று கெஞ்சினான்.

"என்னிடம் சில்லறை இல்லையே சகோதரனே!" என்றார் டால்ஸ்டாய்.

"பரவாயில்லை ஐயா. பணத்தைவிட உயர்ந்த ஒன்றை எனக்குத் தாங்கள் அளித்து விட்டீர்கள். என்னைச் 'சகோதரனே' என்று அழைத்தீர்களே, அதுவே போதும்." என்றான் நெகிழ்ச்சியுடன்.


— எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி—14

129 வருட இடைவெளியா!

நெப்போலியன் பிறந்தது 1760ல். ஹிட்லர் பிறந்தது 1889ல். வித்தியாசம் 129 ஆண்டுகள். நெப்போலியன் ஆட்சிக்கு வந்தது 1804ம் வருடம். ஹிட்லர் ஆட்சிக்கு வந்தது 1933ம் வருடம். வித்தியாசம் 129 ஆண்டுகள். நெப்போலியன் வியன்னாவைப் பிடித்தது 1809ல். ஹிட்லர் வியன்னாவைப் பிடித்தது 1938ல். வித்தியாசம் 129 ஆண்டுகள். நெப்போலியன் சோவியத் ரஷ்யா மீது படையெடுத்தது 1812ம் ஆண்டு. ஹிட்லர் ரஷ்யாவின் மீது படையெடுத்தது 1941ம் ஆண்டு. வித்தியாசம் 129 ஆண்டுகள்.

நன்றி: விஸ்டம்.

— அ. க. கிருஷ்ணன், சென்னை — 39.



சிறுநீர் கழிக்கும் சிலை!

* காருக்கு முன்னே ஒருவன் சிவப்புக் கொடி பிடித்துக்கொண்டு போகவேண்டுமென்று 1896 வரை சட்டம் இருந்தது.

* இங்கிலாந்தையாண்ட மூன்றாம் எட்வர்ட் கிரிக்கெட் ஆட்டத்துக்குத் தடை விதித்தார். மீறி ஆடுபவர்களுக்கு அபராதம், சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது.

* இந்தியாவில் பின் கோட் (Pincode) என்பதை அமெரிக்காவில் ஜிப் (Zip) என்கிறார்கள். இதன பொருள் Zonal improvement Plan என்பதாகும்.

* பெல்ஜியத்தை ஆண்ட சார்லஸ் மன்னனின் நான்கு வயது மகன் காணாமல் போய்விட்டான். சில நாட்கள் கழித்து ஒரு ஓக் மரத்தின் கீழ் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும் போது சிறுவன் கண்டு பிடிக்கப்பட்டான். இப்போதும் அந்த மரத்தினடியும், அச்சிறுவன் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும் நிலையில் சிலை உள்ளது. உல்லாசப் பயணிகள் நாள்தோறும் கண்டு களிக்கின்றனர்.

— ஆர். ராமசுப்பிரமணியன், திருநெல்வேலி — 6.

விடுமுறை அறிவியல் போட்டி-முடிவு

இந்தப் போட்டியில் மொத்தம் 1846 பேர் கலந்து கொண்டு ஒரு புதிய சாதனையையே படைத்து விட்டார்கள்! வெளிநாட்டிலிருந்தும் கூடச் சிலர் கலந்து கொண்டுள்ளனர்! ஆனாலும் 23 பேர் மட்டும் சரியான விடையை எழுதியிருக்கிறார்கள். பலர் தங்கள் புகைப் படத்துடன் விடையை அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் கேட்காமல் யாரும் புகைப் படம் அனுப்ப வேண்டாம்.

வண்டி பாலத்தின் மேல் போகும் போது மாடு சிறுநீரும் சாணமும் கழிக்கிறது. இவை இரண்டும் ஏற்கெனவே மாட்டின் வயிற்றில் இருந்தவையே என்றாலும், இவை விழும் போது புவிஈர்ப்பு விசை காரணமாக வேகம் பெற்று எடையை ஒரு சில வினாடிகள் அதிகரிக்க வைக்கின்றன. இதைத் தாங்காமல் பாலம் உடைகிறது என்பதே சரியான விடை.

முதல் பரிசு ரூ. 25/- பெறுபவர்:

பி. மதனகோபால், அகஸ்தீஸ்வரம்.

இரண்டாவது பரிசு ரூ. 15/- பெறுவோர்:

1. டி. நளினி, லால்குடி.
2. க. தியாகராஜன், குமராட்சி — 608 302.

மூன்றாவது பரிசு ரூ. 10/- பெறுவோர்:

1. எஸ். லலிதா, பம்பாய்.
2. பி. மாணிக்கம், சென்னை — 19.
3. மு. முத்துராமகிருஷ்ணன், கோயமுத்தூர்.
4. எஸ். பல்லவன், கல்லாத்தூர்.

ஆறுதல் பரிசு ரூ. 5/- பெறுவோர்:

1. அ. கவிதா, சென்னை — 600 021.
2. ஆர். கதிரவன், இரத்தினபுரி, கோவை.
3. ஜி. முருகன், சீர்காழி.
4. டி. மெர்லின் ரீட்டா, நாகர்கோயில்.
5. டி. ஜான் சுந்தரபாண்டியன், சத்தியமங்கலம்.
6. சி. கார்த்திகேயன், கிச்சிபாளையம், சேலம்.
7. கே. செல்வகுமார், திருப்பூர் — 1.
8. எம். பி. சிவராமகிருஷ்ணன், சென்னை — 33.
9. எல். ஆர். முகமது மதீன், பேரணாம்பட்டு.
9. தி. ச. செந்தில்வேலன், சென்னை — 57.
10. எல். ஆர். முகமது மதீன், பேரணாம்பட்டு.
11. சி. பார்வதி செல்வி, பாளையங்கோட்டை.
12. பி. கேசவராஜ், கொமாரபாளையம்.
13. ஏ. பவானி, திண்டிவனம்.
14. அ. ரவிச்சந்திரன், சென்னை — 28.
15. கே. கிருஷ்ணமூர்த்தி, வடக்கநந்தல்.
16. அ. ஜஸ்டின், காரைக்குடி.

பரிசு பெற்றவர்களுக்குக் கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுக்கள். இந்தப் போட்டிக்கான கருத்தை வழங்கியவர்:
கே. செல்லப்பன்,
சோமஞ்சேரி,
ஏ. ரெட்டிபாளையம் அஞ்சல்,
பொன்னேரி வட்டம்.
— 601 204.

* பி. மதனகோபால் (முதல் பரிசு)



* டி. நளினி (2 வது பரிசு)



* க. தியாகராஜன் (2 வது பரிசு)



* கே. செல்லப்பன்



பட்டாணி, பழம், பொரி எல்லாம் வைக்கிறாங்களே தவிர, குடிக்க ஒரு பொட்டுத் தண்ணீர் கூட வைக்க மாட்டேங்கிறாங்களே! அவங்களை மாதிரி நமக்கும் தாகம் எடுக்கும்னு யாருமே நினைக்கறதில்லையே!'' என்று கூடவே அலுத்துக் கொண்ட மயில், ''இந்த அயல் நாட்டுக்காரங்களைப் பார்த்தால் பாவமா இருக்கு. அவங்களுக்காகவாவது தோகையை விரிச்சு ஒரு தடவை ஆடிக் காட்டுங்க. தமிழ்நாட்டு மயில்களுக்கு ஆடுவது மறந்து போச்சுன்னு அவங்க ஊர்ல போய்ச் சொல்லிடப் போறாங்க!'' என்று கணவனைக் கேட்டுக் கொண்டது.

மயில் ஆடுவதைக் காண அயல் நாட்டினர் வந்திருப்பதை அறிந்த காவல்காரன் அங்கேஅவசரம்அவசரமாக வந்து சேர்ந்தான். தன்னை அவர்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''ஐந்து வருஷம் முன்னாடி நாலு ஆண் மயில்கள், பத்து பெண் மயில்கள் இங்கே இருந்தன. எல்லாம் ஜமீன்தார் ஏற்பாடுதான். இந்தத் தோப்புக் கூட அவருடையதுதான். இதற்குப் பெயரே மயில்தோப்புத்தான்.''

''ஜமீன்தாருக்கு மயில் வளர்ப்பதில் அவ்வளவு ஆர்வமா?'' — ஆவலோடு கேட்டாள், அயல்நாட்டுப் பெண்மணி.

''அதெல்லாம் இல்லீங்க. ஜமீன்தாரிணிக்குத் தலையில் வழுக்கை. அதுக்கு மயில் எண்ணெய் தடவினால் குணமாகும்னு சொன்னாங்க. அதான் மயில் வளர்த்தார்.''

''என்ன கொடுமை! பயங்கரம்!!''

''ஜமீன்தார் காலமாயிட்டார். மிஞ்சிய மயில்கள் இந்த இரண்டும் தான்!''

ஜமீன்தாரிணியின் கூந்தல் சிகிச்சைக்குப் பலியான தனது உறவினங்களை நினைத்துக் கண்ணீர் வடித்தது நூறு கண்ணன்.

''இந்தத் தோப்பையும் மயில்களையும் என் சொந்தப் புள்ளைங்க மாதிரி நான்தான் கவனிச்சுக்கறேன்,'' என்று மறுபடி குழைந்தான் காவல்காரன்.

''பச்சைப் புளுகு. நூறு ரூபாய்க்கு நம்மை விற்க ஏற்பாடு செய்துள்ள இந்தக் கயவன் எப்படி நடிக்கிறான் பாருங்களேன்!'' என்று கணவனிடம் முறையிட்டது பெண் மயில்.

''இதன் தோகை இவ்வளவு கனமாக இருக்கே, இரவில் எப்படித் தூங்கும்?''

''அது ஒன்றும் அதற்குப் பிரச்னையே இல்லைங்க. தரையில் அப்படியே கண்ணை மூடித் தூங்கிடும்.''

'மரக்கிளைகள், மதில்கள் போன்ற உயர்ந்த இடங்களில் தோகையைத் தொங்கவிட்டு நான் தூங்குவதை ஒரு நாளாவது கவனித்திருந்தால் தானே இவனுக்கு உண்மை தெரியும்! இந்த அழகில் இவன்தான் நம்மைக் கவனித்துக் கொள்கிறானாம்!' என்று பொருமிக் கொண்டது நூறு கண்ணன்.

ஓர் ஐந்துரூபாய்நோட்டைக் காவல்காரனிடம் கொடுத்த வயதான பயணி, ''மயிலை இப்போ ஆடவைக்க



மேகத்தைக் கண்டுதான் மயில் ஆடுமா?



முடியுமா?'' என்று ஏக்கத்துடன் கேட்டார்.

''அது மட்டும் முடியாதுங்க. சூழ்நிலை குளிர்ந்திருந்தால் அது தானாகவே தோகையை விரிச்சு ஆடுங்க,'' என்று பரிதாபமாகக் கை விரித்தான் காவல்காரன்.

''இவன் பேசியதில் இது ஒன்றுதான் உண்மை!'' என்றது நூறு கண்ணன்.

காமெராவும் கையுமாக ஆவலுடன் காத்துக் கிடந்த அயல்நாட்டினர் முகத்தில் ஏமாற்றம் நிறைந்தது.

திடீரென்று பெண் மயில் சிறகடித்துத் தான் இருந்த மரக்கிளையில் தாவி நடந்தது. அப்படியே அதற்கு மேல் கிளை என்று தாவித் தாவி தோப்பின் கோடிக்கு விரைந்தது.

''எங்கே போறே எங்கிட்டே கூட சொல்லாம?'' என்று கேட்ட நூறு கண்ணன், தன் முதுகுப் பகுதியிலிருந்து கனத்த தோகையை ஒரு முறை சிலுப்பி உயர்த்தியது, கண்ணிமைக்கும் நேரம். மடக்கு விசிறியை விரிப்பது போல், சரசரவென்று தோகைக் கற்றை அழகாகப் பிரிந்தது. கால்களை அகட்டியும், கூட்டியும், பக்கவாட்டிலும், முன்னும் பின்னும் வைத்து, உயர்த்தி விரிக்கப்பட்ட தோகையின் கனத்தைத் தன் முதுகு எளிதாகத் தாங்க ஏற்பாடு செய்து கொண்டது. குட்டை வால் பகுதியும் அசைந்து ஒத்துழைத்தது. விரிந்த தோகை அசைந்து அசைந்து படபடத்து மேலும் அழகூட்டியது! இப்பொழுது நூற்றுக்கும் மேற்பட்ட வண்ணக் கண்கள் தோகையெங்கும் அழகை அள்ளி வீசின. கால்களை அசைத்து அசைத்து நகர்த்தி, ஒருமுறை வட்டமடித்து, குழுமியிருந்த எல்லோருக்கும் தன் எல்லையில்லா அழகைக் காட்டி

யது.

''அற்புதம்! இன்று மறக்க முடியாத நாள்!'' காமெராக்கள் பளிச்சிட்டன.

பெண் மயில் திரும்பி வந்தது.

''நீ திரும்பி வருவேன்னு எனக்குத் தெரியும்'' என்று சிரித்தது நூறு கண்ணன்.

''என்னைத் திரும்ப வரவழைக்க வாவது நீங்க ஆடுவீங்கன்னு எனக்குத் தெரியும். இதுக்காகத்தான் போனேன். உங்க ஆட்டத்தைப் பார்க்க அயல்நாட்டுக்காரங்க எவ்வளவு நேரமா காத்திருக்காங்க. அவங்களுக்காகவாவது நீங்க ஆடிக் காட்ட வேண்டாமா?'' என்றது பெண் மயில்.

''உனக்கு மகிழ்ச்சின்னா அது எனக்கும் மகிழ்ச்சிதான்,'' என்று சிரித்த நூறு கண்ணன், ''ஆமாம், இவ்வளவு சிரமப்பட்டு உனக்காக ஆடவைச்சு இவங்களை மகிழ்வித்தே. எனக்கு எவ்வளவு களைப்பும் தாகமுமா இருக்கு தெரியுமா?'' என்று பெண் மயிலிடம் கேட்டது.

''கொஞ்சம் பொறுங்க. இவங்களுக்கு இப்ப ஒரே மகிழ்ச்சி. தண்ணி பாட்டிலை எடுக்கிறாங்க. உங்களுக்கும் கொஞ்சம் கொடுத்தாலும் கொடுக்கலாம்.''

நூறு கண்ணன், தோகையை மடக்கிக் கொண்டு, ஆவலோடு கவனித்தது. புட்டியைத் திறந்து ஆளுக்குக் கொஞ்சம் நீர் குடித்த அவர்கள், ''உன் ஆட்டம் அற்புதம். நன்றி மயிலே,'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டனர்.

''நாம் தண்ணீருக்காகத் தவிப்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று நூறு கண்ணனைத் தேற்றிய பெண்மயில், ''இங்கே முருகன் கோவில் இருக்குமிடம் உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டது.

''ஒரு வாய்த் தண்ணீருக்காக நான் தினமும் எவ்வளவு தொலைவு செல்கிறேன் தெரியுமா? முருகன் கோவில் பத்தாவது தெருவில் இருக்கிறது!''

''அங்கே இப்போ முருகனுக்கு நூற்றுயெட்டுக் குடம் பாலாபிஷேகம் செய்கிறார்களாம். முருகனின் வாகனமாகக் கருதப்படும் உங்களுக்கு அங்கே ஒரு வாய்த் தண்ணீராவது கிடைக்காமலா போகும்? கிளம்புங்கள் போவோம்,'' என்றது பெண் மயில்.

கோவில் பிராகாரத்தில் முருகனுக்கு அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. அபிஷேகப் பால் ஒரு பெரிய அண்டாவில் விழுந்து நிரம்பிக் கொண்டிருந்தது. நூறுகண்ணனையும், பெண்மயிலையும் கண்டதும் பக்தர்களுக்குப் பெருமகிழ்ச்சி. பால் அண்டாவைக் குறிவைத்து நூறு கண்ணன் நடந்தது. பக்தர்கள் விலகி வழிவிட்டனர். இரண்டும் வயிறு கொள்ளு மட்டும் பாலைக் குடித்தன. சூழ்நிலையும் குளிர்ந்திருந்தது. நூறுகண்ணனுக்கு உற்சாகம்பீறிட்டுக் கொண்டு கிளம்பி, ஆடத் தொடங்கியது. பக்தர்களுக்கு அளவிட முடியாத ஆனந்தம்!

''இங்கே தினமும் அபிஷேக நீர், பால் எல்லாம் கிடைக்கும். தூங்க மதில் இருக்கு. இங்கேயே தங்கிவிடலாம்,'' என்று தன் முடிவைக் கூறியது நூறுகண்ணன். பெண்மயில் மறுக்கவில்லை. முருகனின் அபிஷேகத்தைக் காண வருகை தந்த மயில் தம்பதியர் கோவிலிலேயே தங்கிவிட்ட செய்தியைப் பத்திரிகைகளில் படித்த பக்தர்கள் மெய்மறந்து போனார்கள்!

அறிவியல் உண்மை:

* மயில் தரையில் உறங்காது. மரக்கிளை, சுவர் போன்ற உயர்ந்த இடங்களிலேயே உறங்கும்.
* மயிலுக்குக் குடிக்க நீர் கிடைப்பது அரிது. குடிக்கநீர்தேடி அது தொலை தூரம் செல்லும்.
* சூழ்நிலை குளிர்ந்திருந்தால் மயில் ஆடும். அதோடு, பெண் மயில்களை ஈர்க்க, எப்பொழுது வேண்டுமானாலும் தோகை விரித்தாடும்.
* தோகை மயிலின் வால் அல்ல. முதுகில் இருந்து பிரியும் தனிப் பகுதி அது. வால் குட்டையாகத் தோகைக்குக் கீழே இருக்கும். ஆடும் போது இதைக் காணலாம்.
* மயில் எண்ணெய்க்குத் தலைவழுக்கையைப் போக்கும் சக்தி இல்லை என்பது மருத்துவ உண்மை.

அதிசய நடராஜர்



ஒரு கையில் உடுக்கையும், இன்னொரு கையில் அனலும் தாங்கி எல்லை இல்லாத ஆனந்தம் முகத்தில் பொங்கத் தாண்டவமாடிக் கொண்டிருந்த அந்த நடராஜர் சிலை, வெறும் உலோகச் சிலையாகத் தோன்றவில்லை. தூக்கிய இடது காலை வைத்து விட்டு வலது காலைத் தூக்கி இதோ ஆடப் போகிறார் என்று எதிர்பார்க்க வைத்தது! உள்ளங்கையில் ஓடிய ரேகைகள், அவற்றின் சுருக்கங்கள், நகக்கண்கள், முகத்தில் பொங்கிப் பொலிந்த மகிழ்ச்சி, பெருமிதம் எல்லாம் சேர்ந்து ஏதோ உயிர்ச்சிலை எதிரே இருப்பது போன்ற மயக்கத்தை ஏற்படுத்தின.

கண்ணிமைக்காமல் அந்த நடராஜர் சிலையின் கலையழகை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த டக்ளஸ் பேரட் என்ற அந்த ஆங்கிலேயர் அசந்து போய் நின்றார்.

''இந்தச் சிவபுரம் நடராஜர் சிலையைப் போன்ற ஓர் அழகுக் கலைப் பொக்கிஷத்தை இதுவரை நான் கண்டதே இல்லை! நண்பர்கள் இதைப் பற்றிக் கூறிய போது என்னால் நம்ப முடியவில்லை. இங்கே வந்து பார்த்த பிறகுதான், நண்பர்கள் குறைவாகவே கூறியிருக்கிறார்கள் என்பதை உணர்கிறேன்,'' என்று தன்னை மறந்து வாய்விட்டுப் புகழ்ந்தார் டக்ளஸ் பேரட்.

அந்த ஆங்கிலேயர் புகழ்ந்தது வெறும் புகழ்ச்சியல்ல. உண்மை. நடராஜர் சிலைகளிலேயே தனித்தன்மை கொண்டதாக, அழகும் உயிரோட்டமும் உடையதாக இருந்தது அந்தச் சிவபுரம் நடராஜர் சிலை. தஞ்சாவூரில் குடவாசலுக்கு அருகே இருந்த சின்னஞ்சிறு கிராமமாகிய சிவபுரத்தை உலகப் பெருமைக்கு உயர்த்திய பெருமை அந்த ஊரில் இருந்த நடராஜர் சிலைக்கே உரியது. அந்தத் தெய்வீக அழகுச் சிலையை 1952 – ஆம் ஆண்டு பூமிக்குள்ளிருந்து கண்டுபிடித்து வெளியே எடுத்து வந்தார்கள். சோழர் காலத்தின் சிற்பச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய அதன் வயது சுமார் 900 ஆண்டுகள். கலையழகு கொஞ்சிய அதன் சிறப்பை அறிந்த கலையன்பர்கள், அதை நேரில் கண்டு களிக்க உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் சிவபுரத்திற்கு வந்தனர். 'புகைப்படங்களில் தோன்றுவதைவிட ஆயிரம் பங்கு அதிகக் கலையழகோடு அசத்துகிறார் சிவபுரம் நடராஜர்!' என்று பார்வையாளர்கள் புத்தகத்தில் பல நாட்டுக் கலையன்பர்களும் எழுதி அதன் புகழை மேலும் உயர்த்தினர்.

அந்தத் தெய்வீக அழகுப் பொக்கிஷத்தைக் கண்டு களிக்க உலகப் புகழ் பெற்ற இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்தின் டைரக்டர் டாக்டர் டக்ளஸ் பேரட் நேரில் சிவபுரம் வந்திருந்தார். உலக நாடுகளின் கலைப் பொக்கிஷங்

ஹரிசிங்

களையெல்லாம் கண்டுகளித்துப் பாதுகாக்கும் மிகப் பெரிய பொறுப்பு வகித்த அவர், நடராஜரின் அழகுக் கோலத்தைப் பார்த்ததும் தம்மையே மறந்தார். இப்படியும்கூட ஓர் அழகுப் பொக்கிஷத்தை . மனிதர்களால் உருவாக்க முடியுமா? என்பதை எண்ணியெண்ணி அவர் வியந்து போனார். நடராஜரைப் பலவிதமான கோணங்களில் ஆசைதீரப் புகைப்படம் பிடித்துத் தள்ளினார்!

தாம் எடுத்த புகைப்படங்களை வைத்து டக்ளஸ் பேரட் எழுதிய பல கட்டுரைகள் அயல்நாட்டுக் கலை ரசிகர்களின் கவனத்தைக் கவர்ந்தன. உலகப் புகழ்பெற்ற பிரிட்டிஷ் மியூசியத்தின் டைரக்டரான அவரே புகழ்ந்திருக்கிறார் என்றால், அதன் சிறப்பு எப்படியிருக்கும் என்று கலா ரசிகர்கள் சிவபுரத்தை நோக்கிப் படையெடுத்தனர். உலகத்தின் தலைசிறந்த அருங்காட்சியகங்கள், சிவபுரம் நடராஜரின் புகைப்படத்தையாவதுவைத்துக்கொண்டுபெருமைப் பட முயன்றன.

தமிழகத்திற்கே; இந்தியாவுக்கே பெருமை தேடித்தரும் கலைச் செல்வம் என்று பலரும் கொண்டாடிப் போற்றிய அந்த அற்புத நடராஜரை, வியாபாரக் கண்ணோடு பார்த்த புல்லர்களும் இருந்தனர்.

பல இலட்சம் ரூபாய் மதிப்புடைய அந்தச் சிலையைக் கடத்தி உலகக் கலைப்பொருள் சந்தையில் விற்றால் கிடைக்கக் கூடிய இலாபத்தை அந்தக் கயவர்கள் கணக்குப் போட்டுப் பார்த்தனர். அதன் விளைவு, சிலையைக் கடத்த வாய்ப்புக் கிடைக்காதா என்று அவர்கள் கவனமாகக் காத்திருந்தனர். அந்த வாய்ப்பு அவர்களுக்கு விரைவில் கிடைத்தது.

எவ்வளவோ நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மண்ணுக்குள் புதைந்து கிடந்ததால் அந்தத் தெய்வீக நடராஜர் சிலையின் சில இடங்களில் பச்சை பிடித்துக் கிடந்தது. உலகக் கலைப் பொருள்களில் இடம் பிடித்துவிட்ட அந்த அழகுச் சிலையின் 'பச்சை'களை நீக்கக் கூடாதா என்று கலையன்பர்கள் முறையிடத்தொடங்கினர். அதற்கான செலவைத்தாங்களே ஏற்கவும் சிலர் முன்வந்தனர். கோவில் அதிகாரிகள், சுவாமிமலையில் உள்ள ஒரு சிறந்த் ஸ்தபதியிடம் சிலையை 1956 — ஆம் ஆண்டு ஒப்படைத்தனர்.



சிலையைக் கடத்தக் காத்திருந்த கயவர் கூட்டம், ஸ்தபதிக்கு ஆசை வார்த்தை காட்டித் தங்கள் வலையில் சிக்க வைத்தது. தம்முடைய திறமையையெல்லாம் காட்டி ஸ்தபதி போலிச் சிலை ஒன்றைத் தயாரித்தார். 'பச்சை எடுக்கப்பட்டது' என்று போலிச் சிலையைச் சிவபுரம் கோயிலுக்கு அனுப்பி வைத்தார். கலைப் பொக்கிஷமான தெய்வச் சிலையை மனச்சாட்சியில்லாமல் மாற்ற ஒப்புக்கொண்ட ஈனச் செயலுக்காக அவருக்கு இருபதாயிரம் ரூபாய் தரப்பட்டது!

ஒரிஜினல் கலைப் பொக்கிஷமான ஒப்பற்ற நடராஜர் தன்னை உருவாக்கிய தாய்நாட்டு மக்களின் கயமைத்தனத்தால், தன்னைக் கடத்தி வந்தவர்கள் எல்லோருக்கும் இலட்சக் கணக்கான பணத்தை அள்ளிக் கொடுத்து, பல கைகள் மாறி, பம்பாய் வழியாக அமெரிக்கா பயணமானார். அமெரிக்காவின் கோடீஸ்வரர்களில் ஒருவரும், கலையன்பருமான டெக்சாஸைச் சேர்ந்த நார்த்தர்ன் சைமன் பல இலட்சங்களைக் கொடுத்துச் சிவபுரம் நடராஜரைத் தமதாக்கிக் கொண்டார். சிவபுரம் நடராஜரைப் பல கோணங்களில் 'டாக்கு



மெண்டரி' படமெடுத்துக் காசு குவித்தார் அவர். நடராஜரைக் காண வந்த கலையன்பர்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தக் கட்டணம் வசூலிக்கப் பட்டது! அப்படியும் கூட்டம் குறைய வில்லை! செப்புப் படிவங்கள் செய்யும் கலையில் தமிழர்கள் 900 ஆண்டுகளுக்கு முன்பே தனித்திறமை பெற்றிருந்ததை உலகறிய வைத்தச் சிவபுரம்நடராஜர், சென்றஇடமெல்லாம், தன்னைக் கொண்டு போகின்றவர்களுக்குப் பொருளையும் பெருமையையும் குவித்தார்.

ஏற்கெனவே நடராஜரின் கலையழகில் சொக்கிப் போயிருந்த டக்ளஸ் பேரட், 1964 – ஆம் ஆண்டு மீண்டும் இந்தியா வந்தார். பல தலை போகும் வேலைகளுக்கு இடையேயும் அவர் மீண்டும் சிவபுரம் வரத் தவறவில்லை! அடக்க முடியாத கலைத் தாகத்துடன் நடராஜரைப் பார்த்தார்.

சிலையை வடித்த தாய்நாட்டு மக்களாலேயே கூடக் கண்டுபிடிக்க முடியாமல்போய்விட்ட அந்தமோசடியை, கலைக்கென்றே வாழ்ந்த அந்த உண்மை ரசிகரின் கண்கள் கண்டு பிடித்து விட்டன! கலையுள்ளம் படைத்த டக்ளஸ் பதறினார்! அரசாங்கத்திற்கு விவரமான அறிக்கை கொடுத்தார். கலையன்பர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். பாரதமும், உலகமும் திடுக்கிட்டது!

பிரதமர் நேருவும், அவருக்குப் பின் வந்த லால்பகதூர் சாஸ்திரியும் இதில் தனிக் கவனம் செலுத்தினர். அமெரிக்காவில், நார்த்தர்ன் சைமனுக்குச் சொந்தமான நடராஜர் சிலை ஒன்று, காட்சிப்பொருளாகிப்பணம்கொழிக்கிறது என்ற செய்தியறிந்து கலையன்பர்களும், நிபுணர்களும் திரண்டனர். நார்த்தர்ன் சைமனிடம் உள்ள சிலை 'ஒரிஜினல்' சிவபுரம் நடராஜர் சிலையே என்பது உறுதி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டின் உயர்ந்த போலீஸ் அதிகாரி, இந்திய அரசின் சார்பில் அமெரிக்கா சென்று சைமனிடம் பேசினார். அந்த அற்புதச் சிலையைத் திருப்பித்தர அவர் மறுத்து விட்டார். இதற்குப் பிறகு சர்வதேசப் புலனாய்வுத் துறையான 'இண்டர் போல்' மூலமாக இந்திய அரசு வழக்குத் தொடர்ந்தது. பத்து ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்ற இந்த வழக்கில் இந்திய அரசு வெற்றி பெற்றது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு சிலையை இந்தியாவிடம் ஒப்படைக்கச் சைமன் இணங்கினார். இந்தப் பத்து ஆண்டுகளில் சிவபுரம் நடராஜர் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கும் பலத்த கட்டுக்காவலுடன் விஜயம் செய்து, தமிழ்நாட்டின் சிற்பக் கலையின் தொன்மையை உலகறிய வைத்தார். இத்ன்படி கடத்தப்பட்ட பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு கலைப் பொக்கிஷமான சிவபுரம் நடராஜர் மீண்டும் 1986 – ஆம் ஆண்டு தமிழகம் வந்தார்! சிலைக்கு மிகப் பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டு, மக்களுடைய தரிசனத்திற்காகப் பத்து நாட்கள் சென்னை கபாலி கோவிலில் வைக்கப்பட்டது. இன்று திருவாரூரில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

தாய்நாட்டு மக்களாலேயே கண்டு பிடிக்க முடியாத மோசடியை உலகுக்கு உணர்த்தி, கடத்தப்பட்ட விலை மதிப்பில்லாத கலைப் பொருள் மீண்டும் இந்தியாவுக்குக் கிடைக்கக் காரணமாக இருந்தது டாக்டர் டக்ளஸ் பேரட்டின் கலையுள்ளம் தான் என்ற உண்மையை எவ்வளவு பேர் அறிவார்கள்?

தங்கமணி

மேற்கு வெயில் பளபளத்தது.

தெற்குக் காற்று ஜிலுஜிலுக்கது.

பங்களா மாடியிலுள்ள விசாலமான கூடத்தில், மஞ்சள் வெயிலின் கதகதப்பும், இனிய தென்றலின் கிளுகிளுப்பும் குழைந்து தழைத்தது —

வெந்நீரையும், தண்ணீரையும் கலந்த மாதிரி...!

ஜன்னல் அருகில், சாய்வு நாற்காலியில் சுகமாகச் சாய்ந்த வாறு, என்னவோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த நவீன் —

"நவீன்...! நவீன்ன்ன்..!"

—என்று அதிருகிற குரலைக் கேட்டதும்,

சுருக்காக நிமிர்ந்தான். புத்தகத்தை மூடிக் கொண்டே எழுந்தான். ஜன்னல் ஓரமாகப் பாய்ந்தான். பங்களாவைக் கவனித்தான்.

இந்தப் பங்களாவுக்கும், அடுத்த பங்களாவுக்கும் நடுவில், ஒரு சுவர். மூன்று, மூன்றரை அடி உயரமுள்ள சுற்றுச் சுவரின் மீது ஏறி நின்ற பீட்டர், ஜன்னலில் காணும் நவீனைப் பார்த்தான். புன்சிரிப்புடன் கேட்டான். "ஹலோ... நவீன்! நீ சும்மாத்தானே இருக்கிறாய்...?"


"என்ன பேட்டர்...?"

"ஒன்றுமில்லை... வந்து... நானும், எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்து தங்கியிருக்கிற எனது அமெரிக்க நண்பனும் சினிமாவுக்குப் போகிறோம். எங்களுடன் நீயும் வருகிறாயா...? ஜாலியாகப் போய் வரலாம்..." என்று நட்புடன் குழைந்து கொஞ்சினான், பீட்டர்.

மறுநொடி —

"தாங்க்யூ...! நீங்கள் இருவரும்





போய் வாருங்கள். நான், என்னுடைய தம்பி, அம்மா எல்லோரும் சீஷோருக்கு (கடற்கரைக்கு)ப் போக விருக்கிறோம். ம்... வந்து... ஹூ இஸ் தட் அமெரிக்கன் பாய்...? எனக் குறுஞ்சிரிப்புடன் கேட்டான், நவீன்.

"அவனுடைய தாத்தா, என் அப்பாவுக்கு நண்பர். அவர்... அந்தத் தாத்தா..." — பீட்டர் மேலும் சொல்லுவதற்குள், ஓர் இனிய குரல் குறுக்கிட்டது: "ஹலோ...! பீட்டர்...! ஆர் யூ ரெடி...?"

பீட்டர், விசுக்கெனத் திரும்பினான்.

"போலாமா...?" எனத் தமிழில் தெளிவாகக் கேட்டபடியே சுற்றுச் சுவர் ஓரமாக வந்தான், அமெரிக்கச் சிறுவனான ஷெல்லி.

அவனைக் கண்டதும் —

"ஓ... ஷெல்லீ...! ம், புறப்படு...!" சுவரின் மீது மெல்ல உட்கார்ந்து எழுந்து, 'ஹ்ஹூப்ப்ப்!' என மூச்சுப் பிடித்தவாறு, 'சொய்ங்ங்'கெனத் தாவிக் குதித்தான்.

இதைப் பார்த்துச் சிரித்த ஷெல்லி, தமாஷாகச் சொன்னான்: "பீட்டர்... தாவிக் குதிப்பதில், நீ ஒரு சிம்பன்ஸிக் குரங்குதான்...!"

பீட்டர் பாய்ந்தான.

பங்களா வாசலில், ஒரு மரம், ஓங்கி வளர்ந்து கிளைத்துப் பரந்துச் செழித்திருக்கிற அந்தத் தூங்குமூஞ்சி மரத்தடியில், சாய்த்து வைத்திருக்கிற சைக்கிளை எடுத்தான். சற்றுத் தூரம் வேகமாகத் தள்ளிக் கொண்டே ஓடி சரேலென எம்பிக் குதித்து இருக்கையில் அமர்ந்தவன், ஷெல்லீ! கமான்! என்றான்.

ஷெல்லி ஓடினான். சைக்கிளின் பின்புற இருக்கையில் பாய்ந்தேறி உட்கார்ந்ததும், "குரங்காட்டமெல்லாம் வேண்டாம். ஒழுங்காக ஓட்டிக் கொண்டு போ..." என்றான்.

சுற்றுச் சுவர் வாசலைக் கடந்து சாலைக்குச் சென்றதும், சைக்கிளின் மிதியடிகளை வேகமாகச் சுழற்றினான் பீட்டர்.

சைக்கிள் பறந்தது...!

"ஷெல்லி..."

"என்ன...?"

"நீயும், உன் தாத்தாவும் தமிழில் தெளிவாகப் பேசுகிறீர்களே, எப்படி...?" என்று மிதியடிகளைச் சுழற்றியபடியே கேட்டான், பீட்டர்.

ஷெல்லி சொன்னான்: "என் தாத்தாவுக்கும், என் அப்பாவுக்கும் வேட்டையாடுவதுதான் தொழில். தாத்தா, பாம்பு வேட்டைக்காரர். அப்பா, மிருக வேட்டைக்காரர். அதனால்... தாத்தா, அப்பா, நான் எல்லோரும் ஒரு சமயம், இந்தியாவுக்கு வந்தோம்... வந்து... இந்தியக் கிராமங்களிலும், காடுகளிலும் ஏழெட்டு வருடங்களை அலைந்து திரிந்து கழித்திருக்கிறோம். மூன்று, மூன்றரை வருடங்கள் தமிழ்நாட்டிலுள்ள மதுரை மாவட்டத்திலே

இஜு கிஷுங்ங்...



இங்கு சுற்றித் திரிய நேர்ந்தது. அப்போது, நாங்கள் எல்லோருமே தமிழில் பேசுவதற்குப் பழகிக் கொண்டோம். என் தாத்தாவுக்கு இந்திய மொழிகள் பலவற்றில் பழக்கம் உண்டு. என் அப்பாவும் சில மொழிகளில் சரளமாகப் பேசுவார். நான்... இந்தியிலும் மலையாளத்திலும் தத்துக்கா பித்துக்காவெனப் பேசுவேன்... பட்... ஐ ஷெல் ஸ்பீக் வெரி நைஸ்லி இன் ட்டமில்...''

சைக்கிள் ஓடிக் கொண்டிருக்கிறது...

''ஓ... அப்படியா...!'' என்ற பீட்டர், மிதியடிகளைச் சுழற்றியபடியே நொடி நேரம் தயங்கிய பிறகு, ஆவலுடன் கேட்டான்: ''ஆமாம்... ஷெல்லி... நீயும், உன் தாத்தாவும் எங்கள் வீட்டுக்கு வரும்போது, ஏராளமான பெட்டிகளும், பிரம்புக் கூடைகளும் எடுத்து வந்தீர்களே... அவைகளில் என்ன இருக்கிறது...?''

''தகரப் பெட்டிகளில் எங்களுடைய உடைகள் இருக்கின்றன. மரப் பெட்டிகளில் வேட்டைக்குத் தேவையான ஆயுதங்கள் உள்ளன. பிரம்புக் கூடைகளில், பாம்புகளைச் சிறைப் படுத்தி வைத்திருக்கிறோம்...''

''ஆ...! பாம்புகளா...?''

''ஆமாம்... விலை மதிப்புள்ள பாம்புகள்!. வெண்ணிற மூங்கில் பாம்புகள், மலைப் பாம்புக் குட்டிகள், ராஜநாகம், குழி விரியன் — கிலுகிலுப்பைப் பாம்பு — சலங்கைப் பாம்பு — சங்கிலிக் கறுப்பன் எனச் சொல்லப் படுகிற ராட்டில் ஸ்நேக், ராட்லர் மம்பா, திட்டிவிடம்...'' ஷெல்லி சொல்லிக் கொண்டிருக்கையில் —

''சரி, அப்புறம் பேசலாம்...'' என்றவாறே சைக்கிளைத் திருப்பி, திரைப் படக் கொட்டகை வாசலுக்கு ஓட்டிச் சென்றான், பீட்டர்.

வெகு நேரமாயிற்று.

இரவு எட்டு மணி, ஐம்பது நிமிஷங்கள்...

இங்கிலீஷ் படம் முடிந்து, தியேட்டருக்குள்ளிருந்து கிஜுகிஜுவென வெளிப்படுகிற ஜனங்களோடு ஜனங்களாகப் பீட்டரும் ஷெல்லியும் வந்தார்கள். சைக்கிளில் ஏறிக் கொண்டு புறப்பட்டார்கள்

சைக்கிளை மெதுவாக ஓட்டியபடியே, பீட்டர் கேட்டான். ''ஷெல்லி... ராட்டில் ஸ்நேக், ராட்லர் ஸ்நேக் என்கிறாயே, அவை எந்த மாதிரிப் பாம்புகள்?''

ஷெல்லி கூறினான்: ''நிறம், உருவ அமைப்பு இவைகளைத் தவிர, பொதுவாக எல்லாப் பாம்புகளுமே பார்வைக்கு ஒரே மாதிரியாகத்தான் தெரியும். ஆனால்... ராட்டில் ஸ்நேக், ராட்லர் ஸ்நேக், டயமண்ட் பேக், கிங் கோப்ரா (ராஜநாகம்), கட்டு விரியன் இவைகளெல்லாம் மற்றப் பாம்புகளிலிருந்து வேறுபட்டவை.

நல்ல பாம்பு, சாரைப் பாம்பு, கண்ணாடி விரியன், சுருட்டை, இட்டி விடம் எனும் விஷப் பாம்புகளை விடக் கொடூரமான நஞ்சுள்ளது —

கட்டு விரியன்!

அதைவிடப் பயங்கரமானது —

கிங் கோப்ரா!

இவைகளைவிடக் கொடியவை ராட்டில், ராட்லர், டயமண்ட் பேக், மம்பா! இவைகளின் கொடிய நஞ்சுக்கு இந்த உலகத்தில் ஈடும் கிடையாது! இணையும் கிடையாது! இக்கொடூரமான, குரூரமான விஷப் பாம்புகளால் கொத்தப்பட்டது எதுவாயினும் —

சாவு நிச்சயம்...!

உயிர் மீளவே முடியாது...!''

சைக்கிளின் மிதியடிகளை மெல்லச் சுழற்றியபடியே, பீட்டர் கேட்டான்: ''இக்கொடிய பாம்புகள் பெரியவையா...? சிறியவையா...?''

''உலகில்... கிட்டத்தட்ட மூவாயிரம் வகைப் பாம்புகள் உள்ளன.

தாத்தா: அந்தக் காலத்துல வசதி இல்லாததால் நான் மூட்டை தூக்கித்தான் படிச்சேன்!

பேரன்: இந்தக் காலத்துல வசதி இருந்தும் நான் மூட்டை தூக்கறேனே!

தாத்தா: நீ எதுக்கு மூட்டை தூக்கறே?

பேரன்: புஸ்தக மூட்டை தூக்காட்டி 'மிஸ்'கிட்டே அடி வாங்கணுமே!

— சீர்காழி ஸ்ரீராம்.

அவைகளில் ஒன்றரை அடி நீளத்திலிருந்து, ஐம்பது அடி நீளமுள்ளவையும் உண்டு. எல்லாப் பாம்புகளும் நஞ்சுள்ளவை அல்ல. சில பாம்புகளுக்கு மட்டுமே விஷம் உண்டு. ராட்டில், ராட்லர், டயமண்ட் பேக் முதலிய பாம்புகள் சுமார் எட்டு, ஒன்பது அடி நீளமும், இருபது இருபத்தைந்து பவுண்டு கனமும் உள்ளவை. மலைப் பாம்..." ஷெல்லியின் பேச்சைக் குறுக்கிட்டு —

"இப்பாம்புகள் எல்லா நாடுகளிலும் உண்டு, இல்லையா...?" எனக் கேட்டான், பீட்டர்.

இல்லை..! இக் கொடிய விஷப் பாம்புகள், அசல் அமெரிக்க வாசிகள்! இவைகளை வேறு எந்த நாட்டிலும் காணவில்லை....! என்றான், ஷெல்லி.

அடுத்த விநாடி —

சாலை ஓரமாக ஓர் அம்மா நாயும், அக்கம் பக்கங்களில் அதனுடைய பிள்ளை நாய்களும் செல்வதைப் பார்த்ததும் —

'டடங், டிடிங்ங்...

டடங், டிடிங்ங்ங்..'

சைக்கிளின் கைப்பிடி அருகிலுள்ள மணிக் கிண்ணத்தை அசைத்து ஓசையெழுப்பியபடியே, சைக்கிளை லாவகமாக வளைத்துத் திருப்பி ஒதுக்கி ஓட்டினான், பீட்டர்.

இதைக் கண்டதும் —

ஷெல்லி சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்...?" என்றான், பீட்டர்.

"அதுகளும் இப்படித்தான்...!"

"எதுகளும் எப்படித்தான்...?"

நீ நாயையும், நாய்க் குட்டிகளையும் பார்த்து, மணியடித்து எச்சரித்த மாதிரியே ராட்டில் பாம்பும், ராட்லர் பாம்பும் தம்மை அணுகி வருகிற பிராணிகளைக் கண்டதும், கிளுகிளுங்ங்! ஜலஜலங்ங்ங்! — என்று மணி அடிக்கும்...!" என்று சொன்னான், ஷெல்லி.

ஷெல்லியைத் திரும்பிப் பார்த்த பீட்டர், குறுஞ்சிரிப்புடன் வினவினான்: "என்ன ஷெல்லி... கதை அளக்கிறாயா...?"

"கதை அல்ல, உண்மைதான்...!" என்ற ஷெல்லி தொடர்ந்து கூறினான்: "இந்தியாவிலுள்ள மலை நாட்டுப் பெண்கள் கைகளில் பெரிய பெரிய செம்பு, பித்தளை வளையல்களை அணிந்துகொண்டிருப்பார்கள். அந்த மாதிரியே,

ராட்டில் பாம்பு, ராட்லர் பாம்பு இரண்டின் வால்களிலும் கல் போன்ற ஏழெட்டு வளையங்கள் வளர்ந்திருக்கும். வாலை நிமிர்த்திக் குலுக்கினால், கிலுகிலுங்ங்! ஜலஜலங்ங்! — எனச் சப்தம் கிளம்பும்.

அப் பாம்புகளுக்கு,

இருபது நாட்களுக்கு ஒருமுறை, அவைகளின் நச்சுப் பற்கள் தாமே கழன்று விழும். அப்படியே... மாதத்துக்கு ஒரு தடவை, சட்டையைக் கழற்றியெறிகிற மாதிரி, உடலின் தோலை உரித்துக் கொள்ளும். அந்தச் சமயத்தில், வாலின் நுனியிலுள்ள கடைசி வளையம் கழன்று உதிரும். பழைய விஷப் பல் விழுந்த பிறகு, புதிய விஷப் பல் தோன்றுகிற மாதிரியே, பழைய வளையம் உதிர்ந்த பிறகு, புதிய வளையம் மெல்லக் கிளம்பி வளரும்.

மனிதர்கள்,

மிருகங்கள்,

பிராணிகள்

தம்மை நெருங்கி வருவதை உணரும். அடுத்த நொடியே பாம்புகள், தமது வாலைக் குறுக்கி ஓசையெழுப்பி எச்சரிக்கும்!

எச்சரிக்கையை மீறினால் —

சாவு நிச்சயம்!

ஆனால்...

இக்கொடிய பாம்புகள் மூக்காலும், நாக்காலும் மோப்பம் பிடித்தவாறே இரையைத் தேடிப் பாய்ந்தோடி அலையும்போது மட்டும் —

போலீஸ்காரனைக் கண்ட போக்



''அப்பா, பரீட்சையில நான் வாங்கின மார்க்கைப் பார்த்துட்டு, உனக்கும் படிப்புக்கும் ரொம்ப தூரம்னு வாத்தியார் சொல்லிட்டாரு.

''அதைப் பத்திக் கவலைப் படாதே; ரொம்பத் தூரம்னா டவுன் பஸ் ஏறி இனிமே போயிடு.''

— அண்ணாமலை நகர் வைரமாணிக்கம்.

கிரி, வாயை அடக்கிக் கொள்ளுகிற மாதிரி, வால்களை அடக்கிக் கொள்ளும்!'

பாம்பின் தலையில் மாணிக்கக் கல் இருக்கிறது, பாம்புக்குப் பழி வாங்கும் குணம் உண்டு, பாம்பு பாலையும், முட்டையையும் அருந்தும் என்பதெல்லாம் சுத்தப் புளுகு! ரசிக்கும்படியான கப்ஸாக்கள்!

பாம்புகளின் தலையில் கல்லும் கிடையாது! முள்ளும் கிடையாது! அவைகளுக்குப் பழி வாங்கும் ஞாபக சக்தியும் இல்லை!

பாம்புகளின் பொதுவான தீனி —

தவளை, சுண்டெலி, பெருச்சாளி, குருவி, பல்லி, ஓணான் முதலியவை தாம்! கொடூரமான கட்டு விரியன் பாம்பு, தனது குட்டிகளையே தின்னும்! பயங்கரமான கிங் கோப்ரா, பிற பாம்புகளை விழுங்கும்!''

ஷெல்லியின் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்ட பீட்டர், பரபரப்புடன் வினவினான்: ''என்ன! ராஜநாகம், பிற பாம்புகளை விழுங்குமா? அவைகளின் விஷம் ராஜநாகத்தைப் பாதிக்காதா?''

ஷெல்லி சொன்னான்: ''இரண்டு விஷப் பாம்புகள் ஒன்றையொன்று கொத்திக் கொண்டால் இரண்டுமே செத்துப் போகும்! சிங்கம், புலி, யானை எதுவானாலும் பாம்பு கொத்தினால் சாகும்! பாம்புகளைக் கடித்துக் குதறும் கீரிப்பிள்ளை கூட, பாம்பு கொத்தினால் சாகும்! ஆனால், மயில், வான்கோழி இவைகள் எத்தகைய விஷப்பாம்பு தீண்டினாலும் சாகாது! இவைகள், அவைகளைக் கொத்திச் சிதைத்து விழுங்கி ஏப்பம் விடும்!

''ராஜநாகம்,

விஷப் பாம்புகளை அல்ல —

விஷமற்ற பாம்புகளையே விழுங்கும்...!''

பங்களாவை நெருங்கியதும்,

சைக்கிளைத் திருப்பிச் சுற்றுச் சுவர் வாசலுக்குள் புகுந்து இருள் நிறைந்த பங்களா வாசலை அணுகிய பீட்டர், சைக்கிளை நிறுத்தி, ஒரு காலைத் தரையில் ஊன்றியபடியே கேட்டான்: ''உலகத்தில், எல்லா நாடுகளிலும் பாம்புகள் உண்டு, இல்லையா?''

சைக்கிளின் பின் இருக்கையிலிருந்து இறங்கிய ஷெல்லி, சொன்னான்: ''பெரும்பாலும், எல்லா நாடுகளிலும் உண்டு. என்றாலும்... கிரீன்லாந்து, அயர்லாந்து, நியூஜிலாந்து, ஆர்க்டிக் பிரதேசம் முதலியவைகளில், பாம்புகளே கிடையாது!''

மறு நொடி —

'கிலுகிலுங்ங்...!

ஜல ஜலங்ங்...!''

கிலுகிலுப்பையின் மெல்லிய ஒலியைக் கேட்டதும், திகீரென்றது! பரபரப்பும், பதைபதைப்புமாக அங்கும் இங்குமாக இருளை ஊடுருவி வெறித்து நோக்கினான், ஷெல்லி.

''என்ன பார்க்கிறாய்...?'' என்றான், பீட்டர்.

''ஆ! பீட்டர்! கூடைக்குள்ளிருந்து... ராட்டில் பாம்போ, ராட்லர் பாம்போ... எப்படியோ வெளியே... ஓடு! ஓடு...! பிரிங் டார்ச் லைட், குயிக்...!'' எனத் திகிலும், திணறலுமாய்க் கூவினான் ஷெல்லி.

அடுத்த நொடி —

அஞ்சி அதிர்ந்த பீட்டர், சைக்கிளைத் தூங்குமூஞ்சி மரத்தடியில் போட்டுவிட்டுப் பாய்ந்தோடினான். சில நொடிகளில் டார்ச் லைட்டைக்

கொண்டு வந்தான்.

"ஹலோ..." ஒரு குரல்! குரலோடு நீல நிற வெளிச்சம் பரவிப் பாய்ந்தது.

பீட்டரும், ஷெல்லியும் அடுத்த பங்களாவின் மாடியைக் கவனித்தார்கள். மாடி ஜன்னலுக்கு அருகில், குழல் விளக்கின் வெளிச்சத்தில் காணுகிற நவீனின் அம்மா, கீச்சுக் குரலில் வினவினாள்: "வாட் ஆர் யூ சர்ச்சிங் தேர்...?"

"ஒன்றுமில்லை, மாமி... வந்து... பாதுகாப்பாக வைத்திருக்கிற கூடைக்குள்ளிருந்து, ஒரு பயங்கர விஷப் பாம்பு, எப்படியோ வெளியே வந்து... கிலுகிலுங்ங், ஜலஜலங்ங் கென்று ஓசையிட்டபடி அலைகிறது! அதைத் தேடுகிறோம்..." என்றான், பீட்டர்.

அந்த அம்மா, விளங்காமல் கேட்டாள்: "பாம்பா...?"

ஷெல்லி சொன்னான்: "ஆமாம், அதனுடைய பெயர் ராட்டில் ஸ்நேக்."

மீண்டும், "கிலுகிலுங்ங்...! ஜலஜலங்ங்...!" என்ற சப்தம் கேட்டது.

"இதோ இதோ...! இந்தப் பக்கம்...! இந்தப் பக்கம்...!" என்று கூவித் தவித்தபடியே அங்கும் இங்குமாக ஓடினான், பீட்டர்!

நவீனின் அம்மா, சிரித்தாள்! "ஹும்! ராட்டில் ஸ்நேக்காவது, பாட்டில் ஸ்நேக்காவது! வெயிட் எ செகண்ட்..." எனச் சொல்லிச் சிரித்தபடி, விருட்டெனத் திரும்பி, வீச்சாகச் சென்றாள். நொடி நேரத்துக்குள் திரும்பி வந்தாள். "இன்று ஈவினிங், சிஷோருக்குப் போயிருந்தபோது வாங்கி வந்ததை, என்னுடைய சின்னப் பையன் ஆட்டி அசைத்து, உலுக்கிக் குலுக்கி விளையாடிக் கொண்டிருந்தான்..." எனக் கூறியவாறே கையிலிருக்கிற பிளாஸ்டிக்காலான பாம்புக் கிலுகிலுப்பைப் பொம்மையைக் குலுக்கினாள்: 'கிலுகிலுங்ங்...! ஜல ஜலங்ங்...!'

அதைக் கண்டதும்,

பீட்டரும், ஷெல்லியும் அசடு வழிய வழியக் கூச்சத்துடன் குலுங்கிச் சிரித்தார்கள்.

பார்வையைப் பாதுகாக்க...



டாக்டர். சு. குணசேகரன்

அரசு விடுதியொன்றில் தங்கிப் படிக்கிறான், ராகவன். எனக்கு மிகவும் பழக்கமானவன். ஓய்வு நேரங்களில் என்னைச் சந்திக்க வருவான்.

நான் : வா, ராகவா, என்ன விஷயம்? கையில் ஏதோ கடிதம் போல் தெரிகிறதே! யார் எழுதியது?

ராகவன் : ஊரிலிருந்து தம்பி எழுதியிருக்கிறான், டாக்டர். சில நாட்களாக அவனுக்குப் பார்வையில் தெளிவில்லையாம். அதனால் ஊரில் உள்ள மருத்துவரிடம் காண்பித்திருக்கிறான். அவர் பரிசோதித்து விட்டு, தம்பிக்குக் 'கிட்டப்பார்வை' உள்ளதாகத் தெரிவித்தாராம். கிட்டப் பார்வை என்றால் என்ன டாக்டர்?

நான்: கிட்டப் பார்வை உடையவர்களுக்குத் தூரத்தில் உள்ள பொருட்கள் சரிவரத் தெரிவதில்லை. ஆனால் அருகில் உள்ள பொருட்கள் தெரியும். இக்குறையை ஆங்கிலத்தில் 'ஷார்ட்-சைட்' (Short-Sight) என்றழைப்பார்கள். மருத்துவர்கள் 'மயோப்பியா' (Myopia) என்பார்கள். இக் குறை சிறுவயதினருக்கு வரக்கூடியது.

கிட்டப்பார்வையைப் போலவே 'தூரப்பார்வை' என்றும் ஒரு குறைபாடு உள்ளது. இதில் அருகில் உள்ள பொருட்கள் தெரிவதில்லை. மாறாக, தூரத்தில் உள்ள பொருட்கள் தெரியும். இது பெரும்பாலும் நாற்பது வயதுக்கு மேல் வரும். இக்குறையை 'வெள்ளெழுத்து' என்று சொல் வழக்கில் சொல்வதுண்டு. ஆங்கிலத்தில் இதற்கு 'லாங்-சைட்' (Long Sight) என்று பெயர். நாங்கள் 'பிரஸ்பயோப்பியா' (Presbyopia) என்போம்.

ராகவன் : இவ்விரண்டு குறைபாடுகளும் எதனால் வருகின்றன.

நான் : சிறுவயதில் சரியான முறைகளில் படிக்காததாலும், வைட்டமின் குறை பாட்டாலும், 'கிட்டப் பார்வை' வருகிறது.

தூரப்பார்வை என்பது வயதான காலத்தில் விழித் தசைகள் தளர்வடைவதால் வரக்கூடிய குறைபாடு.

ராகவன் : ஒரு சந்தேகம் டாக்டர். ஒருவருக்குப் பார்வைக் குறைபாடு வந்துள்ளது என்பதை அவராகவே உணர முடியுமா?

நான்: முடியும், ராகவன். பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு அடிக்கடி கண் எரிச்சல் ஏற்படும். கண்ணில் நீர் வடியும். தலைவலி உண்டாகும். பார்வை தெளிவில்லாமல் இருக்கும். அல்லது ஒளியைக் கண்டாலே கண்கள் கூசும்.

ராகவன் : சரி டாக்டர், பார்வைக் குறைபாடுகள் நீங்க நாங்கள் என்ன செய்யவேண்டும்? அதை வரவிடாமல் தவிர்க்க முடியாதா?

நான் : முடியுமே! அதற்கான வழி நல்ல வெளிச்சமுள்ள இடங்களில் மட்டுமே படிக்க வேண்டும். குறைந்த வெளிச்சங்களில் படிக்கக் கூடாது. இரவில் படிக்கும் போது, விளக்கின் வெளிச்சம் புத்தகத்தில் விழ வேண்டுமே தவிர, உங்கள் கண்களில் படக்

கூடாது. 60 வாட்ஸ் மின் விளக்கு படிப்பதற்குத் தேவையான வெளிச்சத்தைக் கொடுக்கும். அம்மின் விளக்கு நீங்கள் படிக்கும் புத்தகத்திலிருந்து சுமார் நான்கு அடி மேலே, பின்புறத்தில், இடப்பக்கமாக அமைந்திருப்பது நல்லது. படிக்கும் போது நிமிர்ந்து உட்கார வேண்டும். குனியவோ, வளையவோ, பக்கவாட்டில் சாயவோ கூடாது. படுக்கையில் படுத்துக் கொண்டு படிக்கக் கூடாது. அம்மாதிரியே நடந்து கொண்டும், ஓடும் பஸ்ஸிலோ ரயிலிலோ பயணம் செய்யும் போதும் படிக்கக் கூடாது.

கண்களுக்கும் படிக்கும் புத்தகத்திற்கும் இடைப்பட்ட தூரம் 30 செ. மீ. தான் இருக்க வேண்டும். படிக்கும் புத்தகத்தைச் சுமார் 45° கோணத்தில் வைத்துக் கொள்ளலாம். அதிக நேரம் படிக்கும் போது கண்களை அவ்வப்போது புத்தகத்திலிருந்து விலக்கி, தொலைவில் உள்ள பொருட்களின் மேல் பார்வையைச் செலுத்த வேண்டும். அப்போதுதான் விழித் தசைகள் தளர்வடையாமல் இருக்கும். நாற்பது நிமிடங்கள் தொடர்ந்து படித்தால் அடுத்த பத்து நிமிடங்களுக்கு அவசியம் ஓய்வு தேவை!

ராகவன் : தொலைக் காட்சியை அதிக நேரம் பார்ப்பதாலும் கண்கள் கெடுமாமே....! அது உண்மையா, டாக்டர்?

நான் : ஓரளவு உண்மைதான், ராகவன்! தொடர்ச்சியாக ஒன்றரை மணி நேரத்திற்கு மேல் தொலைக் காட்சியைப் பார்த்தால் கண்களுக்குக் கெடுதல்தான்! அவ்வப் போது தொலைவில் உள்ள அல்லது அருகில் உள்ள பொருட்களின் மீது பார்வையைச் செலுத்த வேண்டும்.

ராகவன் : நன்றி, டாக்டர். எனக்கு இன்னொரு சந்தேகம். விளையாடும்போது கண்ணில் அடிபட்டால் பார்வை போய்விடுமா?

நான்: கண்ணில் உள்ள கார்னியா (Cornea) எனப்படும் கருவிழியில் அடிபட்டால் பார்வை இழக்க நேரிடும். கிரிக்கெட் விளையாடும் போது பந்து கண்களைத் தாக்கலாம்; இல்லித்தட்டு விளையாட்டில் குச்சி கண்களில் படக்கூடும்; பென்சில் சீவும் போது எதிரே நிற்கும் சிறு



வலியின் கண்ணில் சிவப்பட்ட துண்டோ, பிளேடு முனையோ பட்டு விடலாம். இம்மாதிரிச் சமயங்களில் உடனடியாகக் கண் மருத்துவரை நாடினால் பார்வை இழப்பைத் தவிர்க்கலாம்.

ராகவன் : மின்னலைப் பார்த்தால் கூடக் கண்பார்வை கெடும் என்கிறார்களே. அது உண்மையா,

நான் : உண்மைதான். மிகவும் பிரகாசமான மின்னல் ஒளி கண்ணில் உள்ள விழித்திரை (Retina) யைப் பாதிக்கும். அதனால் பார்வை போய் விடக்கூடும். மதிய வேளைகளில் சூரியனைப் பார்ப்பதும், சூரிய கிரகணத்தைப் பார்ப்பதும் தவிர்க்கப்பட வேண்டும். வெல்டிங் எனப்படும் பற்றவைப்பு வேலைகளில் ஈடுபடுபவர்கள் அதற்கென உள்ள பாதுகாப்புக் கண்ணாடியை அணிந்து கொண்ட பின்னே பணியில் ஈடுபட வேண்டும்.

ராகவன் : சரி டாக்டர், என் போன்ற சிறுவர்கள் கடைகளில் விற்கும் கூலிங்கிளாஸ் கண்ணாடிகளை அணிந்து கொள்கிறார்களே, அது கண்களைப் பாதிக்காதா?

நான் : நிச்சயம்பாதிக்கும். அதில் சந்தேகமேயில்லை. மருத்துவரின் ஆலோசனையின்றி கடைகளில் விற்கும் கண்ணாடிகளை அணிவது தவறு.

ராகவன் : கண்ணில் ஏற்படும் கோளாறுகளுக்கும் தலைவலி வருவதற்கும் தொடர்பு உண்டா, டாக்டர்?

நான் : நல்ல கேள்வி, ராகவன்! நம் கண், வாய், மூக்கு இவை மூன்றும் மூளைக்கு அருகில் இருப்பதால் இவ்வுறுப்புகளுக்குள் ஏதேனும் ஒன்றுக்குக் கேடு வந்தாலும் தலைவலி தோன்றும். உடனடியாகக் கண் மருத்துவரை நாடி,தக்க சிகிச்சை பெற வேண்டியது அவசியம்.

ராகவன் : வைட்டமின் குறைவால் பார்வைக் கோளாறு வரும் என்று சொன்னீர்களே, டாக்டர்... அப்படியென்றால் எத்தகைய உணவுகளை உட்கொண்டால் தெளிவான பார்வையைப் பெறலாம்?

நான் : வைட்டமின் ஏ சத்து நிறைந்த உணவுகளை உட்கொண்டால் பார்வை தெளிவாகத் தெரியும். காரட், பப்பாளி, மாம்பழம், அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, பசலைக் கீரை, பால், முட்டை, மீன், மீன் எண்ணெய் போன்ற உணவுகளில் ஏ வைட்டமின் நிறைந்துள்ளது. இவ்வுணவுகளைத் தினமும் சேர்த்துக் கொண்டால் கண்ணில் தெளிவான பார்வை கிடைக்கும்.

இது தவிர, தினமும் குறைந்தது இருமுறையாவது கண்களைக் கழுவிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

ராகவன் : நன்றி, டாக்டர்!

எனக்குப் பிடித்த நண்பன் யார்?—போட்டி

நண்பர்கள் இல்லாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். பள்ளியில், வீட்டில், தெருவில், கடையில் என்று எங்கும் உங்களுக்கு நண்பர்கள் நிறைய இருப்பார்கள். அவர்களுள் உங்களுக்கு மிகவும் பிடித்த மாணவர் யாரென்பதையும், அதற்கு என்ன காரணம் என்பதையும் 15 வரிகளுக்கு மேற்படாமல் எழுதி அனுப்புங்கள். நங்கைகள் தங்கள் சிநேகிதிகளைப் பற்றி எழுதி அனுப்பலாம். கூப்பனையும் மறக்காமல் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். முகவரி: ஆசிரியர், 'கோகுலம்,' 32, ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. வந்து சேரவேண்டிய கடைசி நாள் 15.7.90. சிறந்தவைகளுக்குக் கட்டாயம் பரிசு உண்டு. பரிசு பெற்றோர் புகைப்படம் கோகுலத்தில் வெளியாகும். கேட்காமல் யாரும் புகைப்படத்தை அனுப்ப வேண்டாமே!

பெயர்: ....

முகவரி :..

....

....

பின் கோடு ....

முடிவு தேதி: 15.7.90





சார் தபால்!

• வருங்கால வரலாற்று நாயகர்கள் நாங்கள்தான் என்று கூறியதோடு மட்டும் அல்லாமல், அதற்கான சாத்தியக் கூறுகளையும் கூறிய சின்ன அண்ணன் தேசபந்து அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

செஞ்சி, தா. வைகுந்தசேன்.

• திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் எழுதிய 'பரதன் விரதம்' சிறந்த கருத்தைச் சிந்திக்க வைத்தது. நாங்கள் இனி மேல் எப்பொழுதும் எவரையும் தாழ்வாகவும், ஏளனமாகவும் நினைக்கக் கூடாது என்று சூளுரை எடுத்துக் கொண்டோம்.

பழையபல்லாவரம், க. பாலாஜி.

• தெய்வமனிதர் தியாகராஜரின் வாழ்க்கை வரலாற்றையும் அவருக்குக் கர்நாடக சங்கீதத்தின் மேல் இருந்த ஆர்வத்தையும் வண்ணப்படங்களில் 16 பக்கத்தில் வெளியிட்டு அசத்திவிட்டீர்கள்.

செஞ்சி, ர. இராமநாதன்.

• கோடையில் எங்கு செல்ல வேண்டும் என்று அறிவுரை கூறிவிட்டு, சும்மா இருக்காமல் கோடையில் வாசகர்கள் செய்த பயனுள்ள வேலைகளைப் பற்றி வாசகர்களிடம் பேட்டி கண்ட கோகுலமே, நீ பல்லாண்டு வாழ்க.

மாணவ, மாணவியர்களின் படிப்பிலும் 'கோகுலம்' மிகுந்த ஆர்வம் காட்டுகிறது என்பதற்கு புத்தக வேலிகள் ஒரு வண்ணக் கல்லை ஆதாரமாக உள்ளது. பாராட்டுக்கள் பல.

அடியக்கமங்கலம், பி. சஹாபுதீன்.

• நான் சில மாதங்களாக தபால் தலைகள் சேகரித்து வருகிறேன். ஆனால் அதை சேகரிக்கும் விதிமுறைகள் சரியாகத் தெரியாமல் ஏனோதானோ என்று சேகரித்து வந்தேன். கோகுலத்தில் அதைப்பற்றி படித்தவுடன் விவரங்களைத் தெரிந்து கொண்டேன். தங்களுக்கு பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தங்கரை, பி. கோவிந்தசாமி.

• ''இணையில்லா ஆசிரியர் ஈடில்லா மாணவர்'' மிக்க நல்லறிவு புகட்டுவதாகத் திகழ்ந்தது. ஆசிரியருக்கு மரியாதை, பணிவு, அவர் விருப்பமுணர்ந்து அதை நிறைவேற பணியாற்றுதல் போன்ற நெறிகளை அது போதித்தது.

ஈரோடு, ர. சந்திரன்.

நீங்கள் வரலாற்று நாயகரே!

• ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாது என்ற எங்களின் அறியாமையை அறிவியல் உண்மை மூலம் ஆணித்தரமாக நிரூபித்து விட்டார் ரேவதி அவர்கள்.

பூந்தோட்டம், து. வெண்ணிலா.

• ஹெலி காப்டர், குடை, கண்ணாடி பற்றிய தொழில் நுட்பத்தை, 'கேளுங்கள் சொல்லப்படும்' பகுதியில் சுருங்கக் கூறி மாணவர்களான எங்களை அவை பற்றி விரிவாகப் படிக்கத் தூண்டியுள்ள சின்ன அண்ணனுக்கு நன்றி.

பள்ளிக்கரணை, எஸ். கிருஷ்ணமூர்த்தி.

• அப்பாதான் பிள்ளையைத் திருத்த வேண்டும் என்பது இல்லை. அருள் வேலனைப் போன்ற நல்ல பிள்ளைகள் இருந்தால் தவறு செய்யும் குடிகார அப்பாவைக் கூடத் திருத்தி விடலாம் என்பதைக் காட்டியது 'எங்கே அந்த 25 ரூபாய்?' சிறுகதை. ஆசிரியருக்குப் பாராட்டுகள்..

பழைய தாம்பரம், ஜாஸ்பர் காதர்.

• 'அஞ்சாமல் வாழ 5 அறிவுரைகள்' என்ற அயல் நாட்டுக் கதையின் மூலம் 5 அறிவுரைகள் நான் தெரிந்து கொண்டேன். இந்தக் கதையினை மொழி பெயர்த்த எஸ். சித்ரா அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

சிதம்பரம், எஸ். சிவக்குமார்.

• தீண்டாமைக் கொடுமைகளை வேரறுக்க வந்த மகான் அற்புத மனிதர் அம்பேத்கரின் நூற்றாண்டு விழா காணும் இந்த நேரத்தில் அவரைப்பற்றி ஜானகி மணாளன் அவர்களின் கட்டுரை தந்து தூள் கிளப்பிட்டீங்க சார்!

பெரும்பாக்கம், ஜி. எஸ். ரூபன்.

• ஏன் சார், 'அட்டைப் படத்தில்: அரவிந்த்' என்று மாணவனின் பெயரைக் குறிப்பிட்டு மாணவியின் பெயரைக் குறிப்பிடாமல் விட்டது ஏனோ?

ஸ்ரீ ஆதிவராகநல்லூர், சா. கிருஷ்ணசாமி.

தவறுதான். சென்ற இதழ் அட்டைப் படச் சிறுமியின் பெயர், ஷோபனா. இப்போது திருப்திதானே?

— ஆசிரியர்.



மின்னல் இல்லாத நாளென்பது இல்லை என்று கருதப்படும் ஜாவா பகுதியில், மிகக் கடுமையான வெப்பம் கொண்ட சடை மின்னல் (ஃபோர்க் லைட்னிங்) தாக்கியது. தாக்குதலுக்கு இலக்கானது 1500 லிட்டர் நீர் பிடிக்கக்கூடிய மேல்நிலை (ஓவர் ஹெட்) நீர்த் தொட்டி. ஒரு சில விநாடிகளில் நீர் கொதித்துக் காலியாகி விட்டது. தொட்டியைத் தாங்கி நின்ற பிரும்மாண்டமான கான்க்ரீட், கரிக்கட்டைகளாக நின்றன!

அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் மணல்பாங்கான பகுதி, மூன்று முறை அடுத்தடுத்து மின்னல் தாக்குதலுக்கு இலக்கானது. அப்பகுதியில் மணலெல்லாம் உருகிக் கருகிப் பாறைகளாகக் கெட்டிப் பட்டன!

பசிபிக் கடலில் இருநூறுக்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்று கொண்டிருந்த 'மாண்டியத்' என்ற கப்பல், மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி அரை மணி நேரம் கொழுந்து விட்டு நடுக்கடலில் எரிந்து, கரியாகி நீரில் மூழ்கியது. சுற்றுப்புற நீர் ஒரு சில நிமிடங்கள் கொதித்து, கடல் வாழ் உயிரினங்கள் வெந்து மிதந்தன!

தேங்காய்க் குலைகளோடு பச்சைப் பசேல் என்று வானளாவக் குலுங்கி நின்ற தென்னை மரத்தின் உச்சியை மின்னல் தாக்கியது. இலவம் பஞ்சு எரிவது போல், பச்சைக் குலைகள் கொழுந்து விட்டு எரிந்து, மரம் மொட்டைக் கரித் தூணாக நின்றது!

இப்படித் தொட்டதையெல்லாம் பொசுக்கும் அளவுக்குப் பயங்கரமான வெப்பம், மின்னலுக்கு எப்படிக் கிடைக்கிறது? இது பற்றிப் பல மாறுபட்ட கருத்துக்கள் விஞ்ஞானிகளிடையே நிலவுகின்றன. ஆனால் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப் பட்ட பொதுவான கருத்து:

மேகங்களில் எதிர் மின்னோட்டமும் நேர் மின்னோட்டமும் உருவாகி, ஒன்றால் ஒன்று ஈர்க்கப்பட்டு, மின் (சாரத்தை) சக்தியைப் பெருக்கித் தேக்கிக் கொண்டு உலவுகின்றன. இவை ஒன்றோடு ஒன்று மோதி சக்தியைப் பெருக்கிக் கொண்டு காற்று மண்டலத்தைச் சூடாக்கி, தேக்கி வைத்திருக்கும் அவ்வளவு மின்சாரத் தோடும் முழு வீச்சுடன் தரையை நோக்கிப் பாய்கின்றன. இது கண்ணைப் பறிக்கும் ஒளியோடு பாய்ந்து வரும் பாதைதான் மின்னல். இதன் ஒளிக் கரங்கள் விரிந்து பரந்து பூமியை நோக்கிப் பாய்கின்றன. எதையாவது பற்றிக் கொண்டு பூமியில் இறங்கி ஓடத் துடிக்கின்றன.

வீட்டில் பயன்படுத்தப்படும் மின்சாரம், நம்மை ஊடுருவித் தரையில் பாய்வதை 'ஷாக்' என்கிறோம். மேகத்திலிருந்து அதிவேகமாகப் பாய்ந்து வரும் மின்சாரம், இடையில் நிற்பதை ஊடுருவித் தரையில் இறங்

குவதை மின்தாக்குதல் என்கிறோம். இவை பற்றிக் கொண்டு இறங்கும் பொருள்கள் உயர்ந்த மரங்கள், கட்டிடங்கள், கோபுர உச்சிகள் போன்றவை.

இதே போல் விமானங்கள் பறந்து கொண்டிருக்கும்போதே மின்னலின் தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைவதுண்டு. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நவீன அறிவியல் வளர்ச்சியின் துணையால் விண்வெளிக் கலங்களும், விமானங்களும் மின்னலின் தாக்குதலை ஏற்றுச் சமாளிக்கும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன.


வீட்டில் நாம் பயன்படுத்தும் மின்சாரத்தின் ஆற்றல் அளவு 120 வோல்ட்டுகள். மின்னல்கள் வெளியிடும் மின்சாரத்தின் அளவு என்ன தெரியுமா? 100,000,000 வோல்ட்டுகள். இதிலிருந்தே மின்னல் வெளியிடும் மின் ஆற்றலின் சக்தி எவ்வளவு என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

உலகத்தில் ஒரு நாளைக்குச் சராசரி 1800 இடி முழக்கங்களுடன் கூடிய மின்னல்கள் உருவாகிப் பூமியைத் தாக்குகின்றன. மின்னலால் அதிக அளவுக்குத் தாக்கப்படும் பகுதி அமெரிக்காவின் அரிசோனா, டங்கன் மாநிலங்களும், ஜாவாவின் பகுதிகளும்தான். மின்னல், இடிப் புயலால் ஏற்படும் பெருத்த தேசங்களிலிருந்து காத்துக் கொள்ள நவீன கண்டுபிடிப்புகளை முழு மூச்சில் உற்சாகப்படுத்தி வருகிறது அமெரிக்கா. நியூயார்க் பல்கலைக் கழகத்தின் வாயிலாக இடி, மின்னல், புயல் பற்றிப் பல புதிய உண்மைகள் கண்டறியப்பட்டு வருகின்றன.

மின்னல் ஆராய்ச்சி முயற்சியில் ஒரு மாபெரும் திருப்பு முனை பெஞ்சமின் ஃபிரேங்கிளின் கண்டுபிடித்த இடிதாங்கி என்ற லைட்னிங் அரெஸ்டர். ஃபிலெடெல்பியா மார்கெட் தெருவில் இருந்த தனது வீட்டில் செப்டெம்பர் 1752ல் இதை அவர் அமைத்தார். மின்னலைப் பற்றிய பல தவறான செய்திகளுக்கு 'இடிதாங்கி' ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. மின்னலில் உள்ள சக்தி மின்சாரம்தான் என்பதை இது உலகுக்கு உறுதிப்படுத்தியது. இடிதாங்கி அமைத்து, மின்னல்களின் தாக்குதலிலிருந்து கட்டிடங்களைக் காத்துக் கொள்ளலாம் என்பதையும் இது செய்து காட்டியது.

இடியும் மின்னலும் தாங்க முடியாத சேதத்தை மட்டுமே விளைவிக்க வல்லவை என்பதில்லை. மின்னல் தனது வெப்பத்தால் ஆக்ஸிஜனையும் நைட்ரஜனையும் கலக்க வைத்து நைட்ரஜன் ஆக்சைடு கலவையை உருவாக்கி, மழை வாயிலாகப் பூமிக்குத் தருகின்றது. தாவரங்களுக்கு இன்றியமையாத இப்பொருள் மண்ணின் செழுமையை அதிகமாக்குகிறது.

சூரியனின் வெப்பக் கதிர் வீச்சின் தன்மையைக் குறைத்து, உயிர்கள் வாழப் போதுமான கதிர் வீச்சை மட்டுமே உலகுக்கு அளிக்கப் பெரிதும் உதவி வருவது 'ஓசோன்' என்ற வாயு வெளி வட்டம். சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள இந்த வாயு



வெளி வட்டம் இல்லாவிடில் பூமி அழிய வேண்டியதுதான். இந்த ஓசோன் வாயு வட்டத்திற்கு அதிக அளவிலான ஓசோன் வாயுவை மின்னல்கள் உருவாக்கித் தருகின்றன.

மின்னல்கள் நீளமாகத்தான் இருக்கும் என்பதில்லை. உருண்டை வடிவ 'பால் லைட்னிங்' மின்னலும் உண்டு. அதிர்ச்சியால் பிரிக்க முடியாதபடி உருவாகும் மின்சார மொத்தைதான் உருண்டை வடிவ மின்னல் என்கிறார். சோவியத் விஞ்ஞானி அலெக்சாந்தர் காசோன். இதை யாரும் மறுக்கவில்லை.

உருண்டை வடிவ மின்னலான 'பால் லைட்னிங்' குக்கு, நீளவாட்ட மின்னலுக்கான எல்லா நாச குணங்களும் உண்டு. இது வீட்டில், தெருவில், வான்வெளியில் என்று எங்கும் தோன்றலாம். 'உஸ்' என்ற சத்தத்துடன், சூழ்நிலையை வெப்பமாக்கியபடி, எதிர்ப்பட்டவைகளைச் சாம்பலாக்கியபடி ஒளி சிந்தி இது நகரும்.

நமது நாட்டில் உருண்டை வடிவ மின்னல் அதிசயம்தான். ஆனாலும் 1976 ஆம் ஆண்டில் நல்ல மழைக் காலத்தில், தஞ்சை மாவட்டத்தின் கடற்கரை கிராமம் ஒன்றில் உருண்டை வடிவ மின்னல் ஒன்று தோன்றியது. அந்த அடாத அடை மழையிலும் கூட, ஒரு வீட்டுத் திண்ணையில் சிலர் சீட்டாடிக் கொண்டிருந்தனர். 'உஸ்' ஓசையோடு சிறிய கால் பந்தின் அளவில் ஒளி உருண்டை ஒன்று வெப்பத்தையும் ஒளியையும் கக்கியபடி தெருவுக்குள் நுழைந்து, சீட்டாட்டக் கூட்டத்தை நெருங்கியது. அவர்கள் தலைக்கு மேல் பறந்தது! அவர்கள் கையிலிருந்த சீட்டுகள், உடுத்தியிருந்த உடை, ஒருவர் போட்டிருந்த காதுக் கடுக்கன் எல்லாம் கருகின! அவர்கள் உடலெங்கும் தீக் காயங்கள்!

திறந்திருந்த வாசல் கதவின் வழியாக உள்ளே வராமல், மூடியிருந்த ஜன்னல் வழியாகப் பந்து பாய்ந்து மிதந்தது. ஜன்னலின் கம்பிகளை உருக்கி மரச் சட்டங்களைக் கருக்கி உள்ளே வந்தது! வீட்டைத் தாங்கிய மரக் கம்பங்கள், துணி உலர்ந்து கொண்டிருந்த மூங்கில் கொடிகள் எல்லாம் கருகி வீடு தீப் பற்றிக் கொண்டது. கடைசியில் கிணற்றடியில் இருந்த கருங்கல்லால் ஆன, துணி துவைக்கும் கல்லில் மோதிச் சிதறித் தனது முடிவைத் தேடிக் கொண்டது அந்த உருண்டை வடிவ மின்னல்.

மின்னலடிக்கும் வெண்மை என்று ஈடில்லா வெண்மைக்கு மின்னலை உதாரணம் கூறுகிறோமே. இதை முற்றிலுமாக ஏற்க முடியாது. காரணம், கறுப்பு மின்னல்களும் உண்டு! சாதாரண மின்னல்களை விட இது அதிக ஒளியும் வெப்பமும் கொண்டது. புகைப்படக் காமிராக்களில் உள்ள இரசாயனப் பூச்சை இது உருக்கி, செயலிழக்க வைக்கிறது. அதனால் இது புகைப்படங்களில் கறுப்பு மின்னலாக விழுகின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

1986 ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேசத்தின் துர்க் மாவட்டத்தின் காப்பு கிராமத்தை ஒன்றின் பின் ஒன்றாக மூன்று மின்னல்கள் தாக்கின. ஏழு பேருக்குக் காயம். இருவர் உயிரிழந்தனர். பிறந்தது முதலே பேசும் திறனை இழந்திருந்த 12 வயதுச் சிறுவனுக்குப் பேசும் திறமை வந்திருக்கிறது! மின்னலுக்கு இப்படி ஒரு சக்தி உள்ளதா என்பதை யாராலும் விளக்க முடியவில்லை!

மின்னல் கரங்கள் பூமியை நோக்கிப் பாய்வது போல், மேகத்திலிருந்து மேல் நோக்கியும் சிதறிப் பாயும் வாய்ப்பு இருக்கிறது என்கிறார்கள். அவற்றின் விளைவுகள் என்ன என்பதை வருங்காலம்தான் விளக்க முடியும்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—

In a class of its own


Exclusive pencils for one and all,



LION PREMIER® HB PENCILS


Sleek, Elegant, meant for executives and others, who like style A consistent dark tone for effortless writing - micronized lead for unbreakable points are what adds to its superiority.





LION PINKY® PENCILS


Lion 'PINKY' Pencils Pretty Perfect, Ideal for children because of its pretty designs & colours. Strongly bonded lead for unbreakable points and super smooth writing add to its attraction.





LION Geematic® DRAWING PENCILS

Lion Geematic Drawing Pencils. A unit for all Professionals like artists, architects, designers & engineers. Give expertise an edge. Available in 14 grades from H to 6H and B to 6B HB and F



LION PENCILS LTD
95, Parijat, Marine Drive
BOMBAY 400 002

National-356


REGISTERED NO. TN MS (S) 281.
Registered as a Newspaper in Srilanka
MAGGI CLUBBERS FUN LOVERS
MAGGI CLUB
லாஸ் ஆஃப் தி ஜங்கிள் கேம்
ஸ்நாப்
ஸஃபாரி கேம்
மேகி கிளப்: வாருங்கள்,
வனவிலங்குகளுடன்
விளையாட!
உங்கள் பரிசுகளைப் பெறுங்கள். இலவசம்!
இந்த மேகி நூடில்ஸ் காலி பேக்குகளிலிருந்து அதன் முன்பக்கத்தில்
உள்ள இந்த 2-minute முத்திரையை வெட்டியெடுத்து எங்களுக்கு
அனுப்புங்கள். நீங்கள் விரும்பும் இலவசப் பரிசையும் குறிப்பிட்டு
எழுதுங்கள். ஒவ்வொரு 5 முத்திரைகளுக்கும் ஒரு இலவசப் பரிசைப்
பெற முடியும். ஆறு முதல் எட்டு வாரங்களில் மேகி கிளப்பில்
இருந்து நூதனமிக்கும் பரிசுகள் உங்களுக்கு
அனுப்பிவைக்கப்படும்!
மறவாதீர்:
நீங்கள் மேகி கிளப் உறுப்பினராக இல்லையென்றால்,
எங்களுக்கு எழுதும்போது உங்கள் பெயர்,
விலாசத்தையும் எழுதி, உங்களுக்கு விருப்பமான
பரிசையும் குறிப்பிட்டு எழுதுங்கள். நீங்கள்
மேகி கிளப் உறுப்பினராக இருந்தால்,
உறுப்பினர் எண்ணையும் குறிப்பிட்டு
எழுதுங்கள்.
டிஸ்னி டுடே காமிக்
Disney
ஃபாரஸ்ட் ஃபேசஸ் கேப்
மற்றும் மாஸ்க் செட்
ஜங்கிள் ஸ்டென்ஸில் செ
MAGGI
2-minute noodles
FAST TO COOK! GOOD TO EAT!
எங்கள் விலாசம்: மேகி கிளப்
தபால் பெட்டி எண்: 5788
புது தில்லி-110055
மேலும்: இதுவரை "டிராவல் இந்தியா கேம்" ஐப் பெற்றுக்
கொள்ளவில்லை என்றால், இப்போது பெற்றுக் கொள்ளுங்கள்.